

# காஞ்சி மணிமொழியார்

## மணிவிழா மலர்.

# காஞ்சி மணிமொழியார்

## மணிவிழா மலர்

★

17-5-1960

★

காஞ்சி மணிமொழியார் மணிவிழாக் குழு

83, தையப்ப முதலித் தெரு

சென்னை-1.

விலை ரூபா 1.

# முன்னுரை

தென்னகத்தின் முன்னேற்றத்திற்காகத் தன்னிகரற்ற பணியாற்றியுள்ள அறிஞர் பெருமகனுர் — செந்தமிழர் போற்றும் சிந்தனைச் செல்வர்—நாடு வாழத் தான் வாழும் தியாக சீலர்—காஞ்சி மணிமொழியார் அவர்களுடைய மணி விழாவைக் கொண்டாடும் நற்பேறும், மணி விழாவின் சார்பில் இந்த அரிய மலரை வெளியிடும் வாய்ப்பும் எங்கட்குக் கிடைத்தது குறித்து நாங்கள் பெருமகிழ்ச்சி அடைகின்றோம். மணிவிழாச் செலவுக்காக நன்கொடை அளித்த நண்பர்கள், விழாவிற் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றும் அறிஞர் பெருமக்கள், மலரில் வெளியிடுவதற்காக மணிமொழியார்பற்றிய தங்கள் கருத்துரைகளை அன்புடன் தந்துதவிய நல்லறிவாளர்கள், மணிமொழியார் அவர்களுடைய வாழ்க்கை வரலாற்றைச் சுவைமிக்க நடையில் எழுதித் தந்துள்ள சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினர் நண்பர் மா. சு. சம்பந்தன், மணிவிழாவின் வெற்றிக்காகவும், மலர் வெளியீட்டுக்காகவும் பலவகை உதவிகள் புரிந்துள்ள அன்பர்கள் ஆகிய அனைவருக்கும் எங்கள் இதயங்கனிந்த நன்றி உரியதாகுக.

இந்த மலர் அச்சிடுவதற்குத் தேவைப்பட்ட தாள் முழுவதையும் நன்கொடையாக அளித்ததோடன்றி, இந்த மலரைத் தம் அச்சுக்கூடத்தில் அழகிய முறையில் இலவசமாக அச்சிட்டும் தந்துதவிய அறப்பெருந் திருவினர்— "ஆரம்பக்கல்வி" ஆசிரியர்—திருவாளர் பி. வீரராகவன் அவர்கட்கு எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

**மணிவிழாக் குழுவினர்.**

# காஞ்சி மணிமொழியார்
# மணிவிழாக் குழு

---

### காப்பாளர்கள்

அறிஞர் அண்ணாதுரை
திரு. எம். ஜி. இராமச்சந்திரன்
திரு. கே. ஆர் இராமசாமி
திரு. எஸ். எஸ். இராசேந்திரன்
திரு. டி. வி. நாராயணசாமி
திரு. டி. சண்முகம்
திரு. ஏ. கே. வேலன்

### தலைவர்

பேராசிரியர் மயிலை சிவமுத்து

### செயலாளர்

திரு. ஏ. ஆர். சேஷாசலம்

### துணைச் செயலாளர்கள்

திரு. வி. ஏ. பாலகிருட்டினன்
திரு. வி. இளமாறன்

### பொருளாளர்

திரு. பி. வீரராகவன்

### மலர் வெளியீட்டுக் குழு

திரு. சீனி வேங்கடசாமி
திரு. தணிகை உலகநாதன்
திரு. சிறுவை மோகனசுந்தரம்
திரு. ஊ. ஜயராமன்
திரு. மா. சு. சம்பந்தன்
திரு. சி. ர. பழனியாண்டி

## விளம்பரக் குழு

திரு. வி. சீ. வெற்றிச் செல்வன்
திரு. டி. நெடுமாறன்
திரு. வல்லை பாலசுப்பிரமணியம்

## குழு உறுப்பினர்கள்

திரு. இரா. நெடுஞ்செழியன்
திரு. ஈ. வெ. கி. சம்பத்
திரு. நாரண துரைக்கண்ணன்
திரு. க. அன்பழகன்
திரு. மு. கருணாநிதி
திரு. என். வி. நடராசன்
திரு. கண்ணதாசன்
திரு. காஞ்சி கல்யாணசுந்தரன்
திரு. வா. தி. மாசிலாமணி
திரு. கி. மனோகரன்
திரு. சி. பி. சிற்றரசு
திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி
திரு. கே. ஏ. மதியழகன்
திருமதி சத்தியவாணிமுத்து
திருமதி அலமேலு அப்பாத்துரை
திரு. டி. எஸ். ஸ்ரீபால்
திரு. ஏ. கே. தங்கவேலர்
திரு. கே. சி. நாகலிங்கனார்
திரு. ஞானசுந்தரனார், செய்யாறு
திரு. எம். கோபால் எம். சி.
திரு. இராதாமணாளன்
திரு. வி. சீ. தமிழ்தாசன்
திரு. டி. உலகநாதன்
திரு. தூ. செ. கந்தசாமி, காஞ்சி.

# பாராட்டுரைகள்

# தமிழ் இளைஞர்கட்கு ஓர் எடுத்துக்காட்டு

[பேராசிரியர் க. அன்பழகன் எம்.ஏ., எம்.எல்.ஏ.,]

---

காஞ்சி மணிமொழியார் அவர்களின் மணிவிழாச் செய்தி கேட்டு மகிழ்ந்து வாழ்த்தும் பல்லாயிரம் தமிழ் மக்களுள் நானும் ஒருவன். முப்பதாண்டுகட்கு மேலாகப் பொதுத்தொண்டு ஆற்றியவரும் பல்வேறு வகையாலும் தமிழருக்காகவும் தமிழுக்காகவும் உழைத்தவருமான **தமிழ்த் தொண்டர் காஞ்சி மணிமொழியார்,** மேலும் பல்லாண்டு வாழவேண்டுமென வாழ்த்துவேன் இந்நாள்.

மணிமொழியார் அவர்களைப் பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாகவே நானறிவேன்.பேச்சிலே இனிமையும் இயல்பிலே எளிமையும் கொண்ட அவரிடம் எவரும் அன்பு கொள்வது இயல்பு. குணத்தில் பொறுமையும், நினைப்பில் அடக்கமும் கொண்ட அவரிடம் எவரும் மதிப்பு வைக்கத்தவறார். உள்ளத்தில் ஊக்கமும் செயலில் முயற்சியும் கொண்டவராக விளங்கியமையின் இளைஞரும் அவரைப் பின்பற்றுவது இயல்பாயிற்று. அத்தகு நல்லியல்புகள் கொண்டு, வள்ளுவர் கண்ட வாழ்க்கை நெறியில் தோய்ந்து நின்ற அவரை எவரும் போற்றுமலிரார்.

இளமை முதற்கொண்டே தமிழ்மொழி வளர்ச்சிக்கும் உரிமைக்கும் பணியாற்றியவர் அவர். துவக்கப்பள்ளி ஒன்று நடாத்தியும், தமிழாசிரியர் பணிபுரிந்தும், "செங்குந்தமித்திரன்" மூலம் சமூகத்தொண்டு ஆற்றியும், "போர்வாள்" இதழ்மூலம் திராவிடத்தின் விடுதலைப் போருக்கு எழுச்சி ஊட்டியும் அவர் ஆற்றியுள்ள பணி பெரிதாகும். தமிழ்மக்கள் வாழ்வுக்கும் விடுதலைக்கும் பாடுபடவேண்டும் என்னும்

உறுதியுடன் முப்பதாண்டுகளாகவே அவர் நீதிக்கட்சியின் தொண்டராகவும்—சுயமரியாதை இயக்கத்தின் மேடைப் பேச்சாளராகவும்—இந்தி எதிர்ப்பு இயக்கத்தின் தளபதியாகவும்—திராவிட கழகத்தின் செயலாளராகவும்—திராவிட முன்னேற்றக் கழகத்தின் முன்னணி வீரராகவும் ஆற்றியுள்ள தொண்டும் தியாகமும் போற்றத் தக்கனவாகும்.

அவரது பேச்சும், எழுத்தும், செயலும், நெறியும் தமிழ் இளைஞர்கட்கு ஓர் எடுத்துக்காட்டு. அவரது அரிய நோக்கத்தையும் சிறந்த குறிக்கோளையும் சிறப்பிக்கும் முறையில் அவர் பெற்றெடுத்த பிள்ளைகளும் அந் நெறி நிற்பது எண்ணி இன்புறத்தக்கது ஆகும்.

அவர் முதல் மகன்—என் தோழர் மா. இளஞ்செழியன் எம். ஏ. அவர்கள், கல்வியில் சிறந்து, எழுத்திலும் பேச்சிலும் வளர்ந்து, ஆசிரியராகப் புகழ்பெற்று விளங்குகின்றார். இளைய மகன் திரு.மா. நடராசன், பி. எஸ்ஸி கல்வித் தகுதி பெற்று அலுவலில் சிறந்துள்ளார். இவ்வாறு பிள்ளைகளும் பெருமைபெற்று விளங்கப் பொதுத் தொண்டில் தலை நிமிர்ந்து நிற்கும் மணிமொழியார் அவர்கள், உள்ள நிறைவும், உயர்நோக்க உறுதியும் பெற்றுத் திகழ்தல் இயல்பேயாகும். அவர்களுடைய பொதுத்தொண்டு, வெற்றி பல கண்டு, அவர்களது நூற்றாண்டு விழாவையும் காணும் வாய்ப்பை நாட்டுக்கு அளிக்கவேண்டும் என்று அவருக்கு என்து உளமார்ந்த வாழ்த்துக்களை வழங்குகின்றேன்.

வாழ்க மணிமொழியார்!

வளர்க அவர்தம் தொண்டு!

வழிவழிச் சிறக்க அவர்தம் குடும்பம்!

———

# அந்த நாட்களில் நம் மணிமொழியார்!

[என். வி. நடராசன், துணைப் பொதுச் செயலாளர், திராவிட முன்னேற்றக் கழகம்.]

திராவிட இயக்கத் தலைவர்களில் ஒருவரும், என் கெழுதகை நண்பருமான காஞ்சி மணிமொழியார் அவர்களுக்கு மணிவிழா நடைபெறுவதைக்கண்டு, இயக்கத்தைச் சார்ந்த ஒவ்வொருவரும் தங்களின் குடும்ப நிகழ்ச்சியைப் போன்று மகிழ்ச்சியடைவர் என்பதில் ஐயமில்லை.

நண்பர் மணிமொழியார் அவர்களை 1937-ம் ஆண்டு முதலாக அறிவேன். அவருடன் இயக்க சம்பந்தப்பட்ட முக்கிய நிகழ்ச்சிகளில் கலந்து பணியாற்றியிருக்கிறேன். கலந்து பணியாற்றியிருக்கிறேன் என்பதைவிட அவரது தோழமையால்—உழைப்பால் இயக்கப்பணிகள் பலவற்றில் முக்கிய பொறுப்பேற்று அதனை நிறைவு செய்திருக்கிறேன் என்று கூறுவது பொருத்தமாக இருக்கும். அப்போதெல்லாம் அவரிடம் காணப்பட்ட நற்பண்புகளை என்றும் மறப்பதற்கில்லை. தாம் ஏற்றுக்கொண்ட எந்த ஒரு பொறுப்பானாலும், கண்ணுங் கருத்துமாக நின்று நிறைவேற்றும் ஆற்றல் மிக்கவர்கள் காஞ்சி மணிமொழியார் அவர்கள்.

நம் இயக்கம் இன்று வளர்ந்துள்ள நிலையில் போராட்டங்களானாலும் அல்லது இயக்க வளர்ச்சிக்குரிய திட்டங்களானாலும், அவற்றிற்கெல்லாம் பொதுமக்களின் ஆதரவு பெருந்துணையாய் நிற்கின்றது! ஆதலாலே நமது தொண்டு ஏறத்தாழ இனிதே நிறைவேறுவதில் அவ்வளவாகத் தட்டுத் தடங்கலிருப்பதில்லை. ஆனால் அன்றைய நாட்களில், நாமும் நமது இயக்கமும் எண்ணிக்கையிலும் சக்தியிலும் மிக மிகச் சாதாரண நிலையிலிருந்தோம். அந்நாளில் நமக்கு எதிராக எழுந்த மாற்றாரின் ஏசுதலும் தூற்றுதலும், தாக்குதலும், தூண்டுதலும் சொல்லத்தரமன்று! எத்தனையோ பேர் திராவிட இயக்கத்தவர் என்று சொல்லிக் கொள்வதற்கே அச்ச

மும் அருவெறுப்பும் கொண்டிருந்த அந்நாட்களில், காஞ்சி மணிமொழியார் அவர்கள், தமிழர் மரபிற்கே உரிய வீரத்துடன் ஆற்றிய அருந்தொண்டுகள் இயக்க வரலாற்றில் சிறப்பான இடம் பெறக்கூடியன ஆகும்.

குறிப்பாக 1938-ம் ஆண்டில்—ஆச்சாரியார் ஆட்சியில் கட்டாய இந்தியை எதிர்த்து அறப்போராட்டத்தில் ஈடுபடத் தமிழ் மக்களைத் தட்டி எழுப்பிய மகத்தான பெருமைக்குரியவர்கள், காஞ்சி மணிமொழியார் அவர்கள். அந்நாட்களில், தமிழர் செல்வம் பேராசிரியர் மயிலை சிவமுத்து அவர்களும், காஞ்சி மணிமொழியார் அவர்களும், இந்தி எதிர்ப்பு வாக்கியங்களடங்கிய அட்டைகளை ஏந்திக்கொண்டு, சென்னையில் பத்துப் பன்னிரெண்டு பேர்களுடன் ஊர்வலம் வந்த காட்சி, என் வாழ்நாள்வரை மறக்கமுடியாததாகும். **அந்தச் சிறு துளிதான் இன்று பெருவெள்ளமாக—தி. மு. கழகமாக வளர்ந்திருக்கிறதென்று கூறினால் அது மிகையாகாது.**

காஞ்சி மணிமொழியார் அவர்கள், பார்ப்பனரல்லாதார் இயக்கம், திராவிடர் கழகம் ஆகியவைகளின் வளர்ச்சிக்காகப் பெரும் பங்கு கொண்டு தொண்டாற்றி யிருக்கிறார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகம் அமைவதற்கு முன் நின்றவர்களில் காஞ்சி மணிமொழியார் அவர்கள் குறிப்பிடத்தக்கவராவார்கள். இந்தச் சமயத்தில் ஓர் உண்மையை வெளியிட வேண்டியவனாயிருக்கிறேன். (இவ்விவரம் நம் கழகத் தோழர்களில் பெரும்பாலோருக்கு இதுவரை தெரிந்திருக்கமுடியாதென்றே எண்ணுகின்றேன்.)

மணி அம்மையாரின் திருமணத்திற்குப் பிறகு (1949) அண்ணா அவர்களின் தலைமையில் தனி இயக்கம் துவக்கப்படவேண்டுமென்று அனைவரும் ஓர் முடிவுக்கு வந்தோம். அண்ணா அவர்களை மிகவும் வற்புறுத்தி வேண்டிக் கேட்டுக் கொண்டதற்கிணங்க அவர்களும் இசைவு தந்தார்கள். எனி

னும் அத்திட்டத்தைச் செயற்படுத்தும் கட்டத்தை அண்ணு அவர்கள் ஒத்திப்போட்டுக்கொண்டே வந்தார்கள். இதனுல் முக்கிய தோழர்களிடையே ஏமாற்றமும் சலிப்பும் ஏற்பட்டன. இந்நிலையைத் தவிர்க்கவும், அண்ணு அவர்களைத் தூண்டவும் காஞ்சி மணிமொழியார் அவர்கள் ஓர் தந்திரத்தைக் கையாண்டார்கள்.

அவரும் அருமை நண்பர்கள் கே. கோவிந்தசாமி (முன்னுள் சென்னை மாவட்டத் தி. மு. க. செயலாளர்) ஏ. எஸ். இராமன், (பொதுக் குழு உறுப்பினர்) ஆகியோரும் "திராவிடன்" அலுவலகத்திற்கு வந்து, (நான் அது சமயம் வெளியூர் சென்றிருந்தேன்) அந்தக் கிழமை வெளியீட்டிற்கான கடைசி "பாரம்" அச்சாகப் போகும் சமயத்தில் அதை நிறுத்தி, "தனி இயக்கம் ஆரம்பிக்க அடுத்த வாரம் சென்னையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெறும்" என்பதாக என் பெயரில் ஓர் அறிக்கையைத் "திராவிட"னில் வெளியிடச் செய்துவிட்டுச் சென்றுர்கள்.

இச்செய்தி "திராவிடன்" இதழில் வெளிவரக் கண்ட அண்ணு அவர்கள் என்மேல் கடுங்கோபம் கொண்டார்கள். எனக்கோ விவரம் ஒன்றும் புரியவில்லை. பின்னர் காஞ்சி மணிமொழியார் அவர்களும் நண்பர் கே. கோவிந்தசாமி அவர்களும் தாங்களே இச்செய்தி வெளியிட்டமைக்கு முழுப் பொறுப்பு என்பதை அண்ணு அவர்களிடம் விளக்கி வருத்தம் தெரிவித்துக்கொண்ட பிறகே அண்ணு அவர்கள் உண்மையை உணர்ந்தார்கள்.

இதில் குறிப்பிடத்தக்கது என்னவெனில், "திராவிடன்" இதழில் அச்செய்தி வெளிவந்தபிறகு அண்ணு அவர்கள் தனி இயக்கம் துவக்கும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டார்கள். இதிலிருந்து நண்பர் காஞ்சி மணிமொழியார் அவர்கள், இயக்க வளர்ச்சியில் கொண்டிருக்கும் அக்கறை எத்தன்மையது என்பது நன்கு விளங்கும்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் துவக்கக் காலத்தி லேயே—அண்ணா அவர்கள் பொதுச் செயலாளராகப் பொறுப் பேற்றிருந்த முதல் கட்டத்திலேயே மணிமொழியார் அவர் கள் மாநில நிதிக் குழுச் செயலாளராகவும், சட்டதிட்டக் குழு ஆலோசகராகவும் பொறுப்பேற்றுப் பணியாற்றி யிருக்கிறார்கள். சென்னையில் நடைபெற்ற தி. மு. க. முதல் மாநில மாநாட்டின் செயலாளராயிருந்தும் சீரிய தொண் டாற்றியிருக்கிறார்கள். குறிப்பாகவும் சிறப்பாகவும் சென்னை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இயக்கத்தின் உயிர் நாடியாயிருந்து பணிபுரிந்து வருகிறார்கள்.

மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை எம்மை மாட்ட நினைக் கும் சிறைச்சாலை என்ற புரட்சிக் கருத்துக்கேற்ப நண்பர் மணிமொழியார் அவர்கள் பலமுறை அரசியலாரின் அடக்கு முறைகளுக்கு ஆளாகிச் சிறைக்கோட்டம் சென்றிருக் கிறார்கள்.

அவைகள் மட்டுமல்லாமல், சிறந்த எழுத்தாளராகவும் தொண்டாற்றி யிருக்கிறார்கள். "போர்வாள்" நமது இயக்க ஏடுகளில் குறிப்பிடத்தக்கதாகும். இயக்கத்தின் துவக்கக் காலத்தில் "போர்வாள்" சிறந்த கேடயமாக விளங்கி வந்தது. திரு. மணிமொழியார் அவர்களும் அவரது அருமை மகனார் மா. இளஞ்செழியன் எம். ஏ. அவர்களும் "போர்வாள்" மூலம் வழங்கியுள்ள கருத்துக் குவியல்கள், தமிழகத்திற்கு என்றும் பயன்படக் கூடியன வாகும்.

ஆக்கப் பணிபுரிவதில் மணிமொழியார் அவர்களுக்கு தனித்திறமையுண்டு. தி. மு. கழகக் கிளைகளின் விவரங் கள், குறிப்புகள், சொற்பொழிவாளர்களின் முகவரி போன்ற தொகுப்புகளை உருவாக்கி, "திராவிடர் நாட் குறிப்பு" என்னும் பெயரால் ஆண்டுதோறும் "டைரி"யை அளித்து வருவதிலிருந்தே அவருக்குள்ள ஆக்கப்பணியின் திறமையை எளிதில் அறியலாம்.

இதுபோது சென்னை மாநகராட்சி மன்றத்தின் பொறுப்பினைக் கழகத் தோழர்கள் ஏற்கும் வாய்ப்பு கிடைத்துள்ளதென்றால் அதற்குக் காஞ்சி மணிமொழியார் அவர்களின் அருந்தொண்டும் ஒரு முக்கிய காரணமாகும். இது போன்ற நிகழ்ச்சிகள் பற்பல. அவை அத்தனையையும் இங்கே விவரிப்பதென்றால் இந்த ஏடு இடம் கொள்ளாது!

இவ்வகை ஆற்றலும் நற்பண்பும் மிக்க மணிமொழியார் அவர்களுக்கு மணிவிழா நடத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ள அனைவரையும் பாராட்டுகின்றேன். அருமைத் தோழர் காஞ்சி மணிமொழியார் அவர்கள் நீடூழி வாழவும், அவரது அறிவாற்றல் நாட்டுக்குப் பெரிதும் பயன்படவும் வேண்டுமென்று மனமார ஆசைப்படுகின்றேன். வாழ்க மணிமொழியார்! வெல்க அவர்தம் தொண்டு!

# மணிமொழியார், தமிழகத்தின் அணிகலனர்

[பேராசிரியர் சி. இலக்குவனார் எம். ஏ., எம். ஓ. எல்.
தமிழ்த்துறைத் தலைவர், தியாகராசர் கல்லூரி,
மதுரை.]

---

தமிழகம், உலக நாடுகளின் தலைமணியாக விளங்குவதற்குரியது; வரலாற்றுக்காலத்திற்கு முன்பே பலவகையாலும் சிறப்புற்று ஓங்கி இருந்தது; மொழியாலும் பண்பாட்டாலும் நாகரிகத்தாலும் தனக்கு நிகர் தானேயாய் இலங்கியது; வேற்றவர் வருகையால் தன்னிலையில் தாழ்ந்தது; மொழி முதன்மையிடத்தை இழந்தது; பண்பாடு அழிவுற்றது; நாகரிகம் மாறுபட்டது; 'தமிழ்நாடு' என ஒன்று என்றும் இருந்ததில்லை என்று கூறும் அளவுக்கு நிலைமை

வந்து விட்டது. அரசியல், பொருளியல், மொழியியல், வாழ்வியல் அனைத்திலுமே தமிழர்கள் அடிமைகளாய் வாழ்ந்தனர்.

தமிழகத்தில் மறுமலர்ச்சி இயக்கம் உருவாகியது. தமிழகத்தின் பண்டைப் பெருநிலையை அடையவேண்டும் என்ற ஆர்வம் காற்றோடு பொருந்திய அனல்போல் எழுந்தது. பெரியார்கள் பலர் தோன்றினர்; இயக்கங்கள் சில கண்டனர். "தமிழ்நாடு தமிழர்க்கே" என்ற முழக்கம் எங்கும் ஒலிக்கத் தொடங்கியது. "தமிழுக்கே முதன்மை; தமிழர்க்கே இடம்" என்று கூறத்தொடங்கினர். மொழித் துறையில் மறைமலை அடிகளும், வாழ்வியல் துறையில் பெரியார் இராமசாமி அவர்களும், அரசியல் துறையில் நீதிக் கட்சியும் ஆற்றிய தொண்டுகள் அளப்பில. தனித் தமிழ் இயக்கமும், தன்மதிப்பியக்கமும் நீதிக்கட்சியும் தமிழக வரலாற்றின் திருப்புமுனைகள். நாட்டுப்பற்றும் மொழிப்பற்றும் மக்கட் பற்றும் கொண்ட தமிழர்கள் தமிழக விடுதலைப் படையில் பெருமிதத்துடன் சேர்ந்தனர். அவர்களுள் ஒருவரே நம் மணிமொழியார்.

மணிமொழியார் முத்துறையிலும் பங்கு கொண்டுள்ளார். எத்துறையிலும் தமிழர் வெற்றி பெற ஒல்லும் வகையால் உழைத்தார். எழுத்தாளராக, இன்சொல் ஆசிரியராக, சொற்பொழிவாளராக, தொண்டராக, தொண்டர் படைத் தலைவராக, மாநாட்டின் செயலாளராக, மதிப்புறும் தலைவராகப் பணி பல புரிந்தார். அவருடைய அஞ்சா நெஞ்சமும், அயர்விலாத் தொண்டும் எவரையும் அவர்பால் ஈர்த்தன. 'போர்வாள்' என்ற அவர் இதழின் பெயரே அவர் போர்க் குணத்தை வெளிப்படுத்தும். "மாங்குயில் கூவிடும் பூஞ் சோலை, நம்மை மாட்ட நினைக்கும் சிறைச்சாலை" என்று எண்ணினர்; நான்கு முறை சிறை சென்றார். இடும்பைக்கே கொள்கலமாக இருந்தாலும் ஏற்ற தொண்டை இனிதே முடிக்கும் ஆற்றல் பெற்றவர். உழைப்பாலும், உயர் பண்

பாலும், ஓயாப் போராலும், தமிழக உயர்வுக்குத் தொண்டாற்றிய மணிமொழியார்க்குத் தமிழக மணி என்ற பட்டம் சாலப் பொருந்தும். தமிழக மணியாம் அவர் தமிழகத்தின் பெருமை புகலும் அணிகலனாய் இன்று உள்ளார்; என்றும் இருப்பார்.

அறுபதாம் ஆண்டை அடைந்தாலும் இருபதாம் ஆண்டு இளைஞன் போல் என்றும் வாழ்வாராக. வாழ்க மணிமொழியார்.

வாழ்க பல்லாண்டு. வளர்க அவர் தொண்டு.

---

## மணிவிழாச் செல்வர் மணிமொழியார்!

**[மன்றக் கவிஞர் தணிகை உலகநாதன்.]**

---

தேனென்றும் கனியென்றும் தமிழ்மொழியைச்
செப்புகின்றோம் இந்த நாளில்;
ஏனென்று கேட்பவர்கள் இல்லாத
காலமுதல் இனிய வாழ்வின்
ஊனாகி உயிராகத் தமிழ்வளர்க்கும்
உத்தமனும் உயர்ந்த நல்ல
மானமிகு தமிழ்ஏறு **மணிமொழியார்**
மறத்தமிழன் வாழ்க! வாழ்க! 1

பேச்சாலும் எழுத்தாலும் பொருளாலும்
தமிழர்குலப் பெருமை யோங்க
மூச்சாலும் முத்தமிழின் முன்னேற்றப்
பணிகளிலே முனைந்து நின்றான்.

பூச்சிகளாய் வாழ்ந்திட்ட இளைஞரிடைப்
புத்துணர்ச்சி புகுத்தி வைத்தான் ;
ஆச்சென்றால் அரியபெரும் செயலினையும்
அரைநொடியில் ஆக்கி வென்றான். 2

சிங்கத்தின் முழக்கமிடும் தமிழ்க்குரலோன் ;
சிந்தனையின் சிற்பி ; அன்பு
பொங்கிடுநல் லுள்ளத்தான் ; மலர்கின்ற
தாமரையின் தோற்றம் வாய்ந்தான் ;
கங்குல்பகல் வெயில்பனியைக் கருதாமல்
தமிழுக்குத் தொண்டு செய்யும்
எங்களருந் தவப்பேறே ! எறும்பைப்போல்
உழைப்பிலுயர் ஏந்தால் ! வாழ்க ! 3

**எட்டடிதாய்ப் புலிபாயின் பத்தடிபா**
**யும் "குட்டிப் புலிதான்"** என்பர்
அட்டியிலை அம்மொழிபோல் அறிவறிந்த
**இளஞ்செழியன்** முதலா மைந்தர்
கட்டிவெல்லத் தமிழ்காக்கும் காளைகளைப்
பெற்றெடுத்த பெருமை மிக்காய் !
மட்டில்லா மகிழ்ச்சியுடன் வாழ்த்துகின்றோம்
**மணிமொழியே** வாழ்க ! வாழ்க ! 4

நாட்டுமொழி நந்தமிழ்க்கு நலிவதனை
நாடுபவர் நண்பரேனும்
தாட்டிகமாய் எதிர்த்தவர்தம் முயற்சியினைத்
தாக்கிடுவாய் ! தமிழகத்தில்
கூட்டங்கள் கழகங்கள் பலகூட்டிக்
குறைநீக்கி நலம்விளைத்தாய்
மாட்சிமிகு **மணிமொழியே** ! மாநிலத்திற்
பல்லாண்டு மகிழ்ந்து வாழ்க ! 5

# தமிழ் வளர்த்த செம்மல்

**[சு. வழித்துணைராமன்]**

---

முன்னேற்றக் கழகத்துத் தலைவர் தம்முள்
முன்னேற்றம் கண்டுள்ள முதியோர் நாட்டின்
தன்னேற்றம் தம்மேற்றம் என்று எண்ணி
தளரர்து இளமைமுதல் இன்று மட்டும்
நன்றாக உழைத்திட்ட காஞ்சி வாசி
நல்லதிரு மணிமொழியார் வாழ்க என்றே
ஒன்றாகத் தமிழரெல்லாம் வாழ்த்த இன்றும்
ஓங்குபுகழ் பெற்றதமிழ் அறிஞர் வாழ்க ! 1


அடிமைசெய இந்நாட்டில் நுழைந்த இந்தி
அடியோடு ஓடிவிடப் படைதிரட்டி
மடிந்தும்விடச் செய்திட்ட மணிகள் பல்லோர்
மத்தியிலே இவர்முதல்வர் அந்த நாளில்
படிந்திருந்த பழைமையினை வெட்டி வீழ்த்த
பத்திரிகைப் போர்வாளை ஏந்தி நின்றார்
விடிந்ததிருள் அறியாமை அதனால் என்றால்
வீணில்லை அவ்வார்த்தை உண்மை உண்மை !! 2

கச்சியப்பன் என்றாலே இவர்தான் முன்பு
கடுஞ்சிறைக்கு நூறுமுறை சென்றதாலே
பச்சையப்பன் உயர்பள்ளிதன்னிற் சேவை
பண்டையிலே செய்திட்ட பெரியார் மக்கள்
இச்சைஎது எனக்கண்டு குறள் பரப்ப
இனியதிரு வள்ளுவமா நாடு கூட்டி
கச்சைகட்டித் தமிழ் வளர்த்த செம்மல் எங்கள்
காஞ்சிமணி மொழியார்பல் லாண்டு வாழ்க !!! 3

---



1960 - ல்
மணி மொழியார்



1927-ல் காஞ்சீபுரத்தில் தமிழாசிரியராக
இருந்தபோது மணிமொழியார்

# தூய்மை நிறைந்த நெஞ்சினர்

[அ. மு. பரமசிவானந்தம் எம். ஏ., எம். லிட்.
பேராசிரியர்: பச்சையப்பன் கல்லூரி,
சென்னை.]

---

திரு. காஞ்சி மணிமொழியார் அவர்களை நான் எனது மாணவப் பருவம் தொடங்கி அறிவேன். வாலாஜாபாத் இந்துமத பாடசாலையில் அவர் ஆசிரியராக இருந்தபோது அவர் எனக்கு அறிமுகமானார். அந்தநாள் தொட்டு இன்று வரை அவர்கள், மொழிக்கும் நாட்டுக்கும் ஆற்றிவரும் தொண்டுகள் அளப்பிலவாகும். இளமையிலேயும் பிற்காலத்தி லேயும் அவர்கள், கொள்வோர் கொள்வகை அறிந்து, கொண்ட கருத்தை எடுத்து விளக்கும் ஆற்றலை வியவாதார் இல்லை. முகத்தில் புன்சிரிப்பும், உள்ளத்தில் திண்ணிய உரமும், நினைவில் தமிழும் கொண்ட மணிமொழியார், தம் நாட்டுமக்கள் வாழ்வே தம் வாழ்வாகக்கொண்டு ஆற்றிய பணிகளிலெல்லாம் அயராது உழைத்தவர். சோர்வு அறியா உள்ளத்தராய் - தூய்மை நிறைந்த நெஞ்சினராய் - உற்று ரையும் மற்றுரையும் ஏற்று உபசரிக்கும் பண்பினராய் - தமி ழன் வாழ்வுக்கு எடுத்துக்காட்டாய் விளங்குபவர் நம் மணி மொழியாராவர். தமிழாசிரியராக இருந்த காலத்திலும், பின் "போர்வாள்" இதழாசிரியராக இருந்த காலத்தும் அவர் தமிழ் மாணவரிடையும் தமிழரிடையும் தூவிய நல் விதைகள் முளைத்து வளர்ந்து காய்த்துப் பழம் தரும் நிலையை இன்று நாட்டில் காணமுடிகின்றது. அவர் மொழிக்காகப் பலமுறை சிறைசென்றதையும் நாடு மறக்கமுடியாது. எழுத் தில் மட்டுமன்றிப் பேச்சிலும் அவர் சிறந்து விளங்குகிறார் என்பது நாடறிந்த உண்மை.

இவ்வாறு எழுத்தாலும் பேச்சாலும், உளத்தாலும் ஊரத்தாலும், செயலாலும் பண்பாட்டாலும் தமிழராகவே-தமிழருக்காகவே-வாழ்ந்த காஞ்சி மணிமொழியார்தம் மணி விழா நடைபெறுவதை அறிந்து மிக மகிழ்கின்றேன். அவர் தம் மணிவிழா சிறக்கவும் அவர்கள் இன்னும் பல்லாண்டு வாழ்ந்து பாரில் ஓங்கவும் வாழ்த்துகின்றேன். வாழ்க மணி மொழியார்! வளர்க அவர்தம் பணிகள்!

## முதன்மை சான்ற தமிழ் வீரர்!

**[புலவர் முருகவேள் எம். ஏ., எம். ஓ. எல்.]**

---

நல்ல தமிழும் தமிழ்நாடும்
நன்கு பெரிதும் முன்னேற
ஒல்லும் வகையால் எல்லாமும்
உவந்து நாற்பான் ஆண்டுகளாய்
அல்லும் பகலும் கருதாமல்
அயரா துழைக்கும் பெருந்தகையார்,
மல்லற் காஞ்சி மணிமொழியார்!
வாழ்க அவர்தாம் நீடூழி! 1

அரிய காஞ்சி மணிமொழியார்
அவர்கள் தமை, என் இளமைமுதல்
தெரியப் பெறுவேன்! செங்குந்தர்
குலத்தின் சிறந்த தலைவரெனப்
பெரிதும் பிறங்கி அவர்செய்த
பெருந்தொண் டினைத்தென் றளப்பரிதாம்!
உரிய முறையில் அவர்தம்மை
உவந்து போற்றல் நம்கடமை! 2

இளமை முதலே தமிழுணர்ச்சி
எய்தி, நிறுவம் பலதோற்றி,

வளமை பெருகும் நல்லெழுத்தால்,
வன்மை மிகுதம் சொற்பொழிவால்,
களைவ களைந்தே, இனவுணர்ச்சி
கலிப்ப மக்கட் பணிபுரியும்
அளவில் சிறப்பின் மணிமொழியார்
அறுபான் ஆண்டு விழாப்பொலிக ! 3

'இந்தி மொழிதான் தென்னாட்டில்
எவ்வா றேனும் புகுந்துநின்றால்
நந்தம் அருமைத் தமிழ்மொழிதான்
நலிதல் திண்ணம்' எனப்**போர்வாள்**
முந்த எடுத்துப் பெரிதெதிர்த்த
முதன்மை சான்ற **தமிழ்வீரர்**
எந்தம் காஞ்சி மணிமொழியார்
இனிதே வாழி பல்லூழி ! 4

அருமை மிக்க திருப்புலிசை
அடிகள் **ஞானியார்,** ஆன்ற
பெருமை பெற்ற **மறைமலைநல்**
**அடிகள்** முதலாம் பெரியரெலாம்
உரிமை யுணர்வால் உவந்துகலந்
தொன்றி இந்தி **எதிர்ப்புறுற்ற**
ஒருமை செய்த மணிமொழியார்
உயர்ந்த தொண்டின் திறம்பெரிதே ! 5

இனிய நல்ல **திருக்குறட்சீர்**
மக்கள் எல்லாம் இனிதுணர
முனிவர் எனலாம் **திரு. வி. க.**
முதலாம் பெரியோர் கலந்துகொள
நனிநன் றுயர்ந்த மாநாடு
நலக்கக் கூட்டிப் பணிபுரிந்த
துனியில் தோன்றல் மணிமொழியார்
தொண்டின் சிறப்பை என்சொல்கேம் ? 6

சின்னஞ் சிறிய வயதினன்யான் !
எங்கள் சிற்றூர்ச் செங்குந்தர்
முன்னம் தமக்குள் பெரும்பிணக்கு
மூண்டு நின்றார் ! மற்றதனை
மன்னும் காஞ்சி மணிமொழியார்
வந்து நலமே தீர்த்துவைத்தார் !
இன்னும் அதைஎம் ஊர்புகழும் !
எனக்கும் நினைவஃ தினிதுளதால் ! 7

அறிவ அறிந்த பெருஞ்சிறப்பின்
அருமைப் பண்பின் இளஞ்செழியன்
செறிவு மிகவா லாசாபாத்
திகழும் இந்து மதப்பள்ளி,
நெறியின் என்னோ டுடன்பயின்ற
நேயம் மிகுந்த உயிர்நண்பர் !
பொறியிற் பொலியும் அவர்திறன், அப்
பொழுதே சிறந்து பொலிந்ததால் ! 8

நலமே சிறந்த குடிப்பிறப்பு,
நல்ல கல்வி, தொண்டுணர்ச்சி,
வலமே அமைந்த மனைவாழ்க்கை,
மாண்பின் மிக்க மகப்பேறு,
குலமே ஓங்கப் பெரிதுழைக்கும்
குறிக்கோள், நாடு மொழிப்பற்று,
கலைமே வுளம்கொள் மணிமொழியார்
கன்னித் தமிழ்போல் நனிவாழ்க ! 9

"நின்னாள் திங்கள் எனநீள்க !
நீண்ட திங்கள் யாண்டாக !
பொன்னேர் யாண்டோ ஊழிபல
போலப் பொலிக !" எனவிரும்பி,
முன்னாள் பதிற்றுப் பத்(து)எனும்நூல்
மொழிந்த வாழ்த்தே மொழிகேன்யான் !
தன்னே ரில்லாத் தமிழ்மொழிபோல்
தழைத்து மகிழ்ந்து வாழியவே ! 10

# அரும்பெரும் பணிபுரிந்த பொதுநலப் பெரியார்

(வழக்கறிஞர் தில்லைவில்லாளன் எம். ஏ., பி. எல்).

காஞ்சி மணிமொழியாரை எனது சிறுவயதிலிருந்து அறியும் வாய்ப்புப் பெற்றவன். அவரோடு பழகும் வாய்ப்பும் பெற்றவன், ஆகவே அன்னாரின் அறுபதாவது ஆண்டு நிறைவு விழாவில் அவர் பெருமை பேசி மகிழும் உரிமை பெற்றவன். இந்த வாய்ப்புக் கிடைத்தமைக்கு மகிழ்கிறேன்.

காஞ்சி மணிமொழியாரை, ஏடுகள் மூலம் அறிந்தேன் முதலில். அதுவும், முதல் இந்தி எதிர்ப்புப் போர் நடந்த நேரத்தில் நான் சிறுவன். அப்போது இவர் பெயர்கேட்டு, இவரைக் காணும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்ள விரும்பினேன்.

அவரோடு என் தொடர்பு, ஓர் எழுத்தாளனுக்கும், ஆசிரியருக்கும் ஏற்படும் தொடர்புபோன்று இருந்து வந்தது. 'போர்வாள்' துவங்கிய நேரத்தில் கண்டேன்; வியந்தேன். அவரது அமைதியான முகமும், அடக்கமான சுபாவமும், சாதாரண உருவமும் என்னை, 'இவரா, இத்தகைய போர் வெறியூட்டும் 'போர்வாள்' இதழை நடத்துகிறார்' என்று எண்ணி மலைக்க வைத்தன. இவர் மகன் இளஞ்செழியனோ, இவரைவிட அடக்கமானவர். ஆனால் அவர் பேனா தீட்டும் ஓவியங்களோ, புரட்சிப் படைப்புக்கள். இத்தகைய சாந்த உருவமும், ஆனால் தணியாத தீ எரியும் இதயமும் கொண்டோரே, அரசியலில் எதையும் சாதிக்க வல்லவர் என்பதை யுணர்ந்தேன்.

அவர் திராவிட முன்னேற்றக் கழகத்தோடு நேரடித் தொடர்பு கொண்டு பணியாற்றத் தொடங்கிய பிறகே, எனக்கு அவர் திறன் முழுதும் அறியும் வாய்ப்பு ஏற்பட்டது

நான் அப்பொழுது தி. மு. கழகத்தின் இணையற்ற தலைவர் அறிஞர் அண்ணாவின் உடனிருந்து கழகப் பணியாற்றி வந்தேன். அப்போது மணிமொழியார் அவர்கள் தி. மு. க. தலைமைக் கழக நிதிக் குழுவின் செயலாளராக அங்கம் வகித்தார். தி. மு. க. முதல் மாநில மாநாட்டுச் செயலாளராக இருந்து மாநிலமே கண்டு வியக்கும் வகையில் அம் மாநாட்டை நடத்தி வெற்றி கண்டார்.

இவர் தி. மு. க. வின் முதல் சட்டதிட்டக் குழுவில் அங்கம் வகித்து மிக்க உதவி புரிந்தார். சட்டதிட்டம் உருவானவுடன் அறிஞர் அண்ணாவின் மேற்பார்வையில் நான் அதனைத் தமிழில் வகைப்படுத்தி எழுதினேன். மிகக் குறுகிய காலத்தில் அதனை அச்சிட்டு, ஈரோட்டில் கூடிய பொதுக் குழுவில் வெளியிடப் பேருதவி புரிந்தார்.

இவருடன் சிறையில் வதியும் வாய்ப்பும் கிடைத்தது. 1958 ஜனவரி முதல் வாரத்தில் பண்டித நேருவுக்குக் கறுப்புக்கொடி காட்டிய நேரத்தில் நானும் சென்னைச் சிறையில் இருந்தேன். நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி, எம். ஜி. இராமச்சந்திரன், எஸ். எஸ். இராஜேந்திரன், டி. வி. நாராயணசாமி, சேலம் இராசாராம், கரூர் மாணிக்கம், முல்லைசத்தி, முனுசாமி மற்றும் பலர் 'பி' வகுப்பில் இருந்தோம். ஆனால் இவர் தொண்டர்களோடு தொண்டராய் இருந்து அவர்களுக்கு ஊக்கம் கொடுத்த நிகழ்ச்சி போற்றுதலுக் குரியது.

அத்தகைய அரும்பெரும் பொதுநலப் பெரியாரின் அறுபதாவது ஆண்டு நிறைவு விழாவில் நானும் கலந்து, அவர் நிறை ஆயுள்பெற்று, இன்னும் பல்லாண்டு வாழ்ந்து, நாட்டுக்கும், இனத்திற்கும், மொழிக்கும் நற்றொண்டாற்ற விழைகிறேன்; வாழ்த்துகிறேன்.

---

# செந்தமிழ்த் தொண்டர் மணிமொழியார்

### [ஈழத்தடிகள் பி. ஏ.]

---

**காஞ்சி மணிமொழியார்** என்ற உடனேயே என் கவனம் முழுவதும் 1938க்குச் சென்றுவிடும். காரணம்:—

1938-ல் நான் தனி யொருவனுகக் கருவூரில் இந்தி எதிர்ப் பியக்கத்தைத் தொடங்கிய சமயத்தில், என் தனிமைக்கு இடமளியாது இதோ நாங்கள் இருக்கிறோம் என்று போர்ப்பரணி பாடியவர்களில் முதலிடம் பெற்றவர் எனது மதிப்பிற்குரிய அறிஞர் அண்ணு அவர்களாகும். அதற்கடுத்தபடியாகக் குறிக்கத் தக்கவர்கள், அருணகிரி அடிகளும் சண்முகானந்த அடிகளுமாவர்.

**ஆனுல், சென்னை நகரில் இந்தி எதிர்ப்பியக்கம் வளர்ந்து வலுவடைவதற்குக் காரணமாகவும் முதன்மையாகவும் நின்று பணியாற்றியவர் காஞ்சி மணிமொழியார்தான் என்று கூறினுல், அது மிகைபடக் கூறியதாகாது.**

சென்னையில் முதன் முதல் இந்தி எதிர்ப்புக்கூட்டத்தை நடத்தியவரே இவர்தான்.

சென்னை நகரம் எனக்கு அறிமுகமில்லாத அந்தக் காலத்தில், என்னைத் தன் விருந்தினனுக வைத்து ஆதரித்து அறப்போருக்கு வேண்டிய ஆக்கம் தந்தவர் அவரே.

பின்னர் **சி. டி. நாயகம், திருமதி டாக்டர் தருமாம்பாள், திருமதி மலர்முகத்தம்மாள்** ஆகிய பெரியவர்களின் ஊக்கமும் ஒத்துழைப்பும் கிடைத்து இந்தி எதிர்ப்பு வெற்றி பெற்றது.

எனவே, வரலாற்று நிகழ்ச்சியாகிய இந்தி எதிர்ப்புப் போர் வெற்றிபெறக் காரணமாக இருந்தவர்களில் நமது நன்றிக்கும் அன்புக்கும் உரியவரான காஞ்சி மணிமொழியார் அவர்களும் ஒருவர்—**குறிப்பிடத்தக்கவர்** என்று கூறி, அவர் மேலும் பல்லாண்டுகள் வாழ்ந்து தமிழ் நலம், தமிழர் நலம் பேணவேண்டுமென்று பெரிதும் விரும்பி எனது வாழ்த்துரையை முடித்துக் கொள்கிறேன்.

வளர்க மணிமொழியாரின் தமிழ்த் தொண்டு.

# அரும் பணி புரிந்த அஞ்சாத நெஞ்சினர்

**[செந்தமிழ்ச் செல்வர் பேராசிரியர்-**
**பாலூர் கண்ணப்ப முதலியார் பி. ஓ. எல்.**
*தமிழ்த் துறைத் தலைவர், புதுக் கல்லூரி, சென்னை.*]

---

எனது உழுவல் அன்புடைய கெழுதகை நண்பராம் உயர்திரு. காஞ்சி மணிமொழியார் அவர்களைக் கடந்த இருபத்திரண்டு ஆண்டுகளாக நன்கு அறிவேன். அவருடைய பேரறிவின் திறத்தை அவர் நடாத்திய "போர்வாள்" "செங்குந்தமித்திரன்" ஆகிய இதழ்களின் வாயிலாகவும், தமிழ் மொழி தமிழ்நாடு ஆகியவற்றில் இவருக்கும் இருக்கும் பற்றினை இவர் நடத்திய கூட்டங்களின் மூலமும் ஊர்வலங்களின் மூலமும் கண்ணாரக்கண்டு உணர்ந்திருக்கின்றேன். அவர் நான்கு முறை சிறை சென்றதிலிருந்து தம் நலம் கருதாது தண்டமிழ் ஆக்கத்திற்கு அரும்பாடு படுபவர் என்பதை நாம் நன்கு அறிந்துகொள்ளலாம். அரசாங்கத்தார் போக்கிற்கு எதிரான அறிக்கைகளை அச்சடிக்க அச்சங்கொண்டு ஒரு சில அச்சகங்கள் மறுத்தபோது, இவர் தமது அச்சகத்தில் அவற்றை அஞ்சாது அச்சடித்துத் தந்ததை

அறியும்போது, இவர்தம் அஞ்சாமைப் பண்பைப் பாராட்டாமல் இருக்கமுடியாது.

காஞ்சி மணிமொழியார் சொற்பொழிவாற்றும் திறனும் எழுதும் வன்மையும் பெற்றிருப்பது போல, நடிப்புத்திறனும் பெற்றவர் என்பது மாநாடுகளில் நடத்தப்பட்ட நாடகங்களில் தாமும் நடித்திருப்பது கொண்டு நன்கு தெரியலாம். இன்னோன்ன முறையில் பல்லாற்றானும் திறன்பெற்ற அறிஞர் பெருமகனார்க்கு மணிவிழா நடைபெறுவதை அறிந்து பெரிதும் மகிழ்வுற்றனன்.

மணிவிழா பெறும்பேறு எல்லாருக்கும் வாய்க்காது. தந்நலம் கருதாது உழைத்தவர்கட்கும், வாழ்வாங்கு வாழ்ந்தவர்கட்குமே வாய்க்கப்பெறும் வாய்ப்பாகும். இவ்விரு பண்புகளும் நமது காஞ்சி மணிமொழியார் பெற்றவர் என்பது முன்னே எடுத்துக்காட்டப்பட்ட குறிப்புக்களால் நன்கு உணர்கின்றோம். ஆகவே, மணிவிழாக் கொள்ளும் நமது காஞ்சி மணிமொழியார் தமிழ்மொழியும், தமிழ் நாடும் மேலும் மேலும் முன்னேற்றமுறப் பாடுபட வேண்டி இருத்தலின், இவர்களின் வாழ்நாட்கள் பல்லாண்டுகளாகப் பெருகவும், இவர்களின் நல்லுடல் வளம் அமையப் பெறவும், உள்ளம் உரனுறவும் யான் வழிபடும் இறைவனும் அம்மை அப்பனது அணிமலர் இணைகளை வந்தித்து வாழ்த்தி வணங்குகின்றேன்.

## கன்னித் தமிழ் காத்த மணிமொழியார்

[பேராசிரியர் ஞா. தேவநேயப் பாவாணர்,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம், சிதம்பரம்.]

---

காஞ்சி மறம்பழுத்துக் கன்னித் தமிழ்காக்கக்
காஞ்சி மணிமொழிசோ காத்தாற்குக்—காஞ்சி
மருங்குலாய் காண்டி மணிவிழா வொன்றோ
அருங்குவயி ரங்கதிரி யம்.

# பிறர்க்கு உழைக்கும் பெருநெறியினர்

[மா. கி. தசரதன் எம். ஏ., விரிவுரையாளர்,
பச்சையப்பன் கல்லூரி, காஞ்சீபுரம்.]

---

'தான் உண்டு தன் கடமைகள் உள' என்று வாழும் வாழ்க்கை ஒரு வகை. தான், தன் கடமைகள் இவற்றோடு பிறர், பிறரது இன்ப துன்பங்கள் என்று வாழும் வாழ்க்கை இன்னொரு வகை. இரண்டுமே சிறந்தவைதாம். ஒவ்வொருவரும் தத்தமது வாழ்க்கையை ஒழுங்கு முறைக்கும், கட்டுப்பாட்டிற்கும் உள்ளாக்கிக் கொண்டால், சமுதாயம் தானாகச் சீர்பெற்றுவிடும். தனிமனிதர்களின் கூட்டுவாழ்க்கையே சமுதாயம் அல்லவா? தான் திருந்துவதோடு தன்னைச் சூழ்ந்திருப்பவர்களும் திருந்த வேண்டும் என்று எண்ணுவது, பாடுபடுவது முதலாவனதைவிட மேலானது; சிறப்பானது. 'யான் இன்பம் பெறவேண்டும்' என்று எண்ணுவது நல்லது தான். ஆனால், 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையம்' என்று எண்ணுவது அதைவிட நல்லது. நான் வாழவேண்டும் என்று எண்ணுவது நூற்றுக்கு நாற்பது எண்கள் பெற்றுத் தேர்வில் வெற்றி பெறும் தன்மையது; என்னோடு பிறரும் வாழவேண்டும் என்று கருதி உழைப்பது நூற்றுக்கு எண்பது எண்கள் பெற்றுத் தேர்வு பெறுதலைப் போன்றது. இவை இரண்டுமே வெற்றிகள்தாம். ஆனால் பிறர் வாழ வேண்டும் என்று எண்ணுவது பெரு வெற்றி. அத்தகைய வெற்றி பெற்றவர் காஞ்சி மணிமொழியார்.

துன்பம், தனக்கு வரும்போது ஒவ்வொருவருக்கும் மலைபோல் தெரிகின்றது. பிறர்க்கு வரும்போது கண்ணுக்குப் புலனாவது இல்லை. இது சாதாரணமானவர்களுக்கு. ஆனால் சான்றோர்களுக்குத் தங்கள் துன்பம் தெரிவதற்கு முன் பிறர் துன்பமே தெரிகின்றது. அவர்களால்தான் உலகமே இருக்கிறது என்று புறநானூறு சொல்லுகின்றது.

அப்படிப்பட்ட சான்றோர் பலர் வாழ்ந்தது, வாழ்வது தமிழ்நாடு. பிறர் துன்புறக் கண்டால் துடித்தெழுந்து அதைப் போக்க முயல்வதே தமிழ்ப் பண்பு. அந்தப் பண்பிலே ஊறித் திளைத்த திருவாளர் **காஞ்சி மணிமொழியார்** அவர்களுக்கு மணிவிழா எடுப்பது மாண்புள்ள பணி. பிறர்க்கு உழைக்கும் பெருநெறியினைப் பற்றி வாழ்ந்த அந்தப் பெருமகனைப் புகழ்வது, பாராட்டுவது, அவருக்கு மட்டும் பயன்படுவது ஆகாது. பின்வரும் பெரும் படையினர்க்கு நன்னெறி உணர்த்துவதும் ஆகும்.

வாழ்க மணிமொழியார் புகழும் தொண்டும்!

---

# உறுதி கொண்ட உள்ளத்தார்!

**[வல்லை பாலசுப்பிரமணியம் பி. ஏ.,**

சென்னை அரசாங்கத் தலைமை மொழி பெயர்ப்பாளராயிருந்து ஓய்வு பெற்றவர் — சென்னைப் பல்கலைக் கழக ஆங்கிலத் தமிழ் அகராதி உதவி ஆசிரியர்.]

---

உறுதி கொண்ட உள்ளத்தார் ;
உலைவின் றியற்றும் செயலுடையார் ;
சிறுமைச் செயல்கள் கண்ணுற்றால்
சீறிப்பாயும் சீலத்தார் ;
கறுவு நெஞ்சம் சிறிது மிலார் ;
கன்னித்தமிழின் காப்பாளர் ,
அறுபதாண்டில் இளைஞர் காண் !
அவரே **காஞ்சி - மணிமொழியார்.**

---

# மறுமலர்ச்சி இயக்கம் தந்த மணிமொழியார்.

[ என். வி. என். சோமு ]

---

திராவிடர் இயக்கத்தின் முன்னணி வீரராய்த் திகழ்ந்து வரும் திரு. காஞ்சி மணிமொழியார் அவர்களைப்பற்றி அறியும் வாய்ப்பு எனக்குப் பதினைோண்டுகளுக்கு முன்னர் தான் ஏற்பட்டது.

தாய்க்கழகத்திலிருந்து பிரிந்த திராவிட வீரர்கள் அனைவரும், அறிஞர் அண்ணு அவர்களின் தலைமையில்—திராவிட முன்னேற்றக் கழகம் என்ற அமைப்பின் கீழ்ப் பணியாற்ற அணிவகுத்தபோது திரு. மணிமொழியார் அவர்கள் தி. மு. கழக மத்திய நிதிக்குழுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

தென்னகத்தின் மிகப்பெரும் அரசியல் இயக்கமான தி. மு. கழகத்தின் முதல் நிதிக்குழுச் செயலாளராகத் திரு. மணிமொழியார் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார் என்பதிலிருந்தே இயக்கத்தில் அவருக்கிருந்த மதிப்பையும் செல்வாக்கையும் நன்கறிந்து கொள்ளலாம்.

நானறிந்த வரையில் ஏறத்தாழப் பதினைோண்டுகளாகத் திரு. மணிமொழியார் அவர்கள் தி. மு. கழகத்தின் வளர்ச்சிக்கும் நாட்டு விடுதலைக்கும் அயராது பணியாற்றி இந்நாட்டின் இளைஞர் சமுதாயம் பின்பற்றுகின்ற ஓர் ஒப்பற்ற வழிகாட்டியாகத் திகழ்ந்து வருகிறார்.

தி. மு. கழகத்தின் வளர்ச்சிக்காகவும் அதன் கொள்கைகளைப் பரப்புவதற்காகவும் பட்டி தொட்டிகள்தோறும் சென்று சொற்பொழிவுகள் நடத்திவந்த திரு. மணிமொழி

யார் அவர்கள் எழுத்துத் துறையிலும் தாயக விடுதலைக்குக் குறிப்பிடத்தக்க நற்பணி புரிந்து வந்திருக்கிறார்.

தி. மு. கழகத்தின் ஆரம்ப நாட்களில் எழுத்துத் துறையை வளர்க்கப் போதுமான இதழ்கள் இல்லாதிருந்த நேரம்! அண்ணா அவர்களின் "**திராவிடநாடு**", திரு. மணிமொழியார், அவரது புதல்வர் பேராசிரியர் மா. இளஞ்செழியன் ஆகியோரை ஆசிரியர்களாகக் கொண்டு வெளிவந்த "**போர்வாள்**", எனது தந்தையார் திரு. என். வி. நடராசன் அவர்களை ஆசிரியராகக்கொண்டு வெளிவந்த "**திராவிடன்**" ஆகிய மூன்று இதழ்கள் மட்டுமே, நூற்றுக் கணக்கான தேசீய இதழ்களின் தாக்குதல்களைச் சமாளிக்க வேண்டியிருந்தது. அந்நாட்களில் போர்வாள் இதழும், திராவிடன் இதழும் ஒரே ஆண்டில் (1947) துவக்கப்பட்டு, இயக்கப் பணியில் இரண்டும் இரண்டறக் கலந்து, அறிஞர் அண்ணா அவர்கள் அடிக்கடி அறிவுறுத்தும் குடும்பப் பாசத்தை அடிப்படையாக வைத்துக் குருட்டுத் தேசியத்தையும், வடவர் ஏகாதிபத்தியத்தையும் எதிர்க்கும் இரட்டைக் குழல் துப்பாக்கியாக விளங்கி வந்தன.

பல்கலைக்கழக மாணவர்கள் விரும்புகின்ற மறுமலர்ச்சிக் கருத்துக்களையும்—சீர்திருத்தக் கொள்கைகளையும் அழகு தமிழில் கிழமைதோறும் "போர்வாள்" அளித்து வந்தது. மாற்றாரும் கண்டு மலைக்கும் வண்ணம், போர்வாள் இதழைத் திரு. மணிமொழியார் அவர்கள், "பேராசிரியர்" மா. இளஞ்செழியன் அவர்களுடைய ஒத்துழைப்போடு நடத்திக்காட்டிய ஆற்றல் மிகவும் போற்றற்குரியது.

அதுமட்டுமல்லாமல் சிலபல ஆண்டுகளுக்குப்பிறகு திராவிடரியக்கத்தின் வளர்ச்சியின் காரணமாகத் துவக்கப்பட்ட பல பத்திரிகைகளையும் ஒன்று சேர்த்துத் **திராவிட பத்திரிகாசிரியர்கள் சங்கம்** என்ற ஓர் அமைப்பை ஏற்படுத்தித் திரு. மணிமொழியார் அவர்கள் நமதியக்கப் பத்திரிகைத் துறையின் வளர்ச்சிக்கு மிகவும் பாடுபட்டார்.

பேச்சிலும் எழுத்திலும் வல்லவராய் விளங்கிவந்த திரு. மணிமொழியார் அவர்கள் சிறந்ததொரு செயல்வீரராக நமது இயக்கத் தலைவர்களால் போற்றப்படுகின்றார். இந்தி எதிர்ப்புப் போரில் அவர் ஆற்றிய அரும்பணியும், தி. மு. கழகத்தில் ஈடுபட்டுப் பலப்பல அடக்குமுறைகளைச் சந்தித்த அருஞ்செயல்களும், இயக்கத்தின் மாநாடுகள் பலவற்றை நடாத்திய பாங்கும் ஆன ஒவ்வொரு அரும்பணியும் அவரது அஞ்சாநெஞ்சுக்கும் அருந்திறனுக்கும் சான்றாக நிற்கின்றன.

சமூகப்பணியிலும் திரு. மணிமொழியார் அவர்களின் தொண்டு குறிப்பிடத் தகுந்ததாகும். மறுமலர்ச்சிக் கருத்துக்களை நாடெங்கும் பரப்பிய அறிஞர் அண்ணா அவர்களின் "வழக்கு வாபஸ்" என்ற நாடகத்தில் திரு. மணிமொழியார் அவர்கள், பேராசிரியர் க. அன்பழகன் அவர்களோடும், திரு. என். வி. நடராசன் அவர்களோடும் பங்கேற்று நடித்த தானது இன்றைக்கும் என் மனக்கண்முன் நிற்கிறது.

சமூக, அறிவியக்கப் பணிகளை வளர்ப்பதற்காக இயக்கத் தலைவர்கள் எழுதிய பற்பல நற்கருத்துக்களை நூல் வடிவில் வெளியிட்டுத் தென்னகத்திற்கு அவ்வப்போது அறிவு விருந்து படைத்துவந்துள்ளார்.

தி.மு. கழகம் துவங்கப்பட்ட நாளிலிருந்து தொடர்ந்து பொதுக்குழு உறுப்பினராக இருந்து வருகிறார்.

திரு. மணிமொழியார் அவர்கள் நல்லதோர் பேச்சாளர் - எழுத்தாளர் - சிறந்த செயல் வீரர் - அஞ்சாநெஞ்சினர் - ஆற்றல் மறவர் - மறுமலர்ச்சி இயக்கத்தை வளர்த்த மாவீரர். அவர்தம் நற்பணிகளும கருத்துக்களும், அவருடைய மணிவிழா கொண்டாடப்படும் இந்நேரத்தில் என் போன்ற இளைஞர்களுக்கு வழிகாட்டும் என்ற மகிழ்ச்சி கலந்த நம்பிக்கையோடு அவருக்கு நல்வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

---

## ஆசிரியராய் அமர்ந்து அரும்பணி புரிந்தவர்

[டாக்டர் அ. சிதம்பரநாதன் எம். ஏ., எம். எல். சி

தலைமையாசிரியர், ஆங்கிலத் தமிழ்ச் சொற்களஞ்சியம், சென்னைப் பல்கலைக் கழகம்.]

---

காஞ்சி மணிமொழியார் தமிழாசிரியராகவும் தமிழ்ச் சொற்பொழிவாளராகவும் இருந்து தமிழ் நாட்டிற்குச் சிறந்த நற்றொண்டுகள் ஆற்றியுள்ளவர். தமிழ்மொழியின் ஆக்கத்திற்காகவும் தமிழ் மக்களின் முன்னேற்றத்திற்காகவும் இன்னும் பல அரும்பணிகள் புரிய அவர் நெடுங்காலம் உடலுரத்துடன் வாழவேண்டும் என வாழ்த்துகிறேன்.

## மட்டிலா மகிழ்ச்சிதரும் மணிவிழா

[எம். எஸ். அப்துல்காதர் பி. எஸ். சி.

சென்னை மாநகராட்சி மன்றத் தலைவர்.]

---

"போர்வாள்" ஆசிரியர் உயர்திரு. காஞ்சி மணிமொழியார் அவர்களின் அறுபதாவது ஆண்டு நிறைவு விழாவினைச் சீரும் சிறப்பும் மிகுந்த முறையில் மே திங்கள் தொடக்கத்தில் நடத்துவதற்கான ஏற்பாடுகளை அறிந்து பெருமகிழ்ச்சி கொள்ளுகின்றேன்.

தமிழ் நாட்டிற்கும், தமிழ் மக்களுக்கும் அரும்பெரும் பணி ஆற்றிய அவர்தம் தொண்டுகளை விளக்கிக் காட்ட அறிஞர்பெருமக்களைக் கொண்டு மணிவிழா மலர் வெளிவிடுவது சாலச் சிறந்ததாகும்.

அப் பெருந்தகையாரின் சேவையைப் பாராட்டி, நீடூழி நல்வாழ்வு வாழவேண்டும் என்று வாழ்த்துகின்றேன்.

## சிறந்த பேச்சாளர் — உயர்ந்த செயல்வீரர்

[டாக்டர் சிற்சபை, காஞ்சீபுரம்]

என் அருமைத் தோழர் காஞ்சி மணிமொழியார் அவர்களின் "மணி விழா" நற்செய்தி யறிந்து பெருமகிழ்வு கொள்கிறேன். அவர் ஒரு சிறந்த செயல் வீரர். உறுதியான கொள்கைப் பற்றுடையவர். முப்பது ஆண்டுகட்கு முன்பே அவர்களின் மேடைப் பேச்சு, மிகக் கோழைகளையும் வீரர்களாக்கும் உணர்ச்சி மிக்கதாய் விளங்கியது. 1938ம் ஆண்டு நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் பலரும் வெளிப்படையாகக் கலந்து கொள்ளத் தயக்கங்கொண்டனர். அந்த நேரத்தில் நமது மணி விழாத் தலைவர் அஞ்சா நெஞ்சத்துடன் வீதிகளிலே கம்பீரமான குரலெழுப்பி ஊர் வலங்களுக்குத் தலைமை தாங்கி, மேடைகளிலே வீர முழக்கம் செய்த காட்சிகளை இன்னும் என்னால் மறக்க முடியவில்லை. அவர்கள் இன்னும் பல்லாண்டு உறுதி மிக்க உடல் கலத்துடன் வாழ்ந்து, நாட்டுக்கும் மொழிக்கும் நற்பணி புரிய வேண்டுகின்றேன்.

---


## தமிழுக்குத் தொண்டுசெய்த பெரியார்

[பேராசிரியர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்,

திராவிடமொழி ஆராய்ச்சித் துறைத் தலைவர்,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.]

---

அன்பர் உயர்திரு காஞ்சி மணிமொழியார் மணிவிழா நடப்பது கேட்டுப் பெருமகிழ்வடைகிறேன். தமிழ்க்குத் தொண்டுசெய்த அப் பெரியார் நீடூழி வாழ்ந்து மேலும் தமிழ்க்குச் சிறக்கத் தொண்டு புரிவாராக.



1927-ல் காஞ்சீபுரம் பச்சையப்பன் கிளைப் பள்ளியில்
தமிழாசிரியராக விளங்கிய மணிமொழியார்
(முதலில் அமர்ந்திருப்பவர்)



1929 - ல் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கச் செயலாளராக இருந்த மணிமொழியார்
(முதலில் நிற்பவர்)

# தாயக விடுதலைக்குத் தளராது உழைப்பவர்

[கே. பி. சுந்தரம், ஆசிரியர், "தையற்கலை"]

பிறந்தது அடிமை மண்ணில்! வாழ்வது அடிமை வாழ்வு! வேண்டுவது தாயகத்தின் விடுதலை! அதனைப் பெற்ற பின்னரே எல்லோருக்கும் நல்வாழ்வு உண்டு என்னும் உண்மைகளைத் தெள்ளத் தெளிய உணர்ந்து, பிறர் வாழ்வதற்காகவே தான் வாழ்வது என்ற இலட்சிய அடிப்படையில் இந்தத் தலைமுறையில் தமிழகத்தில் வாழ்பவர்கள் மிகச் சிலர். அந்தச் சிலரில் தலை சிறந்த ஒருவர் காஞ்சி மணிமொழியார். இலட்சியத்தைக் காற்றில் பறக்கவிட்டுக் கூடுவிட்டுக் கூடு பாய்வதால் எளிதிலும் விரைவிலும் பொன்னும் பொருளும் வசதி படைத்த வாழ்வும் பலருக்கும் கிட்டிவரும் இந்தக் காலத்தில், தன்னலம் பேணமல், ஆசாபாசங்களுக்கு இரையாகாமல், ஒரே இயக்கத்தில், ஓராண்டல்ல ஈராண்டல்ல, நாற்பது ஆண்டுகளாக அவர் தொடர்ந்து பணியாற்றி வந்திருப்பது பூரிப்புக்கும் பெருமைக்கும் உரிய செய்திகளாகும். அவரைப்போல் தியாக வாழ்வு வாழ்பவர்கள் வெகு சிலரே உளர். இந்தச் சிலர் பலரானல்தான் நாட்டிற்கு நல்வாழ்வு கிடைக்கமுடியும். யார் யாரோ, எப்படி யெப்படியோ திடீர் திடீரெனத் தலைவர்களாகி விடவேண்டும் என்று அலையும் இந்தக் காலத்தில், என் கடன் பணிசெய்வதே என்று எண்ணி, சாதாரண மக்கள் தொண்டராகவே அவர் இருந்து வருவது பலருக்கும் நல்ல படிப்பினையைத் தரவல்லதாகும். அவரோடு நான் ஒரு முறை சென்னை மாவட்டத் தி. மு. க. முதல் மாநாட்டில் 'வழக்கு வாபஸ்' நாடகத்தில் நடித்திருக்கிறேன். நடிப்புக்கலையைக் காட்ட வேண்டும் என்பதற்காக அல்ல; நாட்டு மக்களுக்கு நல்லறிவாளர்களின் கருத்துக்களைப் படைக்க வேண்டும் என்ற தூயநோக்கத்துக்காக. அந்த ஒரு நாள் கூத்து-மணிமொழியார் அவர்

களையும் அவருடைய சிறந்த பண்பாட்டையும் நான் நன்கு அறிந்து கொள்ள வாய்ப்பளித்த கூத்து, வாழ்நாளில் என் நெஞ்சைவிட்டு என்றும் அகலாது.

மணிமொழியாரின் தொண்டு, நாட்டு மக்களுக்கு மேலும் தேவை. பெருகட்டும் அவரது பணி. மலரட்டும் நாயகத்தின் விடுதலை!

# மணிவிழாக் கொள்ளும் மாண்புடைத் தலைவர்

[எம். பி. நாச்சிமுத்து பி. ஏ. பி. எல்,
தலைவர், சென்னை மாநிலக் கூட்டுறவு நெசவாளர் சங்கம்]

"தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்"

மணிவிழாக் கொள்ளும் மாண்புமிக்க மணிமொழியார் அவர்கள் ஆண்டவன் அருளால் அறுபதாண்டு நிறையப்பெற்றுத் திகழுகின்றார்கள். அவர்கள் என்றும் நலஞ் சிறந்தோங்கி வளர விழைகின்றேன். செங்கல்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த பெருநகர் என்னும் சிற்றூரில் செங்குந்தர் நற்குடியிற்றோன்றிப் பொதுப் பணியிலே சிறந்து விளங்கும் அவர்களைப் பெரிதும் பாராட்டுகிறேன்.

செங்குந்தர் முன்னேற்றங் கருதிச் சென்னையில் 1927-ம் ஆண்டில் துவக்கப்பெற்ற தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தில் பிரசாரகராய்ச் சேர்ந்து தமிழ் நாட்டில் செங்குந்தர்கள் வதியும் ஒவ்வொரு கிராமத்திற்கும் சென்று பிரசாரம் செய்து செங்குந்தர்களைப் பேருறக்கத்தினின்றும் விழிப்படையச் செய்யப் பாடுபட்டவர்களில் அவர்களும் ஒருவர் என்று சொல்லிக்கொள்ளப் பெருமிதங் கொள்கிறேன். அவர்கள் பல ஆண்டுகள் செங்குந்தமித்திரனுக்கு ஆசிரியராகவும் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்

திற்கு அமைச்சராகவும் பணி புரிந்து வந்தார்கள். அவர்கள் இன்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர்களில் ஒருவராகத் திகழ்கிறார்கள். அக்கழகத்திற்கு உதவியாகப் "போர்வாள்" என்னும் வார இதழுக்கு ஆசிரியராக இருந்து நடத்திச் செயலாற்றி வந்தவர்கள். அப்பெரியார் நோயற்ற வாழ்க்கையும் குறையாத செல்வமும் பெற்று, நாட்டுக்கு நல்ல தொண்டுகளைப் புரிந்து, நூறாண்டுக்குமேல் வாழ்ந்து வைர விழாவையும் கண்டு களிக்க இறைவன் அருள் புரிவானாக.

---

# தென்னகம் போற்றும் தமிழறிஞர்

[அ. தம்பிரான், ஆசிரியர், கழக உயர்நிலைப் பள்ளி, மின்னல்.]

தமிழறிஞர் 'மணிமொழியார்' அவர்களைக் கடந்த இரு பத்தைந்தாண்டுகளாக நன்கறியும் வாய்ப்புப்பெற்ற என் போன்றார்க்கு அவர்களைப்பற்றி யறிந்தது கூற ஆர்வம் மிக்கு எழும் என்பதில் ஐயமுண்டோ!

மணிமொழியார் மணிமொழியாரே, கூட்டங்களில். சிறிதோ, பெரிதோ—பேசும் வாய்ப்பு கிடைப்பின் மணி மொழியாரின் பெயர்ப் பொருத்தத்தை ஆண்டு நனி காணத் தகும். ஒலி பெருக்கியின் அவசியமில்லை என்பதை வெளிப் படுத்தும் அவர்தம் பேச்சுக்கள், மணியோசை போன்று அவையினர் செவியில் படுவதோடு, கருத்துக்களும் மணி போன்று சுவைத்துத் தேர்ந்தெடுத்த சொற்களாலானவை-ஆணித்தரமானவை - அழுத்தம் திருத்தமானவை யெனில் புகழுரையன்று. அவர்,

கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாம் சொல்.

என்ற தமிழமுதத்தைத் தெள்ளிதின் உணர்ந்தவர். தமிழ் இலக்கியங்களில் துருவிய அறிவுபெற்று, திருந்த எழுதவ

துடன் பேச்சுத் திறமையும் ஒருங்கமைந்த மணிமொழியார், பொன்மலர் நாற்றமுடைத்து என்பதற்கோர் எடுத்துக் காட்டாவார்.

மணிமொழியாரின் வாழ்க்கையே பலதிறப்பட்டது எனில் வெற்றுரையன்று. ஆதியில் அறுவை வணிகராய், அருந்தமிழாசிரியராய், ஈன்ற சமூகத்தின் ஊழியராய், இதழாசிரியராய், மொழிகாப்பான் இந்தி எதிர்ப்பாளராய், தமிழ் மணம் புரிவிக்கும் சீர்திருத்தவாதியாய், அச்சுப்பொறி இயக்கும் அதிபராய், கட்சித் தொண்டராய், மேடைப் பேச்சாளராய் அமைந்த இவர்தம் வாழ்க்கை தமிழர்க்கு ஒரு நல்ல எடுத்துக் காட்டாகும்.

இருந்தமிழே உன்னால் இருந்தேன் தேவர்தம் விருந் தமிழ்தம் என்றாலும் வேண்டேன்—என்ற ஒரே கொள்கை இவர்தம் வாழ்வில் யாண்டும் சிறக்கக் காணலாம். மாணிக்க வாசகன் என்ற பெயரையே தனித்தமிழ்ப் பெயராக்கிக் கொண்ட இவர்தம் தமிழ்ப்பற்றினை அறியாதார் அறியாதாரே. தம்மை யண்டினார்க்குத் தாழ்ந்த குரலால் இன்மொழி பல கூறி நகைமுகம் நனிகாட்டி நாளும் நலம்பல புரியும் மணிமொழியாரை எவரும் மறவார் என்பது திண்ணம். தாம் பிறந்த செங்குந்தர் சமூகத்தின் பிற்போக்கான நிலையினை நீக்கத் தென்னகத்தில் இவர் செல்லாத ஊரில்லை. கல்லாத சமூகத்தில் இவருரையால் கல்லாதாரில்லை. இவருரைகேட்ட பொல்லாதவரும் நல்லவராகாமலில்லை. செங்குந்தருலகம் இவர்தம் சமூகத் தொண்டினைப் பாராட்டப் பெரிதும் கடப்பாடுடையது.

பல்துறைப் பேரறிஞராய மணிமொழியார் இன்னும் பன்னெடுங்காலம் நம்மிடையே இருந்து தமிழகம் தனிஆட்சி பெற்றுவிளங்க வழிகோலிப் பன்னலம் துய்த்து வாழ்வாராக.

வாழ்க மணிமொழியார்.

வாழ்க மணிமொழியார் தொண்டு.

———

# செந்தமிழர் போற்றும் சீர்திருத்தச் செம்மல்

[புலவர் சொ. முருகேசனார், தமிழாசிரியர்,
முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப்பள்ளி, சென்னை.]

---

அஞ்சா நெஞ்சினர், செந்தமிழ்க் காவலர், சீர்திருத்தச் செம்மல், உழைப்பின் உருவம்—என்று செந்தமிழ் மக்களால் போற்றிப் புகழப்படும் திருவாளர் காஞ்சி மணிமொழியார் அவர்கள் வயதால் முதியவரானாலும் கட்டிளங்காளை போலக் குன்றாத ஊக்கம் உடையவராய், திராவிடநாடு தன்னுரிமை பெற்று நல்வாழ்வு வாழவேண்டும் என அயராது உழைக்கும் ஆண்மையாளராய்த் திகழ்கின்றவர். சமூகத்தில் காணப்படும் தேவையற்ற சடங்குகளை ஒழித்து மக்கள் முன்னேற வழிகோலும் மாண்புமிக்க பெரியோர்களில் தலைசிறந்த ஒருவர். வாழ்க்கையில் மேன்மையடைய வேண்டும் என விரும்பித் தம்மை நாடிவரும் இளைஞர்களுக்கு அவர்களுடைய தகுதிக்கு ஏற்றபடி உதவிசெய்தும், பிறரைக் கொண்டு உதவி செய்வித்தும் அவர்களுக்கு நல்வாழ்வு அளிக்கும் சால்பு உடையவர். பிறருக்கு உதவி செய்தலைத் தம் இன்பப் பொழுதுபோக்காக உடையவர். நண்பரிடம் குற்றம்கண்டபோது இடித்துக் கூறி அவரை நல்வழிப்படுத்தும் ஆற்றல் உடையவர். பிறர் செய்த குற்றங்களை அஞ்சாது கண்டிப்பது போலவே, தம்மிடம் குறை நேராதவாறு விழிப்பாயிருந்து நீக்கிக்கொள்பவர். மெய்வருத்தம் பாரார், பசிநோக்கார், கண் துஞ்சார் என்ற செய்யுளுக்கு ஏற்றபடி—தாம் எடுத்துக்கொண்ட செயலை முட்டின்று முடிக்கவல்லவர். வீழ்நாள் படாது வாழ்நாளை நன்முறையில் நடத்துபவர். மற்றவர்களையும் அவ்வாறு பயன்படுத்தும்படி வற்புறுத்துபவர்.

"தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தியிருப்பச் செயல்"

எனத் திருவள்ளுவர் கூறிய நல்லுரைக்கு ஏற்றபடி தம் மக்களைக் கல்வியில் மேம்படச் செய்து வைத்துள்ள நல்லறிஞர்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த செம்மலார் அவர்கள் இன்னும் ஒரு நூற்றாண்டிருந்து நாட்டின் முன்னேற்றத்துக்குத் தொண்டு செய்வார்களாக. நாட்டு மக்களின் நல்வாழ்த்துக்களைப் பெற்று நீடு வாழ்க! வாழ்க!! என வாழ்த்துகிறேன்.

---

# வித்தூன்றிய பரம்பரை

## [தில்லை. மறைமுதல்வன் எம். ஏ., பி. எல்.]

---

பத்துப் பேர் ஒரு கொள்கையை ஆதரிக்கும் போது பதினோராவது பேராக அதை ஆதரிப்பது சுலபம். ஆனால் அந்தப் பத்துப் பேரும் எதிர்க்கும்போது, ஒரு கொள்கையை நிலைநாட்டுவதற்குத் தேவைப்படும் முயற்சியும் மனத் துணிவும் சாதாரணமானதல்ல—எல்லோராலும் சாதிக்கக் கூடியதுமல்ல!

'திராவிடம்' என்ற சொல் இன்று எல்லோராலும் பேசப்படுகிறது; முன்னேற்றக் கழகத்தின் கருத்துக்கள் நடமாடாத பகுதி இன்று நாட்டிலில்லை; கழகக் கூட்டத்துக்குக் கூடும் கூட்டம் போல வேறு எவருக்கும் கூடுவதில்லை; தன்மான உணர்வும் தாயகப்பற்றுமில்லாதவர்களை இன்று மக்கள் வெறுக்கின்றனர்; தமிழ்ப்பற்று எங்கும் கமழ்கிறது; இந்திக்கு 'மாலை மரியாதை' செய்தவர்கள்கூட இன்று 'இந்தியா?' என்று கேட்டு மார் தட்டுகின்றனர்......இது இன்றைய நிலைமை! ஆனால் இந்த நிலையை உருவாக்க எத்தனைக்

காலம் பிடித்தது! எத்தனைப்பேர் இதற்காகத் தங்கள் வாழ்வையே அர்ப்பணித்தனர்! கல்லடிக்கும் சொல்லடிக்கும் சிறைச்சாலைக்கும் அஞ்சாமல்—பரிசையோ பதவியையோ புகழையோ எதிர்பாராமல்—எத்தனைப் பேர் பாடுபட்டனர்!

திரு. காஞ்சி. மணிமொழியாரின் கடந்த முப்பதாண்டுக் காலப் பொது வாழ்வு இந்த உண்மையைத்தான் நமக்கு எடுத்துச் சொல்கிறது!

தோட்டத்தில் முல்லையும் ரோஜாவும் பூத்துச் சிரிக்கும் காட்சி அற்புதமானதுதான். ஆனால் அதற்காக, வெய்யிலிலும் மழையிலும், தோட்டக்காரன் எவ்வளவு பாடுபட்டிருப்பான்! அத்தகைய தொண்டுதான் மணிமொழியார் செய்த தொண்டும்! தி. மு. கழகம் இன்று நாட்டில் பொலிவோடும் வலிவோடும் விளங்குகிறதென்றால், அதில் மணிமொழியாரின் பங்குமிருக்கிறது. பேச்சாலும் எழுத்தாலும் செயல் திறனாலும் அவர் புரிந்த பணி மகத்தானது!

தொண்டுக்கு மரியாதை செய்யும் பண்பினை நாம் பெற்றிருக்கிறோம். அதன் அத்தாட்சியாக இன்று மணி விழா நடத்துகிறோம்—மணிமொழியாருக்கு!

நாட்டுக்கும், மொழிக்கும், இனத்துக்கும் பாடுபட்டவர்களை வரலாறு என்றைக்குமே உயரிய 'அந்தஸ்தி'ல் வைத்துத்தான் பிற்கால சந்ததியினருக்கு அறிமுகப்படுத்துகிறது!

இந்த மணி விழாவில் நான் இன்னொரு விதத்திலும் பெருமகிழ்வு கொள்கிறேன். எழுத்துலகில் இன்றைய நிலைக்கு நான் வளர எனக்குப் பேராதரவு காட்டியவர்களில் காஞ்சி. மணிமொழியார் குறிப்பிடத்தகுந்தவர். அவருடைய "போர்வாள்" நான் எழுதப் படித்த முயற்சிகளுக்கு ஆதரவு தரத் தயங்கியதே இல்லை! இந்தச் சந்தர்ப்பத்தில் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்வது மிகவும் பொருத்தமானதல்லவா?

வித்தூன்றிய பரம்பரையைச் சேர்ந்தவர் மணிமொழியார்! வித்து இன்று ஒன்றுக்குப் பத்தாக வளர்ந்து நிற்கிறது. அதன் அறுவடையை நாடு அனுபவிக்கும் நாளும் வெகு தூரத்திலில்லை!

---

## வழி காட்டிய வைரம்

[கா. வேழவேந்தன், தலைவர், சென்னைக் கல்லூரிகள் மாணவர் தமிழ் மன்றம்.]

"மொழியொன்றே விழியாம்! நாட்டின்
முன்னேற்றம் நமது மூச்சு!
விழிமூடி வாழ்தல் நன்று?
விடுதலை காண்போம்" என்றே
பழிகண்டு துடித்தீர்! மானப்
படைக்களம் அமைத்தீர்! வென்றீர்!
எழிலுடன் இளைஞர் நெஞ்சை
என்றென்றும் கவர்ந்தீர்! வாழ்க! 1.

சிறியதோர் உருவம் பெற்ற
சிங்கமாம் 'அண்ணா'வைப்போல்
குறுகிய வடிவைப் பெற்றும்
குன்றைப்போல் புகழைச் சேர்த்தீர்!
மறுவிலா வைரம் என்றும்
வடிவத்தால் சிறிது தானே!
அறுபது ஆண்டில் நீங்கள்
ஆயிரம் பணிமுடித்தீர்! 2.

'இடமெங்கே?' என்று கேட்ட
இந்தியை மூடி விட்ட
'இடமெங்கே?' என்று கேட்டு
எழுந்திட்ட திராவிடத்தார்

தடந்தோளைச் சிலிர்க்க வைத்துத்
தன்மானப் பரணி பாடிப்
பீடியுங்கள் 'போர்வாள்' என்றீர்!
பெற்றதாய் மகிழ்ந்தாள் உம்மால்! 3.

சிறைச்சாலை என்றால் ஏதோ
திரைப்படச் சாலை போன்றே
முறைபல சென்றீர்! எங்கள்
முன்னோடி யானீர்! ஐயா!
கறையிலாத் தொண்டால் கூறக்
கரையிலாச் செயலால் நாளும்
துறைபல கண்ட காஞ்சி
தொல்புகழ் உயர்த்தி விட்டீர்! 4.

புல்லினைப் பேச வைத்தீர்!
புழுவினை நிமிரச் செய்தீர்!
கல்லினை எழுப்பி விட்டீர்!
கண்களைத் திறந்தீர்! வான
எல்லையில் சிரிக்கும் மீன்கள்
எண்ணிக்கை கண்டார் எங்கே?
நல்லவர் உம்மைப் பாட
நாவுக்குச் சொற்கள் எங்கே? 5.

எதைச்சொல்வேன்? எதைவி டுப்பேன்?
எப்படிச் சொல்ல ஏலும்?
சதையினில் துடிப்பைச் சேர்த்தீர்!
தணலினை நெஞ்சில் சேர்த்தீர்!
விதை நட்ட உழவர் நீங்கள்
விளைச்சலை அறுப்பீர்! உங்கள்
கதையினைத் தொடர்வோம்; காண
காலத்தை வென்று வாழ்க! 6.

# உயர்ந்த பண்புகளின் உறைவிடம்

## [அன்புப் பழம் நீ]

தொண்டுக்கென்றே பிறந்து, தொண்டுக்கென்றே வளர்ந்து, தொண்டு செய்வதிலேயே இன்பம் காண்பவர் காஞ்சி மணிமொழியார். காஞ்சி வாணிபத்துக்குப் பெயர் போனது. காஞ்சி மணிமொழியாரும் வாணிபம் செய்வதில் வல்லவர். ஆனல் அவர் வாணிபத்தை வளர்ப்பதைவிட தொண்டை அதிகமாக வளர்த்தார். அவர் வாணிபத்திலும் தொண்டு செய்தார்.

சிறியேன் வாணிபத் துறையில் ஈடுபட்டுக் கொண்டே தொண்டு செய்வதற்கு வழிகாட்டியவர் மணிமொழியார் என்று சொன்னல் அது மிகையாகாது. காஞ்சியார் நல்ல உழைப்பாளி. கடமையைச் செய்வதில் வெய்யிலையும், குளிரை யும் பார்க்க மாட்டார். தலைதெறிக்கும் வெய்யிலானலும் ஓயாது பொழியும் மழையானலும் எதையும் தாங்கும் இத யம் கொண்டு தமிழகம் எங்கும் சுழன்று சுழன்று அவர் ஆற் றிய ஆற்றல்மிக்க தொண்டையும், அந்தத் தொண்டால் விளைந்த நற்பயனையும் நாடு நன்கறியும்.

'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்' - அருமையான தமிழ்ப் பழமொழி இது. என் நண்பர் ஒருவர் அடிக்கடி என்னிடம் அவரவர் முகத்தைக் கொண்டே அவரவர் குண நலன்களைச் சொல்லி விடலாம் என்று சொல்லுவார். இதன் படி காஞ்சியாரின் முகத்தோற்றத்திலே நான் கண்டவை என்ன தெரியுமா? பசுப்போன்ற அடக்கம், சிங்கம்போன்ற வீரம், யானை போன்ற உழைப்பு, இளகியமனம், நல்ல அன்பு- இவை தான்.

ஆடை அழகே அழகு என்று சொல்வதுண்டு. ஆனல் காஞ்சியார் சிறிதும் பகட்டில்லாத எளிய இனிய தூய்மை யான வெள்ளை ஆடைகளையே உடுத்துவார். இவர் உடுத் தும் துணியும் வெள்ளை; இவர் உள்ளமும் வெள்ளை.

இன்று அவர் வியாபாரியாக இருப்பார். நாளை கிராமத்திலே ஒரு கூட்டத்திலே சொற்சிலம்பம் வீசுவார். மறுநாள் போர்வாள் அலுவலகத்திலே மேலாளராகக் காட்சி அளிப்பார். ஒரே ஒருவர் இப்படிப் பலதுறையில் தொண்டாற்றுவது எவ்வளவு கடினம் என்பதைத் தொண்டனாகிய நான் நன்கறிவேன்.

உயர்ந்த பண்புகளின் உறைவிடமாக விளங்கும் அன்புத் திருவாளர் காஞ்சி மணிமொழியாரும் அவர் மக்களும் எல்லா நலன்களும் பெற்று இன்பப் பெருவாழ்வு வாழ்கவென மனமார வாழ்த்துகிறேன்.

---

## செந்தமிழ்போல் இனிது வாழ்க!

[**திருமதி வ. பா. தாமரைக்கண்ணியார்,**
செயலாளர், சென்னைப் பெத்துநாய்க்கன்-
பேட்டைத் தாய்மார் கழகம்.]

---

இந்தி எதிர்ப்புத் தனிப்போரில்
என்போற் பெண்கள் ஈடுபடல்
தந்தை **காஞ்சி-மணிமொழியார்**
தந்த ஊக்கத் தால்அன்றோ ?
அந்தப் பெரியார் இந்நாளில்
அறுபதாண்டு நிறைவுற்றார்.
எந்நாளும் செந்தமிழ்போல்
இனிது வாழி ! வாழியவே !!

---

# புகழ் மணக்கும் பொன்னேடு !

## [தாமரைக் கண்ணன்]

---

மணித் தமிழ் நாட்டின் மறுமலர்ச்சி வரலாற்றினை உணர்ந்த நமக்கு........,

'சீர்திருத்தம்' 'பகுத்தறிவு' என்ற சொற்களைக் கேட்டதும், 'திராவிட இயக்கம்' கவனத்திற்கு வருகிறது.

'திராவிட இயக்கம்' என்று கூறியதும் ஈரோடு, காஞ்சி, சென்னை முதலிய இடங்களில் அமைக்கப்பட்டிருந்த 'பகுத்தறிவுப் பாசறைகள்' கண்முன்னே தோன்றுகின்றன.

சென்னையை எடுத்துக் கொண்டால் பவழக்காரத் தெருவும், அத்தெருவில் இருந்த பாசறையிலிருந்து புறப்பட்டுத் தென்னகமெங்கும் பரணிபாடி வெற்றி உலா வந்த 'போர்வாள்' வார இதழும் நெஞ்சத்தில் நீங்காத இடம் பெறுகின்றன. 'போர்வாள்' என்று புகன்றதும் அதன் பெரும் புகழுக்குக் காரணமான **காஞ்சி மணிமொழியார்** எதிரில் வந்து நிற்கிறார்!—புன்னகை ததும்பும் முகத்தோடு—வெற்றி ஒளி வீசும் கண்களோடு.

'சீர்திருத்தம்' என்ற சொல்லைக் கேட்டதும் பெற்று வளர்த்துப் பேணிப் பாதுகாத்த நற்றாயும் சீறிவிழுந்து வீட்டைவிட்டுத் துரத்தியடித்த அந்த நாளிலிருந்து, தமிழகம் துள்ளிக் குதித்து எழுந்து எழுச்சிப் பண்பாடும் இந்த நாள்வரை நாட்டின் மறுமலர்ச்சிக்காக ஓயாது பாடு பட்டுவரும் ஒப்பற்ற தலைவர்களில் முதன்மையானவர்—தமிழகத்தின் இதயத்தைக் கவர்ந்த எழில்மிகு சிறப்பினர் திருவாளர் காஞ்சி மணிமொழியார் அவர்கள்.

'திராவிடம்' என்ற சொல்லைக் கேட்டதும் பகைமைத் தீயை நாடு முழுவதும் பரப்பிவிட்டு வேடிக்கை பார்த்த

அம்மாமிப் பத்திரிகைகளின் வெட்கங்கெட்ட செயலுக்குச் சரியான சவுக்கடி கொடுத்த நமது வார ஏடுகளில் முதல் இடம் வகிப்பது 'போர்வாள்!'

என் வாழ்நாளில் நடந்த மறக்கமுடியாத நிகழ்ச்சிகளில், இரண்டு முக்கியமானவை யாகும்!

ஒன்று...! 1948–ல் நடந்த இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போது நான் படித்துக்கொண்டிருந்த பள்ளியின் எதிரில் நின்று மறியல் செய்ததையும், நூற்றுக்கணக்கான மாணவர்களுடன் சேர்ந்து நான் ஊர்வலம் நடத்தியதையும் என்னால் எப்போதும் மறக்கமுடியாது!

மற்றொன்று...ஆட்சியில் கொலுவிருந்த ஆச்சாரியார் தில்லியில் இருந்து சென்னைக்கு வந்த சமயம் அவருக்குக் கறுப்புக் கொடி காட்டிய நிகழ்ச்சி! அந்த நிகழ்ச்சியின் போது கோட்டை மைதானத்தில் ஆயிரக்கணக்கானவர்களுடன் சேர்ந்து கருப்புக் கொடியைக் கையில் ஏந்தி, 'திராவிடநாடு திராவிடருக்கே' என்ற வீர முழக்கமிட்டு, குறுந்தடியால் அடிபட்டு, அடக்குமுறை ஆட்சியாளர்கள் ஏவிய குதிரைக் குளம்புகளில் மிதிபட்டு, தங்கசாலை வீதியில் இருந்த தலைமைக் கழகத்தை நோக்கிச் சென்ற முன்னணிப் படையில் கலந்து கொண்டது!

நான் இந்த இரண்டு நிகழ்ச்சிகளிலும் பங்கெடுத்துக் கொண்டதன் உண்மையான காரணம், என்னுடைய 'போர்வாள்' பைத்தியமாகும். ஆம்...! நான் போராட்டத்தில் ஈடுபடும் அளவுக்கு எனக்கு உள்ளத்திண்மையையும் செயல் வன்மையையும் தன்மான உணர்வையும் தாய் மொழிப் பற்றையும் உண்டாக்கியது 'போர்வாள்' இதழே ஆகும்!

போர்வாள்...! என்னைத் திருத்தியது; என்னைப் போன்ற ஆயிரக்கணக்கான மாணவர்களைத் திருத்தியது!

போர்வாள்...! என்னைக் கழகத்தில் ஈடுபாடு கொள்ளச் செய்தது; என்னைப் போன்ற ஆயிரமாயிரம் தோழர்களைச் செயல்வீரர்களாக்கியது!

போர்வாள்...! என்னை எழுத்தாளனாக்கியது; என்னைப் போன்ற எத்தனையோ தோழர்களை எழுத்தாளர்களாக ஆக்கியது! அந்தத் தோழர்களில் சிலர் இன்று திரைப்பட உலகில் பவனி வந்துகொண்டிருக்கின்றனர்!

போர்வாளின் தொண்டு மணிமொழியாரின் தொண்டு ஆகும்! போர்வாளின் பெருமை மணிமொழியாரின் பெருமை ஆகும்!!

இளகிய மனமும் எதையும் வெளிப்படையாகக் கூறும் தன்மையும் மணிமொழியாருக்கே உரிய நற்குணங்கள். கொள்கைக்காக எத்தகைய தியாகத்தையும் செய்யத் தயாராக இருக்கும் அவருடைய ஆண்மையும் அஞ்சாமையும் ஏனையோருக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகள்!

குறைந்த உழைப்பில் நிறைந்த புகழ் அடைந்தவர் அல்லர், அவர்! சுயமரியாதை இயக்கம் உருவான நாளிலிருந்து சொல்லமுடியாத அவமானங்களையும் பழிச் சொற்களையும் கடுமையான எதிர்ப்புக்களையும் கட்சிக்காக ஏற்று, பேரிழப்புகளுக்கு ஆளாகி, இன்றுவரை தாய் நாட்டிற்காகவும் தாய் மொழிக்காகவும் இடைவிடாது உழைத்துவரும் அவருடைய அரும்பணிக்கு எவ்வளவு புகழும் ஈடு ஆகாது!

ஆம்! திராவிட இயக்க வரலாற்றுச் சுவடியில் மணிமொழியாரின் தொண்டு சிறப்பானதோர் பொன்னேடாகும். புகழ் மணக்கும் அந்தப் பொன்னேடு, மணிமொழியாரின் பெயரை என்னாளும் பாடி நிற்கும்!! வாழ்க மணிமொழியார்-வாழ்க அவர்தம் புகழ்!

# தளர்விலாத் துணிவினர் ஓய்விலா உழைப்பினர்

[ஈ. வே. சோமசுந்தரம்,
நகராட்சி ஆணையாளர், காஞ்சீபுரம்.]

---

காஞ்சி மணிமொழியார் அவர்களுடைய மணிவிழா நடப்பதைக் கேட்டு அகமிக மகிழ்கிறேன். அவருடன் 30 ஆண்டுகள் பழகும் பேறு பெற்றேன். அவரது இடையறாச் சேவையும், தளர்விலாத் துணிவும், ஓய்விலா உழைப்பும், அளவிலாச் சீர்திருத்த ஆர்வமும் போற்றிப் பாராட்டுவதற்கு உரியன.

பிற்போக்கான சமூகத்தில் பிறந்ததால் சீர்திருத்த வேகம் நிறைந்த அவரது தொண்டு இன்றியமையாத தேவையாகித் தொடர்ந்து பல்லாண்டு சமூக முன்னேற்றத்திற்குப் பயன் அளித்தது

சமூக சீர்திருத்தப் பணிகளில் ஈடுபட்டு எதிர்ப்புகளுக்கும் ஏச்சுகளுக்கும் மறுப்புகளுக்கும் மாச்சர்யங்களுக்கும் சளையாமல் மசியாமல் இடையறாது உழைப்போர் பாராட்டிப் போற்றப்படத் தக்கவராவர். அந்நிலையில் உள்ள நமது மணி விழாத்தலைவரான காஞ்சி மணிமொழியார் சேவை பெரிதும் பாராட்டத் தகுதி பெற்றதாகும்.

வளர்க அவரது சேவை. விரிக அவரது சேவை வாய்ப்புகள். வாழ்க அவரும் அவரது குடும்பத்தார் அனைவரும். அவரும் அவரது சுற்றமும் நண்பரும் இன்பும் பண்பும் வளமும் நலமும் உடல் மன உரமும் உவகையும் பெற்று நீடு வாழ்ந்து சமூகசேவை ஆற்ற இறை அருள் பொழிய வாழ்த்துகிறேன்.


---

# எழுத்திலும் பேச்சிலும் ஆற்றல் நிறைந்தவர்

[மாவண்ணா தேவராசன், தலைமைத் தமிழாசிரியர்,
கழக உயர்நிலைப் பள்ளி, ஊத்துக்கோட்டை.]

---

ஆன்றவிந் தடங்கிய சான்றோர் மிகப்பலர்
வாழ்ந்திடும் புகழும், சூழ்ந்திடும் வளமும்,
காண்பவர் கண்ணையும் கருத்தையும் கவரும்
மாண்பெழில் இயற்கைத் தோற்றமும் வாய்த்து,
நெஞ்சைவிட் டகலா நிகரிலாக் கோயிலும்
மஞ்சிவர் மதில்சேர் மாடிவீடுகளும்
கூடிய திருநகர் பாடல்சேர் பெருநகர்
காஞ்சியம் பதியில் தோன்றிய அறிஞ !
தீஞ்சுவைத் தமிழும் தேர்ந்தாங்கிலமும்
புலமை நிறைந்து நலமுறச் சொற்பொழி(வு)
ஆற்றவும் எழுதவும் ஆற்றல்சால் நம்பி !
தமிழாசிரியராய்த் தமிழ்த் தொண்டாற்றியும்,
இதழாசிரியராய் இனிய தொண்டாற்றியும்,
இந்தியை எதிர்த்தும் இயக்கமாநாடுகள்
வந்துமுன் நடத்தியும், வாயுறை வழங்கியும்,
நடித்தும், மக்களை நன்கு திருத்தியும்
வையத்து வாழ்வாங்கு வாழ்ந்த நின்வாழ்க்கை
ஐயத்துக் கிடமின்றி அழகிதே ஆகும் !
"தம்மிற்றம் மக்கள் அறிவுடைமை" என்றாங்குச்
செம்மையாய் நின்மக்கள் தேர்ந்த நூலறிவும்
பெறச்செய்த பான்மை பிறர்புகழ்க் குரித்தே !



1930 - ல் காஞ்சீபுரத்தில் சமூக சீர்திருத்தத் தொண்டராக விளங்கிய மணிமொழியார் (வலப்புறத்திலிருந்து இரண்டாவதாக அமர்ந்திருப்பவர்)



1947 - ல் திராவிடர் கழக முன்னணித் தலைவராக
விளங்கிய கருஞ்சட்டைவீரர் **மணிமொழியார்**

இங்ஙனம்,
எல்லா வழியிலும் இயல்பினால் வாழ்ந்(து) இவர்
நல்லார் எனப்பலர் நவிலுமா றுயர்ந்தனை !
இருமுப்ப தாண்டுகள் எய்தியும் இளைஞனாய்த்
திருவுடன் விளங்கினை; எதனால் தெரியுமோ ?
இன்னும் நம் தமிழர்க்கு ஏற்றநற் றொண்டுகள்
பண்ணும் படிஎதிர் பார்த்திருக்கின்றோம் !
ஆதலின், அறிஞர் பெருமக, மணிமொழீ,
ஓதும் குறள்நெறி மேன்மேல் ஓங்கி
மக்களும் ஒக்கலும் மகிழ நலமெலாம்
தக்கவா றுற்றுத் தமிழெனத் தழைத்து,
இன்னுமோர் அறுபதாண் டிருந்தெமக் குற்ற
நண்பராய் வாழியர் நலமே ! வழிவழி
உண்மை நற்றொண்டு உலகில் ஓங்கிடவே
வாழியர் வாழியர் வாழியர் இனிதே !

---

# வாழ்வாங்கு வாழும் அறிஞர் பெருமகனார்

[நா. ப. தணிகை அரசு,
ஆசிரியர், “ குருகுலம், ” வாலாஜாபாத்]

“ பெறுமவற்றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற ”

என்றார் செந்தமிழ்ப் பெரும்புலவர் திருவள்ளுவர். அத் தகைய மக்கட் பேற்றைப் பெற்றவர் உயர்திரு மணிமொழி யார் அவர்கள். மணிமொழியாரின் மூத்த திருமகனார் செந்தமிழ்ச் செல்வர் திரு. இளஞ்செழியன் எம்.ஏ. அவர்கள்,

கூரிய அறிவும், எதனையும் ஆழ்ந்து அகன்று அறியும் ஆற்றலும், தம்முடைய கருத்தைப் பிறர்க்கு வன்மை மிக்க எழுத்தாலும் சொல்லாலும் எடுத்தியம்பும் திறமையும், கலைத் தலைமைப் பட்டமும் பெற்ற பேராசிரியர் அன்றோ? மணிமொழியாரின் இளைய புதல்வர் திரு மா. நடராசன் பி. எஸ்ஸி. அவர்களும் கல்லூரிப் பட்டம் பெற்று, அறிவால் உயர்ந்து, இந்திய அரசாங்கப் பணி புரிந்துவரும் எழிலார் நம்பி அன்றோ?

இத்தகைய இரு பெருஞ் செல்வங்களை அளித்த அண்ணல் மணிமொழியார், அன்பிற் சிறந்த அம்மையாரோடும் பலரும் புகழும் பெருவாழ்வு வாழ்ந்து மணி விழாக்கொள்ளுகிறார் என்னும் இனிய செய்தி, எண்ணி எண்ணி மகிழ்வதற்கு உரியதாகும். அந்த அறிஞர் பெருந்தகையார், தமது திண்ணிய எண்ணங்களாலும், இனிய சொற்களாலும், அழுத்தமான எழுத்தாலும் இதுவரை எத்தனையோ மக்களுக்கு இனியவை பல புரிந்துள்ளார். அந்த நற்றமிழ் அறிஞர் இன்னும் பன்னெடுங்காலம் பாரில் வாழ்ந்து, அறிவாலும் செயலாலும் ஆன்ற பண்பாலும் மன்பதைக்கு மாணுறு பணி புரிந்து, நூற்றாண்டு விழா முதலிய ஏனைய விழாக்களும் கொண்டு வாழி வாழி என வாயார வாழ்த்தி நிற்கிறேன்.

---

## பெரும்பயன் விளைத்த அருந்தொண்டு

[தி. அ. சண்முகம், பிரசாரகர்.
தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம், சென்னை]

மணி விழாக் கொள்ளும் மாண்புடைத் திருவாளர்—என் உழுவலன்பர்—பி. செ. மாணிக்கவாசக முதலியார் என்னும் காஞ்சி மணிமொழியார் அவர்கள், 1928-ம் ஆண்டு முதல், தமிழ் நாட்டில் செங்குந்த குல மக்கள் வதியும் கிரா

மங்களுக்கெல்லாம், சிரமங்கருதாது அடிக்கடி சென்று தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் சார்பாகப் பிரசாரம் செய்துள்ளார்கள். அச் சங்கத்தின் அமைச்சராகவும், "செங்குந்தமித்திரன்" திங்கள் இதழின் ஆசிரியராகவும், செங்குந்தர் கல்விநிதிக் காப்பாளர் சபைச் செயலாளராகவும் இருந்து சீர்மிகு பணி யாற்றியுள்ளார்கள். திராவிட முன்னேற்றக் கழகப் பணியில் ஈடுபட்டுத் தமிழ்நாட்டுக்கும் தமிழ் மக்களுக்கும், என்றென்றும் போற்றிப் புகழத்தக்க முறையில் தொண்டு புரிந்துள்ளார்கள். அந்தப் பெருந்தகையார் செய்துவரும் தொண்டு, மக்களுக்குப் பெரும்பயன் விளைத்திருப்பதை நான் பலமுறை கண்கூடாகக் கண்டு மகிழ்ந்திருக்கிறேன். இத்தகைய தொண்டின் செல்வர் ஆண்டவன் திருநோக்கால் அறுபதாண்டு நிறையப்பெற்று மணிவிழாக் கொள்ளும் இந்த அரிய நேரத்தில் அன்னாரை வாழ்த்தி மகிழும் நல்வாய்ப்பு எனக்குக் கிடைத்ததுகண்டு நான் பெருமகிழ்ச்சி கொள்கிறேன். அன்னார் எல்லாவகையினும் சிறந்து, இன்னும் பல பொதுத்தொண்டுகள் புரிந்து, நூறுவதாண்டுப் பெரு விழாவையும் கண்டுகளித்துச் சிறப்புடன் வாழ்க வாழ்க என வாயார வாழ்த்துகிறேன். அன்னாரின் வாழ்க்கைத் துணைவியார் திருவாட்டி அபிராமியம்மையார் அவர்களும், அவர்தம் மக்கள் திருவாளர்கள் மா. இளஞ்செழியன் எம். ஏ, மா. நடராஜன் பி. எஸ்சி ஆகியோரும் நலம் பலபெற்று நன்கினிது வாழ்வார்களாக.

---

## நாட்டுக்குப் பணியாற்றும் நல்லறிஞர்

[த. வே. முருகேசனார், ஆசிரியர்,
சென்னைக் கல்விச் சங்கம்]

உயர்திரு காஞ்சி மணிமொழியார் அவர்களின் அறுபதாம் ஆண்டு நிறைவு குறித்து நடைபெறும் மணிவிழாச் செய்தி கேட்டுப் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

1938-ல் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போரில் காஞ்சி மணிமொழியார் அவர்களோடு தொடர்பு கொள்ளும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது. அந்தப் போராட்டத்தின் போது அவர் ஆற்றிய அரும்பணியும், 1948ல் மீண்டும் இந்தி எதிர்ப்புப் போர் மூண்டெழுந்தபோது அம்முறையும் முழு மூச்சுடன் அதில் ஈடுபட்டு அஞ்சாமல் சிறைசென்ற அவர்தம் மொழிப்பற்று, பொதுப்பணி, பேச்சாற்றல், நல்ல நேர்மை ஆகியவைவயும் என்னுல் மறக்க முடியாதவை யாகும்.

சிறந்த பேச்சாளராகவும், பத்திரிகை ஆசிரியராகவும், நூலாசிரியராகவும் விளங்கி நாட்டுக்கு அவர் ஆற்றிவருஞ் சேவைகள் மிகப் பலவாகும். தென்னுட்டு விடுதலை இயக்க மான திராவிட முன்றேற்றக் கழகத்தின் முன்னணி வீரராய் விளங்கி வரும் அவர்கள், பொதுப் பணிகளின் சிகரமென விளங்கிப் பன்னெடுங்காலஞ் சிறப்புற வாழ்ந்து மக்கள் உள் ளங்களில் அழியாத இடம்பெற வேண்டுமென இந்தத் திருநாளில் ஆசைப்படுகின்றேன்.

## நம் உள்ளம் கவர்ந்த உத்தமர்

[**சுகவனம் சிவப்பிரகாசன்**, ஆசிரியர், குட்டிக் குறள்.]

---

அணிதிகழுந் தமிழ்நடையில்
　　பண்பாட்டில் உயர்குடியில் ஆன்ற முன்னோர்
பணிதிகழும் வழியறிந்தோன் செங்குந்தர்
　　குலம் விளக்கும் பரிதிபோல்வான்
கணிதநெறி பலதுறையுங் கற்றமகார் தமைப்
　　பயந்த கலைஞன் காஞ்சி
மணிமொழியாம் நம்நேயன் மணிவிழா வைர
　　விழாவாக வென்றே !

---

# காஞ்சி அளித்த கருத்துக் கருவூலம்

[சி. ஆர். பாலசுந்தரம், சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினர்.]

---

உயர்திரு. காஞ்சி மணிமொழியார் அவர்கள், நாட்டிற்காக ஆற்றிய தொண்டு—கல்விக்காகச் செய்த பணி—திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு நல்கிய உழைப்பு—இந்தி எதிர்ப்புப் போராட்டங்களில் அரசாங்கத்தார் தடி கொண்டு தாக்கியபோதும் கலங்காமல் தன் இலட்சியமே பெரிதெனக் கருதிக் கலந்துகொண்ட வீர உணர்ச்சி—கறுப்புக்கொடி காட்டும் நிகழ்ச்சிகளின்போது காவல்துறையினர் அவர்தம் வீட்டுக் கதவைத் தட்டி அவரைச் சிறைச் சாலைக்கு அழைத்துச் சென்ற நேரத்திலும் அஞ்சேன் என்று சென்ற நெஞ்சு உரம்—ஆகிய இவற்றைத் தென்னகம் என்றென்றும் மறக்கமுடியாது. அந்த அறிவின் செல்வர், ஆசிரியராய்ப் பணியாற்றி வெள்ளை யுள்ளம் படைத்த குழந்தைகளின் உள்ளத்தில் நல்லறிவு ஊட்டிய நாயகம்; அண்ணாவின் நாடகங்களில் அழகுற நடித்து நடிப்புக் கலையின் சிறப்பை நாட்டிற்கு எடுத்துக் காட்டிய நற்கலைஞர்; தன் ஏடு மூலம் எத்தனையோ அறிவாளிகளையும் எழுத்தாளர்களையும் நாட்டிற்கு அறிமுகப்படுத்திய இதழாசிரியர்; தன் பேச்சுத் திறத்தால் மக்கள் மன்றத்தில் புத்தெழுச்சியை உருவாக்கிய வித்தகர்; "போர்வாள்" கொண்டு தமிழ் இளைஞர்களைப் புதுநடை போடச் செய்த புத்துலகச் சிற்பி. காஞ்சி நகர் அளித்த சிங்க ஏறு. நிறைந்த அன்பும், சிறந்த பண்பும், உயர்ந்த ஆற்றலும், ஒப்பற்ற தொண்டுள்ளமும் கொண்ட என் கெழுதகை நண்பர். மணிமொழியார் நீடூழி காலம் வாழ்க வாழ்க என வாழ்த்துகிறேன்.

---

# விழுமிய பண்புகள் கெழுமிய தலைவர்

**[மயிலை முத்தெழிலன்.]**

---

'தோன்றிற் புகழொடு தோன்றுக' என்னும் தொல் புகழ் வள்ளுவர் தூய்மொழிக் கேற்பத் தோன்றிய பெரியார்—தொண்டின் மன்னர் – மணிவிழாக் கொள்ளும், மணிமொழி நல்லார், எத்துறை தன்னில் தோன்றிடும் பொழுதினும் அத்துறை சிறக்க அரும்பணி யாற்றும் - முத்தமிழன்பர் - முயற்சியின் ஊற்று. செந்தேன் மொழியாஞ் செந்தமிழ் மொழியை, இந்தியைத் திணித்து அழித்திட எண்ணியோர் நடுங்கப் புயலெனப் புகுந்து போர்புரிந்து வாளெடுத்துரைத்து வென்றிகள் கண்ட வியத்தகு வீரர் - வீறுடைத் தொண்டர் **திரு. மணிமொழியார்.**

ஒன்றிரண்டல்ல, நான்கு முறைகள் சிறையின் கோட்டம் நண்ணினரெனினும் நற்றமிழ் காக்கும் பணியினைத் தொடர்ந்து நடத்துதற்கு அஞ்சா நெஞ்சினர் - தமிழர் போருக் கேற்ற ஒளியுடை வாள் போல் தகுதிகள் பலவும் பெற்றதோர் இதழாம் 'போர்வாள்' தன்னைப் பொலிவுடன் தந்த பெருமையுடையவர் – **மணிமொழியார்.**

'எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள்' காண்டிடும் அறிஞர்—'நுண்மாண் நுழைபுலம்' கொண்ட கலைஞர்—கொள்கைக் குன்று. தமிழினை முறையாய்க் கற்றுத் தெளிந்தும், மற்றவரதனை உணரா வகையினில் மறைத்துத் தமிழ்த் தொண்டாற்றிடுஞ் சான்றோர். குடத்தினு ளிட்ட விளக்கினைப் போன்று, விளம்பரமின்றிப் பணிபுரி பண்பினர். பாங்குறச் செயல்பல புரிந்திடும் பெரியார் **திரு. மணிமொழியார்.**

வையம் போற்றிடு வள்ளுவர் புகழை - முதன்முதல் விழாவினை நடத்தியம்பிய பெருமை நம் திரு. மணிமொழி

யாவரையே சாரும். அன்றைய பெரியார் அருமைத்தோழர்-இன்றை அண்ணா தழுவிடுந் தம்பி-என்றும் எந்தை முத்துக்கினியர் - இனிமைச் சொல்லார் இளஞ்செழியர்தம் இசைவளர் தந்தை - காஞ்சி தந்த கவினுடைத் தொண்டர் - கலங்கா உளமுடை நம் **மணிமொழியார்.**

'எடா, தம்பி! எடடா கொடியை! கடுகி நீ விரைந்து காத்திடு தமிழை!' என்னும் உரை அண்ணா எழுப்பிடும் முன்னே, எதிரே நிற்கும் எழுச்சிச் சிகரம். பரணியின் புகழுடை கருணாகரனோ, பல்லவர் பெற்ற பரஞ்சோதியாரோ, என்றே வியந்து யாவரு முரைக்கும், இந்திப் போரின் இணையிலா வீரர், **திரு. மணிமொழியார்.**

விழுப்புடை விழாக்கோள் நல்லோய் வாழி! களம் பல கண்ட வீரரே வாழி! நடிப்பிலுஞ் சிறந்த கலைஞ வாழி! புலவர் போற்றும் புகழே வாழி! திருவிட அகத்தின் தீரரே வாழி! அறுபாணாண்டை அழகுற முடித்த ஆற்றலினாற்றே, ஆற்று மணலினும் அளவிடற்கரிய ஆண்டுகள் வாழ்க! இளஞ்செழிய ரென்னும் இனிய செல்வரை ஈன்றளித்து இசைகொள் உழைப்பின் பிறப்பே, பல்லாண்டு உலகில் பாங்குற வாழ்க!

வாழ்க மணிமொழியார்

வண்டமிழ் மொழிபோல்!

---

# தனக்கென வாழாத பிறர்க்குரியாளர்

[திருவொற்றியூர் டி. சண்முகம்]

---

தமிழ் மக்களின் பெருமதிப்பையும் பேரன்பையும் பெற்ற திருவாளர் காஞ்சி மணிமொழியார் அவர்கள் எனக்கு நீண்ட நாட்களாகத் தெரிந்த தகுதிவாய்ந்த நண்பர். திரா விட சமுதாயத்தைச் செல்லரித்துக் கொண்டிருக்கும் மூட நம்பிக்கைகளையும் குருட்டுப் பழக்க வழக்கங்களையும் தொகையாக எதிர் நிறுத்தித் தூள் தூளாக்கி வந்துள்ள பகுத்தறிவாளர். ஆழ்ந்த தமிழ்ப் புலமையோடு சிறந்த தமிழ்ப்பற்றும் வாய்ந்தவர். அந்தப் பற்றின் காரணமாகவே மாணிக்கவாசகம் என்று இருந்த தம்முடைய பெயரை மணி மொழியார் என்னும் தூய தமிழ் வடிவினதாக மாற்றி அமைத்துக்கொண்டவர். நம் திராவிட இயக்கத்துக்கு உண்மையாகவும், தன்னலங் கருதாமலும், ஏன்—தன் பொருள் இழந்தும் அரும்பாடுபட்டவர். எல்லோரிடத் திலும் அன்பாகவும் — புன்முறுவலோடும் உரையாடும் தன்மை படைத்தவர். பல்லாயிரம் மக்களையும் கவரத்தக்க முறையில் உரையாற்றவல்ல சிறந்த பேச்சாளர். இத்தகைய அவர் இன்னும் நூறு ஆண்டுகள் வாழ்ந்திருந்து நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் தொடர்ந்து சிறந்த தொண்டாற்ற வேண்டும் என நான் பெரிதும் விரும்புகிறேன்.

# அறிவும் ஆற்றலும் ஒருங்கே அமைந்தவர்

[வா. தி. மாசிலாமணி, செயலாளர்,
இந்து மத பாடசாலை, வாலாஜாபாத்.]

---

தமிழகம் பெற்ற பெறற்கரியபேறு எனத்தகும் உயர் திரு. காஞ்சி மணிமொழியார் அவர்களைச் சென்ற முப்பத்தைந்து ஆண்டுகளாக மிக நெருக்கமாகப் பழகி அறியும் வாய்ப்புப் பெற்றவன் யான். வாலாஜாபாத் பாடசாலையில் அவர் ஆசிரியராய்ப் பணி புரிந்த காலத்திலிருந்து, "போர் வாள்" இதழாசிரியராய் அமர்ந்து பொதுமக்களுக்கும் நாட்டிற்கும் நற்பணியாற்றிய காலம் உட்பட இற்றை நாள் வரையுள்ள அவருடைய வாழ்க்கையை யான் நன்கு அறிவேன். என் கடன் பணிசெய்து கிடப்பதே என்னும் பொன் மொழிக்கு இணங்க எந்நாளிலும் ஓயாது தொண்டுபுரிந்து வரும் நல்லியப்பு வாய்ந்தவர் அவர். என்றும் முயற்சி உடையவர் எடுத்த செயலில் வெற்றி காணுதற்குப் பேருழைப்புக் கொள்பவர். தான் ஆராய்ந்து நல்லவையெனக் கண்டவற்றைப் பிறர்க்கு அழுத்தமான முறையில் எடுத்துச் சொல்லுதலில் மிகுந்த வல்லமை படைத்தவர். அவரது சொல்வன்மையும் எழுத்துவன்மையும் இளைஞர் உலகத்திற்குத் தலை சிறந்த எடுத்துக்காட்டுகளாக இருக்கத்தக்கவை. அவருடைய குடும்பம், அமைதியான குடும்பம்; அறிவிற் சிறந்த குடும்பம்; இனிய பண்பால் உயர்ந்து பொலியும் நல்ல குடும்பம். மணிவிழாக் கொள்ளும் மணிமொழியார் அவர்கள், நோயற்ற நல்ல உடம்புடன் புகழும் பெருமையும், என்றும் கொண்டு, இனிது வாழ்ந்து, முத்து விழா முதலிய மற்ற விழாக்களையும் கொண்டு சிறப்பாராக என வாழ்த்துகிறேன்.

---

# கடற்கரையில் ஒரு நாள்!

## [திருவத்திபுரம் இறையனார்.]

---

திரைக்கை மோதித் திசைதொறும் பரப்பி
இரைந்து கூவும் இமிழ்கடற் கரையில்
மக்கள் தலைக்கடல் மாணவே காட்டும்
மிக்கதோர் கூட்டம் மெத்தவும் கண்டேன்;
அலையொலி அப்புறம் நிற்க அவையினர்
ஈண்டிய செவியால் மூண்டபே ருரையில்
திளைத்திடும் செயல்தான் என்னே என்றேன்;
மணியோ சையோ மாணிக் கம்மோ
கணீர்கணீ ரென்று கர்ச்சிப் போரியார்?
என்றை யுற்றேன் எங்கள் மணிமொழி
நன்றே யறிந்தேன், அன்றே புரிந்தேன்;
விஞ்ஞா னப்பொறி வீணெனக் காட்டும்
ஒலிபரப் பியாண்டும் ஒலித்திடக் காண்கிலேன்;
கேட்டோர் கட்டுறக் கேளார் இரங்க
வேட்ப மொழிந்து விண்ட மொழியால்
பசுமரத் தாணிபோல் பதித்திடும் பேச்சினன்;
தளர்ந்த நடையுடைத் தள்ளாக் கிழவரும்
கிளர்ந்த மொழியால் கிறுகிறுப் பெய்திடும்
மலர்ந்த சொற்கள் மிகவியப் பினவே;
புன்னகை முகத்தில் பொன்வரம் பிட்ட
மூகத்தழ கூட்டும் மூக்கின் ஆடிக்
கண்டோர் கருத்தில் யாண்டும் நிற்கும்.
உடல்கறுப் பெனினும் உளங்கறுப் பிலாதான்;
திருக்கச்சி தென்மதுரை சேலம் முதலாய
பற்பல நகர்விளை பொற்புடை ஆடை
விற்றிடும் அறுவை வணிகர்; அருந்தமிழ்
கற்றிடு மாணவர்க் கரும்பெரு மாசான்;

பெற்ற குடியும் பிறந்த சமூகமும்
பிறங்கி உய்ந்திடப் புரிந்த தொண்டன் ;
மொழியும் இனமும் வழிவழி சிறக்க
வழிபல வகுத்த வல்லவ னன்றே !
இன்ன பல்வகை நன்னர் புரிந்த
மணிமொழி யன்பர் மணிவிழா வாற்றல்
பாரினில் மிகவும் போற்றுதற் குரித்தே ;
யான்வாழ் நாளும் இனிதின் பெற்றே
பல்வகை நலனும் பாரினில் எய்தித்
தமிழ்நாட் டாட்சி தகவுடன் கண்டு
வழிவழி சிறக்க விளங்கி
வாழி வாழி வாழியர் நெடிதே.

---

# மணிவிழாத் தலைவர் மணிமொழியார்

[பேராசிரியர் மயிலை சிவமுத்து,
தலைவர், மாணவர் மன்றம், சென்னை.]

---

1900 என்னும் ஆண்டினை என் உள்ளத்தில் மறவாது இருத்திக்கொண்டு என்னிடம் உள்ள பல நூல்களையும் மேற்போக்காகப் புரட்டிப் பார்த்தேன். இந்த ஆண்டு மணிமொழியார் தோன்றிய ஒரு நல்லாண்டாக மட்டும் இன்றி உலக விழிப்புக்கே காரணமாகத் திகழும் அரிய பெரிய பொன்னாண்டு என்பதையும் நான் உணர்ந்தேன். இந்த ஆண்டு 19-ஆம் நூற்றாண்டினுக்கும் 20-ஆம் நூற்றாண்டினுக்கும் ஓர் எல்லைக்கோடாக இருந்து உலகத்திலே பற்பல அரிய செயல்களைத் தோற்றுவித்ததற்கு இன்றியமையாத ஆண்டாகத் திகழ்ந்திருக்கின்றது.

உலகப் புகழ் பெற்றொளிர்ந்த சுவாமி விவேகானந்தர் இந்தக் காலத்திலேதான் அமெரிக்காவிலும், பிரான்சு நாட்

டினுமாக இருந்துகொண்டு சமயப் புரட்சி செய்து வந்தது தெரிய வருகின்றது. தென் ஆப்பிரிக்காவிலே 'போவர்' என்னும் உழவர்கள் புரிந்த போர்த் துவக்கத்தால் பலப்பல நன்மைகள் ஏழைகட்கு ஏற்படுவதற்குக் காரணமாக இருந்த ஆண்டும் இஃதே. விஞ்ஞான அறிவிற்கு வித்திட்ட காலமும் இஃதென்றே கூறுதல் வேண்டும். இந்த ஆண்டிலே ஒரு புறம் போர்டு (Ford) மோட்டார் உற்பத்தி; மற்றொரு புறம் மின்சாரத்தின் மூலம் பலப்பல புதுமைகள்; பிறிதோர் புறம் மேரி கியூரி அம்மையாரின் 'எக்ஸ்ரே'(X Ray) ரேடியம் என்னும் புதுப்பொருள் கண்டுபிடிப்பு. இவ்விதம் அவ்வாண்டில் உலகமுழுதும் ஓர் புத்துணர்ச்சி தோன்றியிருத்தலை நான் எண்ணிப் பார்த்து மகிழ்கின்றேன். நம் தமிழ் நாட்டிலும் பரிதிமாற் கலைஞர், மறைமலை அடிகள், மணவழகர் முதலிய அறிஞர்கள் தமிழின் தூய்மைக்காகவும், தமிழ்மொழியின் வளர்ச்சிக்காகவும் உழைக்க முன் வந்ததும் இந்த ஆண்டே என்பதையும் உணர்கின்றேன். அருட்பா மருட்பா கட்சி, ஆத்திக நாத்திகக் கட்சி, பெண் கல்வி வளர்ச்சிக்காகக் கிளர்ச்சி, வகுப்பு வெறி ஒழிப்புக்காகக் கிளர்ச்சி முதலிய எல்லாச் சீர்திருத்தங்களுக்கும் இந்த ஆண்டு ஓர் எல்லைக் கோடாகவே இருந்திருத்தலை அறிஞர்கள் எண்ணிப் பார்த்து மகிழ்வர் என்றே நான் நினைக்கின்றேன்.

இத்தகைய ஒரு நல்ல சூழ்நிலையிலே குணக் குன்றாய் நின்று, நல்லொழுக்கத்தின் வரம்பினையும் வழுவாமல் காத்து, அரிய பெரிய செயல்களை நம் நாட்டிலே புரிந்து, மிகவும் அமைதியோடு வாழ்ந்துவரும் காஞ்சி மணிமொழியார் தோன்றியிருப்பது பெரிதும் பாராட்டுதற்குரியதே ஆகும். இஃது இருபதாம் நூற்றாண்டின் அறுபதாவது ஆண்டாதலின் இவ்வுலக வளர்ச்சிக்கே மணிவிழாக் கொண்டாட வேண்டிய பெரு விழாவினை நினைப்பூட்டும் நன்னாளாக ஒளிர்கின்றது.

உலகப் பெருந் தலைவர்களெல்லாம் ஒன்று கூடி உலக ஒற்றுமைக்காகப் பாடுபட விழையும் இந்த அருமையான

பொற்காலத்திலே தமிழர்களாகிய நாமும் விழிப்புற்று நம் நாட்டின் சூழ்நிலையினை நன்கு எண்ணிப் பார்க்க வேண்டியவர்களாகவே இருக்கின்றோம்.

1937-ஆம் ஆண்டு நம் தமிழ் நாட்டுக்கும் மொழிக்கும் நேர இருந்த பெரிய துன்ப நிகழ்ச்சியைக் குறித்துப் பெரியார் ஈ. வே. ராவும், மறைமலை அடிகளும், சோமசுந்தர பாரதியாரும் பலப்பல கட்டுரைகள் எழுதியும் நம் நாட்டு மக்களுள் பெரும்பாலோர் சிறிதும் விழிப்புறாமல், தாமுண்டு—தம் குடும்பம் உண்டு என்று எண்ணிக்கொண்டு சிறிதும் கவலையில்லாமலேயே இருந்த, அந்த வேளையிலே ஓர் இளைஞர் மிக்க உணர்ச்சியோடு தெருத் தெருவாகப் பேசியும், துண்டிதழ்கள் ஆயிரக்கணக்கில் அச்சடித்து உதவியும் மக்களை விழிப்புறச் செய்த அரிய செயல்களை எவரும் மறந்திருக்கமாட்டார்கள் என்றே எண்ணுகின்றேன். அவர் செய்த கிளர்ச்சி எத்தனையோ இளைஞர்களை விழிப்புறச் செய்ததை நான் கண்கூடாகக் கண்டிருக்கிறேன். அந்த இளைஞர் உணர்ச்சியோடு பேசும்போது 'கணீர், கணீர்' என்ற ஒலி தோன்றியதைக் கொண்டே மக்கள் பலரும் இவர் தம் பெயருக்கேற்ப மணிமொழியாளராகவே திகழ்கின்றார் என்று கூறிக் கொள்வதையும் நான் கேட்டிருக்கின்றேன். ஒரு நாள் மாலை, சென்னை மவுண்ட் ரோடு என்னும் பகுதியிலே பி. ஆர். அன் சன்ஸ் என்னும் இடத்துக்கு அருகிலே நம் காஞ்சி மணிமொழியார் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியிலே ஈடுபட்டுப் பேசிக்கொண்டே இருக்கின்றார். இந்தக் கிளர்ச்சியிலே பெரிதும் வெறுப்புக் கொண்டிருந்த பிறிதோர் இளைஞர் அந்த வழியிலே மெதுவாக வந்து கொண்டிருந்தார். அவர் காதுகளிலே நம் மணிமொழியாரின் உணர்ச்சி மிக்க சொற்பொழிவின் இரண்டொரு பகுதிகள் விழுந்தன. அந்தச் சொற்றொடர்கள் அந்த இளைஞரை நிலைத்து நிற்கச் செய்துவிட்டன. நம் மணிமொழியார் கட்டாய இந்தியால் நம் மொழிக்கு நேர இருக்கும் தீங்குகளை விளக்கிக் கூறி, "இந்த விளைவைக் குறித்து

எவர் கவலை கொள்கின்றனர். எத்துணை இளைஞர்கள் இதை எண்ணிப் பார்த்து உள்ளந் துடிக்கின்றனர். எத்துணைப் புலவர்கள் கவலை கொண்டு தொண்டாற்ற முன்வந்திருக்கின்றனர். ஒருவருக்கும் ஒரு சிறிதும் கவலையே யில்லையே'' என்னும் வகையில் பேசிக்கொண்டே இருந்தார். இந்த இயக்கத்தின்மீது பெரிதும் வெறுப்பாக இருந்த இளைஞர் அன்று முதல் இந்தி எதிர்ப்பு இயக்கத்திலே கலந்துகொண்டு தொண்டாற்றலாயினர். இவ்விதம் பலப்பல இளைஞர்கள் நம் மணிமொழியார் பேச்சினல் தமிழுக்குத் தொண்டு புரிய வந்திருக்கின்றனர்.

மணிமொழியாராய வீர இளஞ்சிங்கம் நம் தாய் மொழிக்காகவும் நாட்டு நலனுக்காகவும் பலமுறை சிறை சென்றிருந்தலையும், தமிழர் அனைவரும் நன்கு அறிவர். இந்தத் தமிழ் வீரரை, பொதுநல நோக்காளரை, தவறு கண்டபோது சிறிதும் அஞ்சாமல் கண்டித்துப் பேசும் பேச்சு வன்மையாளரை நான் சுமார் முப்பது ஆண்டுகட்கு மேலாகவே அறிவேன்.

காஞ்சி மணிமொழியார் காஞ்சி மாநகரத்திலேயே பல அரிய பெரிய செயல்களைத் தம் இளம் பருவ முதற்கொண்டே செய்து வந்ததை நான் அவரிடமே கேட்டு மகிழ்ந்திருக்கின்றேன். இவர் நடத்தி வந்த போர்வாள் என்னும் புதுமை வாரப் பதிப்புச் சுவடிகள் இன்றைக்கும் நம் நாட்டுக்கு வேண்டிய கூர் வாளாகவே இருந்து வருகிறது. உயர்திரு இராஜாஜி அவர்கள் வெளியிட்ட முதியோர் கல்விச் சுவடியில் தாம் கண்ட குற்றங்களை ஒரு மாபெருங் கூட்டத்திலே சுமார் இரண்டு மணி நேரம் பலரும் வியக்கும் வகையிலே நம் மணிமொழியார் பேசியதை எவரும் மறந்திருக்க மாட்டார்கள்.

பேச்சோடு நில்லாமல் செயலிலும் வீரராகத் திகழ்ந்தவர் நம் நாட்டிலே மிகவும் சிலரே ஆவர். நம் மணிமொழியார் தாம் மேற்கொள்ளும் எந்தச் செயலையும் சிக்கனமான

முறையிலே செய்து முடித்துக் காட்டும் இயல்பு வாய்ந்த செயல்வீரர் என்பதை 1948-ஆம் ஆண்டு நிகழ்ந்த மாபெருங் கூட்டங்களே சான்று பகரும்.

இன்று 'மாணவர் மன்றம்' மிகச் சிறந்த நிலையிலே நின்று திகழ்வதற்கு மூலகாரணமாக இருந்த ஒரு சில அன்பர்களுள் இவரும் ஒருவர் என்பதை மன்றத்தார் வெள்ளி விழா மலரிலேயே விளக்கியிருக்கின்றனர். தமிழாசிரியர் மாநாடுகட்கும் பலமுறை நம் மணிமொழியார் உதவியிருத்தலைப் புலவர் பலரும் உணர்வர். இவர் மேற்கொள்ளாத பொதுப் பணிகளே இல்லை என்று கூறினாலும் பொருந்தும் என்றே நான் கூறுவேன். பகுத்தறிவுக்கு ஏற்றதாகவும் நம் நாட்டு நலனுக்கு இன்றியமையாததாகவும் இருக்கும் எந்தப் பொதுப் பணியிலும் இவர் முன்வந்து உழைக்கத் தயங்கியதே இல்லை.

இத்தகைய அறிஞருக்கு மணிவிழா மிகச் சிறப்பாகவே தமிழர் அனைவரும் ஒன்று சேர்ந்து கொண்டாடுதல் வேண்டும் என்பது என் எண்ணம். எனக்கு உடல் நன்னிலையில் இருந்தால் நானே பலப்பல இடங்கட்கும் சென்று பாடுபட்டு இப் பெருவிழாவினை இப்போது நிகழ இருப்பதற்கும் பன்மடங்கு சிறப்பாக நடத்திக் காட்டுவேன். உடல் தளர்ச்சியாலோ குடும்பச் சூழ்நிலை காரணமாகவோ அறிஞர் மணிமொழியார் இரண்டோராண்டுகளாக அமைதியான தன்மையில் இருந்து வருகின்றார். அவருக்கு உள்ளக் கிளர்ச்சியை உண்டாக்குவதற்கு இந்த மணி விழாநல்ல வாய்ப்பாக இருக்க வேண்டும்.

நம் நாட்டு மக்கள் எல்லா நலன்களும் குறைவற அமைந்து விட்டாற்போல் அமைதியாக இருப்பதாகவே எனக்குத் தோன்றுகிறது. முன்பு நம்மவர்களை ஆட்டிப் படைத்த இந்தி மொழி மேலும் மேலும் நமக்குத் தொல்லை தர இருத்தலை மணிமொழியார் போன்ற உணர்ச்சிமிக்க பேரன்பர்கள் முன்வந்து மக்களுக்கு உணர்த்தவேண்டிய

காலம் நெருங்கிவிட்டது. அன்றியும் உலகமெல்லாம் விஞ்ஞான வளர்ச்சியில் முன்னேறியுள்ள இந்தக் காலத்திலே நம் நாட்டு மக்களும் விஞ்ஞானத்திலும், வாணிகத் துறையிலும் உழவு, கைத்தொழில் முதலிய பலப்பல துறைகளிலும் முன்னேறுதற்கு முயற்சிப்பதும் இன்றியமையாத கடனாகத் தோன்றுகிறது. இதோடு நில்லாமல் உலகமெல்லாம் ஒன்று கூடிப் பேசி ஒற்றுமை காண விழையும் இந்த நல்ல காலத்தை நம் நாட்டு மக்களும் உணர்ந்து நம் நாட்டில் உள்ள பலப்பல கட்சிகளையும் ஒன்று சேர்த்து நம் நாட்டின் ஒற்றுமைக்காகப் பாடுபடப் பயன்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். அவ்விதம் ஒன்றுபட்டு உழைத்தால்தான் எதையும் செய்துமுடிக்க இயலும். ஆதலின் நம் மணிவிழாத் தலைவர் மேலும் அமைதியாக இருக்க விழையாது 1937–ஆம் ஆண்டில் முன்வந்த அதே உணர்ச்சியுடனும் உள்ளத் துடிப்புடனும் முன்வந்து தம் வெண்கல நாத மொழியால் மக்களை விழிப்புறச் செய்தல் வேண்டும் என்பது என் பேரவல். ஆதலால் அறனறிந்து புரியத்தக்க மூத்த அறிவுடையராகத் திகழும் மணிமொழியார், நம் நாட்டுக்கு உற்ற நோய் நீக்கி உறுஅமை முற்காக்க முன்வந்து அரும் பெருந் தொண்டுகள் ஆற்றி நம் நாட்டினையும், மொழியினையும் காப்பாராக என்று பன்முறையும் நான் அவரை வேண்டிக் கொள்கின்றேன். அவ்விதம் பொதுத் தொண்டுகள் ஆற்றுதற்கு அவர்தமக்கு வேண்டிய எல்லா நலன்களையும் அமைத்துத்தரப் பொதுமக்களும் செல்வர்களும் முன்வந்து உதவுதலும் வேண்டும். இவ்வுலகத்துக்கே மணிவிழாவாக இந்த மணிவிழா விளங்கித் திகழும் வகையில் நம் மணிவிழாத் தலைவர் காஞ்சி மணிமொழியார் அவர்கள் பல்லாண்டு பல்லாண்டு வாழ்வாராக என நான் உளமார வாழ்த்துகின்றேன். அவர்தம் மக்களும் சுற்றமும் அவர் போன்றே மேன்மேலும் பேரும் புகழும் எடுத்துப் பெருவாழ்வு வாழ்வார்களாக எனவும் அவர்தம் குடும்பத்தாரையும் நான் வாழ்த்துகிறேன்.




1948 - ல் சென்னை இந்து தியாலாஜிகல் பள்ளியின்முன் அறப்போர் வீரர்கள் செய்யும் இந்தி எதிர்ப்பு மறியலை முன்நின்று நடத்தும் மணிமொழியார் (கருஞ்சட்டையுடன் வலப்புறம் நிற்பவர்)



1951 - ல் சென்னையில் நடைபெற்ற தி. மு. க. முதல்
மாநில மாநாட்டில் ஏனைய தலைவர்களுடன்
மணிமொழியார்.

# நாடு வாழத் தான் வாழும் நல்லறிஞர்

[ஊ. ஜயராமன் பொதுச்செயலாளர்,
தமிழ் எழுத்தாளர் சங்கம், சென்னை.]

---

குள்ளமான உருவம்; மாநிற மேனி; கட்டான உடல்; கருமை குன்றாத தலைமுடி; வெள்ளைக் குப்பாயம் (ஜுப்பா); கைத்தறி வேட்டி; புன்னகை தவழும் முகம்; அன்பு நிறைந்த பேச்சு—இவைகளைக் கொண்டவர்தான் காஞ்சி மணிமொழியார். 1944—ஆம் வருடம் என்று சொல்லலாம். அப்போது நான் படித்துக்கொண்டிருந்த காலம். சென்னை லிங்கிச் செட்டித் தெருவில் "தமிழர் கழகம்" என்ற ஓர் அமைப்பு இன்று 20—வது வட்ட நகரமன்றச் சூழவையினராக இருக்கும் என் நண்பர் மா. சு. சம்பந்தன் அவர்களால் தோற்றுவிக்கப்பட்டது. அதன் செயலாளராக இன்று பிராட்வேயில் 'ஆங்கிலக் கல்வி நிலையம்' என்ற ஓர் அழகிய பயிற்சிப் பள்ளியை நடத்திவரும் திரு. கு. சண்முகசுந்தரம் அவர்கள் இருந்தார்கள். நண்பர் சண்முகசுந்தரம் அவர்கள் மிகத் துடிப்பு வாய்ந்த ஓர் இளைஞராவார். அவர் மூலமும், மா. சு. சம்பந்தன் அவர்கள் மூலமும் 'தமிழர் கழக' உறுப்பினர்களான எங்களுக்கு அறிமுகமானவர், இன்று பச்சையப்பன் கல்லூரியில் பொருளாதாரப் பேராசிரியராக விளங்கி வரும் என் மதிப்புக்குரிய தோழர் மா. இளஞ்செழியன் அவர்கள். இளஞ்செழியன் போன்ற பல சீரிய இளைஞர்களைத் தமிழகத்திற்குத் தந்த பெருமை லிங்கி செட்டித் தெரு 'தமிழர் கழகத்தையே' சாரும். இதில் அங்கம் வகித்தவர்களில் பலர் இன்று நாட்டுப் பணிகள் பலவற்றில் முக்கிய இடம் பெற்றுத் திகழ்கிறார்கள்.

'தமிழர் கழகத்தின்' மூலம் தமிழகத்திற்குத் தொண்டு புரிய முற்பட்ட மா. இளஞ்செழியன் அவர்களின் அருமைத்

தந்தையாரே காஞ்சி மணிமொழியார் ஆவார். ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உண்டு. அது, 'ஒருவனைப்பற்றி நாம் அறிந்துகொள்ள வேண்டுமானால் முதலில் அவனுடைய நண்பர்களைக் குறித்துத் தெரிந்துகொள்ள வேண்டும்'— என்பதாகும். தமிழில் வேறு விதமான முதுமொழி ஒன்று உண்டு. அது திருக்குறளிலேயே இடம் பெற்றுள்ளது. "தக்கார் தகவிலர் என்பது அவரவர், எச்சத்தால் காணப்படும்" என்னும் குறளே அது. இதற்குப் பலவிதமான உரைகள் கூறப்பட்டாலும், 'ஒருவன் நடுநிலைமை உள்ளவன் அல்லது இல்லாதவன் என்பது அவனுடைய மக்களின் வாழ்வு மூலம் தெரிந்துவிடும்' என்கிற பொருள் பொருத்தமுடையதாகும். இதற்கு விதிவிலக்குகள் காணப்படுகின்றனவே என்றால், அது பெற்றோர்களின் குறையைச் சுட்டுமேயொழிய வள்ளுவன் வாய்மொழியை வழுப்படுத்தி விடாது. இந்தக் குறளின்படி பார்த்தால் நண்பர் மா. இளஞ்செழியனின் தந்தையார் ஒரு தக்கார் என்று சொல்லத்தக்க எல்லாத் தகுதிகளையும் பெற்றவர் என்று தயங்காமல் கூறிவிடலாம். இளஞ்செழியனை நிகர்த்த ஓர் அருமையான புதல்வரைக் காஞ்சி மணிமொழியாரை நிகர்த்த ஓர் அருமையான தந்தையார்தான் ஈன முடியும் என்பது நன்கு துலங்குகிறது.

இளஞ்செழியனோடு நான் தொடர்புகொண்ட காலத்தில் சென்னைப் பவழக்காரத் தெருவில் இருந்த அவருடைய வீட்டிற்கு நான் அடிக்கடி போவது வழக்கம். அங்கு இருந்த அச்சகத்தில் ஓர் குள்ளமான உருவம் ஓயாமல் ஒழியாமல் வேலை செய்துகொண்டேயிருக்கும். யாரிடத்திலும் அதிகமாகப் பேசாமலும், நேரத்தை வீணாகக் கழிக்காமலும், ஒழுங்கும் சீர்மையும் குன்றாமலும் அச்சகப் பொறுப்புகளைக் கவனித்து வந்த அந்த உருவம் தம் தந்தையார்தாம் என்பதை இளஞ்செழியன் சொல்லித்தான் நான் அறிந்துகொண்டேன். அத்தனை எளிமையும், பகட்டின்மையும் கொண்டவர் காஞ்சி மணிமொழியார். தம்மை யார் என்று தெரி

வித்துக் கொள்ளாமலே அடக்கமாக இருந்து அரும்பணிகள் பல புரிந்துவரும் பெரியவர் அவர். இம்மாதிரி மனிதர்கள் குறைந்துவிட்ட காரணத்தால்தான் தமிழகம் இன்று ஆரவாரத்திற்கு அதிக இடங்கொடுத்து ஒழுங்கான முன் னேற்றத்தை இழந்து தவித்து வருகிறது. வெளிப்படைப் பணி புரிவோர் பலர் இருந்தாலும், உள்ளார்ந்த பணி புரி வோர் சிலராயினும் இல்லாவிட்டால் எந்த நாடும் தழைப்பது கடினம். எனவேதான் தமிழகம் இன்று காஞ்சி மணிமொழி யாரை அவருடைய அறுபதாம் ஆண்டு நிறைவில் போற்றக் கடமைப்பட்டுள்ளது.

காஞ்சி மணிமொழியார் இளமையிலிருந்தே ஓர் துடிப் புள்ள மனிதராக இருந்திருக்கிறார். இவருக்கு உள்ள அஞ்சாமையும், தன்னம்பிக்கையும் இவர் காஞ்சீபுரம் பச்சை யப்பன் கிளைப் பள்ளியில் தமிழாசிரியராக இருந்த போதே வெளிப்பட்டுள்ளன. வாழ்க்கையில் பின் தங்கிய மாணவர்களையும், சாதியில் தாழ்ந்துவிட்ட மாணவர்களையும், கல்வியில் ஊக்கங் குன்றிய மாணவர்களையும் குதூகல மூட்டி, உதவிச் சம்பளங்கள் வாங்கித் தந்து, ஒழுங்கு படுத்தி அவர்களை உயரச் செய்த ஒரு காரியமே இவருடைய மேன்மை யைப் புலப்படுத்தும் கண்ணாடியாகும். அப்பள்ளியில் தமிழுக்கு அவர் புரிந்த தொண்டு மதிப்பரியது என்னலாம். பொதுக்கூட்டம் என்றால் என்ன என்பதை மிகுதியாக அறியாதிருந்த அக்காலத்தில், பண்டிதர் முதல் பாமரர் வரை பயன்பெறும் வண்ணம் ஏராளமான பொதுக்கூட்டங்களைக் கூட்டி அறிமுகமாக வேண்டிய தலைவர்கள் பலரை மக்களுக்கு அறிமுகப் படுத்தித் தமிழுணர்ச்சியையும் தமிழகப் பற்றை யும் ஏற்படுத்திய வித்தகர் காஞ்சி மணிமொழியாரே யாவார். காஞ்சிமா நகரின் பண்டைப் பெருமைகளை அம்மாநகரின் மக்களுக்குச் சீரிய முறையில் உணர்த்திய சிறந்தோருள் இவர் முக்கியமானவர் என்னலாம்.

காஞ்சி மாநகர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் பிருந்தே எண்ணிறந்த சிறப்புகளைத் தன்னகத்தே கொண்டு

ஒளிர்ந்துவரும் ஒரு பட்டணமாகும். தமிழருடைய நாகரிகம் விழுது விட்டுத் தழைத்துப் பெருமரமாகிக் கொம்புங் கிளையும் இலையும்பூவும் காயும்பழமுமாகக் குலுங்கிய நகரம் காஞ்சி மாநகரம் என்பதை வரலாறு வரையறுத்துக் கூறும். சமணம், சாக்கியம், சைவம், வைணவம் ஆகிய மதங்கள் தோன்றி வளர்ந்து மக்களின் வாழ்வை ஆட்டிவைத்த பகுதி காஞ்சிப் பகுதிதான். தொண்டைமான் இளந்திரையன், பல்லவச் சிங்கம் மகேந்திரவர்மன், மாமல்லன் நரசிம்மவர்மன், கலம்பகம் கொண்ட நந்திவர்மன், சோழ மன்னன் இராசராசன், கங்கைகொண்ட இராசேந்திரன், உலாவுக்குரிய குலோத்துங்கன் போன்ற வரையற்ற வேந்தர்களால் ஆளப்பட்ட பெருமையுடையது காஞ்சி மாநகர். பல்லவப் பேரரசுக்குத் தலைநகராக இருந்து ஒளியுற்று விளங்கியதும் இதுவேயாகும். நாளந்தா பல்கலைக் கழகத்தின் பேராசிரியக் கட்டில்களை அலங்கரித்த மிகுதிப்பட்ட பௌத்தப் புலவர்கள் வாழ்ந்த இடம் காஞ்சீபுரமே. வண்ணக் களஞ்சியம் நாகலிங்க முனிவர் என்ற அருங்கவிஞர் தமிழ் ஓம்பியது காஞ்சியிலேயேயாம். இன்று தென்னாட்டின் முதுகெலும்பாகவும், தமிழ் நாட்டின் தலைச்சோறாகவும், உலகத்தின் பேரறிவாகவும் ஒளிவிட்டுத் துலங்கி, ஏராளமான இளைஞர்களின் உள்ளங்களைக் கவர்ந்து, ஓர் ஆற்றல் வாய்ந்த நீதி வழிப்பட்ட இயக்கத்தைத் தலைமை தாங்கி நடத்திவரும் அறிஞர் அண்ணா அவர்கள் வசித்துவரும் திருப்பதி காஞ்சிப் பதியேயாகும். இவ்வளவு சிறப்புடைய ஒரு நகரத்தில் தோன்றி வளர்ந்து வரம்பிகந்த திருப்பணிகள் புரிந்து நாடு வாழத் தான் வாழும் வன்தொண்டர் காஞ்சி மணிமொழியார் என்றால், அவரைப் பற்றி அதிகம் சொல்லி விளம்பரப் படுத்தவேண்டியது அவசியமில்லையல்லவா?

மணிமொழியார் தமிழில்தேர்ந்த புலமையுள்ளவராவார். வெண்பாப் புலி வேலுசாமிப் பிள்ளை என்ற மாப்புலவரிடம் தமிழை முறையாகக் கற்றவர். வெண்பாப் புலி பிள்ளை அவர்கள் பல காவியங்களையும், புராணங்களையும் வெண்பாவி

லேயே இயற்றிய வித்தகர் என்று புகல்கிறார்கள். ஒரு நாளைக்கு அவர் நூறு அல்லது நூற்றைம்பது வெண்பாக்களாவது இயற்றாது உறங்கச் செல்லமாட்டாராம். அவர் இயற்றும் அத்தனை வெண்பாக்களும் படிப்பதற்கு மதுரம் பழுத்துச் சுவைக்கும் என்று உரைக்கின்றனர். அவ்வெண்பாக்களை அவர் உட்கார்ந்துகொண்டே சொல்ல, மணிமொழியார் அவற்றை வேக வேகமாக எழுதி முடிப்பாராம். அவருடைய சொல்லிலும் சரி, இவருடைய எழுத்திலும் சரி ஒரு சிறு குற்றத்தையும் எவரும் காணமுடியாதாம். அத்தனை கீழ்ப்படிவும் திறமையும் உள்ள மாணவராகக் காஞ்சி மணிமொழியார் திகழ்ந்தார். வேலுசாமிப் பிள்ளை இட்ட அடிப்படை மணிமொழியாரைப் பின்னர் ஒரு சீரிய பள்ளியாசிரியராகவும், பத்திரிகையாசிரியராகவும் ஆக்கியது என்று தடையின்றிக் கூறலாம்.

"செங்குந்த மித்திரன்" என்கிற மாதப் பத்திரிகை தமிழகத்தின் வரலாற்றில் ஒரு நேர்த்தியான இடத்தைப் பெற்றதாகும். அது ஒரு குறிப்பிட்ட சமுகத்தாருக்கே உரியது என்று சொல்லப்பட்டாலும், அதில் வெளியான கதை—கட்டுரைகள் தமிழகத்தின் பொதுநலனைக் குறிக்கொண்டே மக்களிடைத் தவழ்ந்தன. 'செங்குந்தமித்திரன்' அச்சகம் ஊரறிந்த ஓர் தொழிற்சாலையாக விளங்கியது; இன்றும் விளங்குகிறது. இச் 'செங்குந்தமித்திரனின்' நல்லாசிரியராகப் பல்லாண்டுகள் உழைத்துத் தன் வன்மையையும், தன்மையையும் காட்டியவர் காஞ்சி மணிமொழியார். அன்று அப்பத்திரிகையில் அவர் எழுதிய தலையங்கங்கள் இன்றும் நம் மனத்தைவிட்டு அகலாதனவாகும். "போர்வாள்" என்கிற பெயரைக் கேட்கும்போதே தமிழ்ப் பகைவர்கள் அஞ்சி நடுங்குவதை நாம் காணமுடிகிறது. இப்பத்திரிகையை ஓர் அறிவு வாளாகக் கொண்டு பயனற்ற பழமையையும், வீணான பழக்க வழக்கங்களையும், கலங்கிய கருத்துக்களையும் காஞ்சி மணிமொழியாரும் அவருடைய திருப்புதல்வர் மா. இளஞ்செழியனும் ஓட ஓட விரட்டினர். போர்வாளின்

வீச்சுகள் எதிரிகளைத் தூர விலக்கியும், தமிழர்களை ஒன்று சேர்த்தும், பொதுவறிவை ஓம்பியும், அரசியலுணர்வைத் தட்டியெழுப்பியும் மிக இனிய தொண்டுகளை அஞ்சாமல் புரிந்தன. அத்தாளின் பிரதிகளை இன்று படிப்பவனும் கோழையாயினும் வீரம் பெறமுடியும்.

இந்தி எதிர்ப்புப்போரில் மணிமொழியாருக்குக் கணிசமான பங்கு உண்டு. 1938—39-ஆம் வருடங்களில் நடந்த கட்டாய இந்தி எதிர்ப்பியக்கத்தில் முன்னணியில் நின்ற ஒரு சில பேர்களில் மணிமொழியார் முக்கியமானவராவார். அவர் தான் சென்னையில் முதன் முதலாக ஓர் அரும்பெரும் ஊர் வலத்தை இந்திக்கு எதிராக நடத்திக் காட்டினார். அச்சமயத்தில் அவருக்குத் துணையாக இருந்தும், வழி காட்டியும் உதவியவர்கள் தமிழ்த் தாத்தா மயிலை சிவமுத்தும், நல்லறிஞர் செ. தெ. நாயகமுமாவர். இம்மூவரும் அப்போது சென்னையில் ஏராளமான கூட்டங்களைக் கூட்டி மக்களிடையே இந்தி எதிர்ப்பையும், தமிழ் விருப்பையும் ஊட்டினர். அந்தப் போர் வெற்றி பெற்றில்லாவிட்டால், இந்தி வெள்ளத்தில் தமிழ் என்றோ மூழ்கடிக்கப்பட்டிருக்கும். மறுபடியும் 1948-ல் கிளர்ந்தெழுந்த இந்தி எதிர்ப்புப் போரையும் மணிமொழியார் முன்னின்று நடத்தினார். அப்போது தமிழ்க் கடல் மறைமலையடிகளார் தலைமையில் சென்னை செயின்ட் மேரி மண்டபத்தில் இவர் செயலாளராக இருந்து நடத்திக் காட்டிய இந்தி எதிர்ப்பு மாநாட்டைத் தமிழர்கள் என்றும் மறக்கமுடியாது. அம்மாநாட்டில் தமிழரசுக் கழகத் தலைவர் மா. பொ. சிவஞானமும், காங்கிரஸ் தலைவர் டி. செங்கல்வாராயனும், திராவிடர் கழகத் தலைவர் இராமசாமிப் பெரியாரும், திராவிட இளைஞர் தலைவர் அறிஞர் அண்ணாவும் ஒரே மேடையில் தோன்றிக் கட்டாய இந்தியை எதிர்த்துப் புரிந்த முழக்கங்கள் இன்று நினைத்தாலும் புல்லரிப்பை உண்டாக்குவனவாகும். அறிஞர் அண்ணா அன்று கொட்டிய போர் முரசு தமிழர்களைப் போதுமான

அளவு விழிக்கச் செய்தது என்பதை எவரும் மறுக்கமுடியாது.

பழகுவதற்கு மிருதியும் எளிமையும், இனிமையும் வாய்ந்தவர் காஞ்சி மணிமொழியார். என் போன்றவர்களை அவர் எப்போதாவது கண்டுவிட்டால் சிறிது நேரமாவது நலம் விசாரிக்காமல் அனுப்பமாட்டார். எப்போதும் யாருக்கும் எந்த நேரத்திலும் உதவும் குணம் அவருக்கு உண்டு. இரவு எத்தனை மணியாயிருப்பினும் யாருக்காவது ஏதாவது உதவி தேவையாயிருந்தால் உடனே எழுந்து வந்து கவனித்து விட்டுப் போவது அவருடைய இயல்பான வழக்கம். மணிமொழியாருக்குப் பணத்தில் அதிகப் பற்றுக் கிடையாது. தனக்கும், தன்னுடைய குடும்பத்துக்கும் போதுமான அளவு வருவாய் இருந்தால், அதோடு திருப்தியடையும் மனிதர் அவர். அவர் விரும்பியிருந்தால் தன்னுடைய அச்சகத்தின் மூலமே ஏராளமான பொருளை ஈட்டியிருக்க முடியும். எதைப் பற்றியும் கவலைப்படாமல் பொதுத் தொண்டிலேயே ஈடுபட்டுத் தன்னை உயர்த்திக் கொள்ளாதவர்களில் இவரும் ஒருவர். இவர் தனக்காகச் செய்து கொண்ட ஒரே ஒரு காரியம் தன் புதல்வர்களை நல்ல கல்வியறிவுள்ளவர்களாக ஆக்கியதுதான். இவருடைய மூத்த திருமகனார் மா. இளஞ்செழியன் அவர்கள் தென்னகத்தின் பொது வாழ்வில் ஒரு முக்கியப் பங்கு கொள்ளக்கூடிய எல்லாவிதத் தகுதியும் திறமையும் பெற்றவராவர். இத்தகைய மேலான ஒரு குடும்பத்தோடு நாட்டுத் தொண்டையும் கவனித்துக்கொண்டு மணிமொழியார் மாண்புடன் நீண்ட காலம் வாழ வேண்டும் என்பது என் அவா. திராவிட மாநிலம் இவரை என்றும் மறக்காது என்பது என்னுடைய துணிபு.

வாழ்க மணிமொழியார்! வளர்க அவர் தொண்டு!!

# "போர்வாள்" தந்த பேரறச் செம்மல்

[இளமுருகு பொற்செல்வி, ஆசிரியர்,
"மக்களாட்சி"]

---

தென்னகம் தேய்ந்தது! தேய்ந்து கொண்டேயிருந்தது; மாய்ந்து ஒழியும் என்று மாற்றார் மனப்பால் குடித்துக் கொண்டிருந்த நேரம்! தொய்ந்து—தேய்ந்த இனத்தில் ஒரு எழுச்சி—ஆம்—உதயசூரியன் உதயமானான்! தமிழ் வாழ்க! தமிழர் நலம் பெறுக! தென்னாடாம் திராவிடம் திராவிடர்க்கே!! என்ற பேரொலி, முழங்கிடும் கடலோசையையும் அடக்கியபடி மேலெழுந்தது! மாற்றார் மருண்டனர்.

அனைவருடைய பார்வையும் அங்கே திரும்பியது! தடி ஊன்றிய முதியவர்! அவர் பக்கத்திலே தமிழர்களுக்கு எனது பணி அகத்தியம் தேவையென்று கூறும் குறுவடிவங் கொண்ட—**கொள்கை** ஞாயிறு அறிஞர் அண்ணா காட்சி அளித்தனர்! இன்பத்தமிழ் அவர்களுடைய நாவிலே நடம் புரிந்தது! நாடே திரண்டு எழுந்தது! உரிமை உணர்ச்சி கொண்டது! விடுதலை தோன்றியது! திராவிடநாடு தவழ்ந்தது!

எங்கள் நாடு எங்களுக்குத் தேவை! சூால்கள் கிளம்பின! திராவிடம் பெற்றே தீர்வோம்—தீரர் பரம்பரை நாங்கள் என்ற முழக்கம் முத்தமிழிலும் முழங்கின—ஆம்! இயல்—இசை—நாடகம் ஆகிய மூன்று உருவிலும் திராவிட விடுதலை முழக்கம் முழங்கிற்று நாடெங்கிலும்!

அந்த நோத்தில் திராவிடநாட்டுக்குப் "போர்வாள்" வடித்துக் கொடுத்து வளமும் பொலிவும் உருவாக்கியவர் நமது பெருமதிப்புக்குரிய காஞ்சி மணிமொழியார் அவர்கள்.

விடுதலை விரும்பிகளனைவரிடமும் தவருது காணமுடியும் 'திராவிட நாடு' இதழும் 'போர்வாள்' இதழும். தொண்டர்களுக்கு முறுக்கேற்றிய பெருமை பெற்றவை 'திராவிடநாடு' இதழும் 'போர்வாள்' இதழும்.

பத்திரிகை நடத்துவது என்பது பொதுவாகவே கடினமான காரியம். அதிலும் கொள்கைக்காக ஏடு என்ற வரையறை வகுத்து நடத்துவது மிக மிகக் கடினம். அதைக் காட்டிலும் திராவிட இன நல்வாழ்வுக்காகவும்—தமிழ் மொழி பேணவும் ஓர் ஏடு என்ருல் சொல்லமுடியாதது மட்டுமல்ல நினைக்கவே முடியாத காலம் அது. அந்தக்காலத்தில் கடமை கருதி 'போர்வாள்' தந்த போறத் துணைவர் காஞ்சி மணிமொழியார் அவர்கள் வாழ்க!

இன்று அவர்களுக்கு அறுபதாண்டு நிறைவு. நெஞ்சம் பூரிக்கிறது. நல்லவரும் வல்லவருமான அவர், அறுபதாண்டு நம்முடனிருந்து, அறமுணைத்து அறிவுவழி நடத்திச் செல்லும் அறிஞர் அண்ணுவின் வலது கரமாக வாழ்ந்து கொண்டிருக்கிருர் என்ற எண்ணத்தால் மட்டுமல்ல—சிறுவர்கள் கட்சி என்று சிந்தியாது சிரித்திடுவோர்க்கும், சீறிப்பாய்வோர்க்கும் ஓர் அறைகூவல்-அறுபதாண்டு அனுபவம்—ஆரம்ப முதல் பள்ளிப்பருவத்திலிருந்தே பொதுப்பணி—நாடு வாழ, நல்ல செயல் செய்த செம்மல்—கொள்கைக்காக வாழும் கோமான் பாரீர் பாரீர் என்று நாம் எடுத்துக் காட்டவும் துணையாக இருக்கிருரே, அது தரும் பூரிப்பு!

"போர்வாள்" தென்னகத்து விடுதலைப் படைக்குத் தந்திருக்கும் படைவீரர்கள் பலராகும்!

நமது நாடு பீடுநடைபோட உழுதவர்களில் நமது காஞ்சி மணிமொழியார் அவர்களும் ஒருவர். விதைக்க வலுவுள்ளவர்களை உருவாக்கியவர்களிலும் அவர் ஒருவர். அத்தகைய அன்பாளருக்கு—அறப்பணியாளருக்கு அறுபதாம் நிறைவு மணிவிழா!

மகிழ்கிறேன். வாழ்கவாழ்க பல்லாண்டு எனவாழ்த்து கிறேன். "வடித்துக் கொடுத்த வாள்—போர்வாள் என்னிட முண்டு" என்றும், "என்நாடு வாழ அதன் துணைகொண்டு பணியாற்ற நானுண்டு" என்றும் அவர்களுக்கு இந்த நேரத் தில் தெரிவித்துக்கொள்வதில் பெருமைப்படுகிறேன்,

---

# போற்றிப் பாராட்டத்தக்க உயர்ந்த தொண்டு

[புலவர் அன்புகணபதி, பொதுச் செயலாளர்,
மாநிலத் தமிழாசிரியர் கழகம்.]

---

திரு. காஞ்சிமணிமொழியார் அவர்களை 1938 முதல் நான் நன்கு அறிவேன். அந்தக் காலத்தில் அவர்கள் நாட்டுக் கும் மொழிக்குமாகச் செய்த தொண்டுகள் போற்றிப் பாராட்டத்தக்கன; என்றும் தமிழ்மக்களால் நெஞ்சில் நிறுத்த வேண்டுவன. அன்றுமுதல் தம் பேச்சாலும் எழுத் தாலும் தொடர்ந்து நாட்டுத் தொண்டாற்றி வருகிறார்கள். அவரும் அவர்தம் அருமை மகனார் நண்பர் மா. இளஞ்செழி யன் அவர்களும் சேர்ந்து நடத்திவந்த 'போர்வாள்' இதழ், பத்திரிகை உலகில் சிறந்தமொரு இடத்தைப் பெற்றிருந்தது.

அறுபது நிறையப் பெறும் இப்பெரியார், வாழ்வில் எல்லாச் சிறப்பும் பெற்று, தொடர்ந்து தொண்டுகள் பல ஆற்றி, உயர்ந்து சிறப்பாராக என உளமார வாழ்த்துகிறேன்; போற்றுகிறேன்.

---

# பல துறைகளிலும் பணியாற்றிய பெரியார்

[வி. ஏ. பாலகிருட்டிணன்,
செயலாளர், ஒய். எம். சி. ஏ. பட்டிமன்றம், சென்னை.]

---

காஞ்சி மணிமொழியாரிடம் சிறந்த பேச்சாற்றல் உண்டு; உயர்ந்த எழுத்துத் திறமை உண்டு; இனிமைமிக்க பண்பு உண்டு; தாய் அன்பு உண்டு. தமிழ்ப் பெரியார் திரு. வி. க. வைப் போல் அவர் பல துறைகளிலும் தொண்டாற்றியவர். தனக்கென வாழாப் பிறர்க்குரியாளர், நாட்டுக்கும், மொழிக்கும், மக்களுக்கும் தொண்டு செய்வதிலேயே இன்பம் காண்பவர்.

அவர் பல ஆண்டுகளாகத் தொடர்ந்து வெளியிட்ட "திராவிடர் நாட்குறிப்பு" தமிழ் இளைஞர்களுக்கும் மாணவ மாணவிகளுக்கும் பெரிதும்பயன்பட்டுள்ளது. அவர் நடத்தி வந்த "போர்வாள்" இதழோ சமுதாயக் கொடுமைகளை வெட்டி வீழ்த்திவந்த கூர்வாளாகக் காட்சியளித்து வந்தது. தன்னலத்தை ஒதுக்கித் தள்ளிப் பொதுநலமே பெரிதென் றெண்ணி, ஒன்றே குலம் என்னும் உயர்ந்த கொள்கையோடு தொண்டாற்றிவரும் காஞ்சி மணிமொழியார் அவர்களும், அவர் வழி நின்று அரும்பணியாற்றிவரும் அவர்தம் திரு மகனார்—என் அருமை நண்பர்—மா. இளஞ்செழியனார் அவர்களும் பல்லாண்டுகள் வாழ்ந்து நாட்டு மக்களின் முன் னேற்றத்திற்காகவும், விடுதலைக்காகவும் என்றென்றும் தொண்டாற்றுவார்களாக என வேண்டிக்கொள்கிறேன்

---

# அறிவுக்கு உணவளிக்கும் அரிய இதழை அளித்தவர்

## [ஜீவபந்து டி. எஸ். ஸ்ரீபால்]

---

1934ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் "செங்குந்த மித்தி ரன்" இதழில் "இந்நூலாசிரியராகிய டி. எஸ். ஸ்ரீபால் என் பவரை இளமை முதல் நாம் அறிவோம். ஒரு சாலை மாணாக் கராய்ப் பள்ளியில் ஒன்றாய்ப் பயின்ற அஞ்ஞான்றே......" எனக் கலியுகப் பிரகலாதன் என்ற என்னுடைய நாடக நூலுக்கு மதிப்புரை எழுதப்பட்டிருந்தது. இதனைக் கண்டதும் யான் வியப்புற்றேன். ஒருசாலை மாணாக்கர் என்று எழுதியுள்ளாரே அவர் யாராயிருக்கலாம் எனக் காஞ்சீபுரம் பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளியில் என்னுடன் பயின்ற நண்பர்களையெல்லாம் என் சிந்தையிலே நிறுத்திப் பார்த் தேன். புலனாகவில்லை. நேரே செங்குந்தமித்திரன் அலுவ லகம் சென்று ஆசிரியர் அறைக்குள் நுழைந்தேன். அங்கே 1909 ஆம் ஆண்டு முதல் 1919 ஆம் ஆண்டுவரை என்னு டன் அந்தப் பள்ளியில் ஒன்றாய்ப் பயின்ற நமது மணிமொழி யாரைக் கண்டேன். 1919ல் பிரிந்த நாங்கள் 1934ல் சந்திக்கிறோம் என்றால் எப்படி இருந்திருக்கும் எங்கள் நிலை—சொல்லவா வேண்டும். இருவரும் ஆனந்தக் கண் ணீர் சொரிந்தோம். ஒருவரையொருவர் நலம்கேட்டு அளவளாவிக் கொண்டோம். எங்கள் பள்ளிக்கூட வாழ்க்கையெல்லாம் எங்கள் அகக் கண்களிலே தோற்றமளித் தன. அந்நாட்களில் யானும் நமது மதிப்புக்குரிய மணி மொழியாரும் உடன் பிறந்தவர்கள்போல் பழகுவோம். அவருடைய பெற்றோரும் சகோதரர்களும் என்னை அன்பாக நேசிப்பார்கள். யான் அவர்கள் வீட்டுச் சிறுவர்களில் ஒருவ னாகவே விளங்கினேன். காலை மாலை இரு வேளையும் கல்வி

பயிலத் திரு. மணிமொழியார் இல்லத்திற்குத்தான் செல்வேன். அதுமட்டுமல்ல யானும் மணிமொழியாரும் அவருடைய சகோதரர்களும் அவர்கள் வீட்டுப் பின்புறத் திடலில் பாட்மெண்டன் (வலைபந்து) விளையாடுவோம். அன்று மணிமொழியாரிடம் கண்ட நட்பும் அன்பும் அறிவும் இன்று அவரிடம் மேலும் வளர்ந்து விளங்குகிறது. இளம் வயதிலேயே அவர் நேர்மையும் பொதுநலத்தொண்டில் ஆர்வமும் உடையவர். அவ்வழியிலே நின்று அவர் இந்நாள் வரையிலும் வாழ்க்கையைச் செலுத்தி வருவதால் அவர் தமிழகம் போற்றும் நிலையில் பல துறைகளிலும் சிறந்து விளங்குகிறார். அவர்தம் தன்னலமற்ற பொதுப்பணியால் எத்துணை இளைஞர்கள் நல்லறிவும் நற்பண்பும் பெற்று விளங்குகிறார்கள்! "போர்வாள்" என்றால் அறிவுக்கு விருந்தளிக்கும் அரிய இதழ் எனப் போற்றிப்படித்து இன்புற்ற எண்ணற்றவர்களை யான் நேரில் கண்டிருக்கின்றேன். அவர்தம் பலவேறு தியாகச்செயல்கள் பெரிதும் போற்றத்தக்கவை. அவரிடம் காணப்படும் நற்குணங்களுக்கும் நல்லறிவுக்கும் ஏற்ப அவருடைய திருமகனாகிய இளஞ்செழியனும் அறிவிற் சிறந்து திறமை மிகுந்து பண்பில் உயர்ந்து விளங்குவது பெருமகிழ்ச்சிக்கு உரியது. என்னிடம் அமைந்துள்ள நற்குணங்களும் சேவை மனப்பான்மையும் நமது மணிமொழியாரின் தொடர்பால் ஏற்பட்டவையே எனில் அது மிகையாகாது. "நல்லார்கள்போயவழி நாலடிப் போயினாலும் பொல்லாங்கு நீங்கிப் புகழும் புண்ணியமுமாகும்." என்ற ஆன்றோர் மொழி பொய்க்குமா? அத்தகைய எனது சிறந்த நண்பரும் அறிஞரும் ஆகிய காஞ்சி மணிமொழியாரின் அறுபதாம் ஆண்டு நிறைவு விழாவில் கலந்து கொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டதை எனது பாக்கியமாகவே கருதுகின்றேன். வாழ்க மணிமொழியார்! வளர்க அவர்தம் புகழும் சேவையும்!

———

# அயரா உழைப்பினர்—அரிய திறத்தினர்

[நாரண-துரைக்கண்ணன்,
ஆசிரியர், "பிரசண்ட விகடன்."]

---

காஞ்சி மணிமொழியாரை இருபது ஆண்டுகளுக்கு மேலாக நான் அறிவேன். இவர் "செங்குந்தமித்திரன்" இதழுக்கு ஆசிரியராக வந்த காலத்திலிருந்து, பத்திரிகாசிரியன் என்ற முறையில் அவரை அறிந்து பழகும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது. மிக இளமையிலிருந்தே சமூகத் தொண்டு புரிந்துவந்த இவர், செங்குந்தமித்திரன் வாயிலாகச் செய்துள்ள அருஞ்சேவை அனந்தம்.

வண்ணக்களஞ்சியம் காஞ்சி நாகலிங்க முனிவர், சமுதாயத்தொண்டில் பேரார்வமுடைய தி. அ. சண்முக முதலியார், பேராசிரியர் ம. சண்முகசுந்தர முதலியார் போன்றார் துணையுடன் தொடங்கிய தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கமும் "செங்குந்தமித்திரன்" இதழும், மணிமொழியாரின் அருந்திறலாலும் அயரா உழைப்பாலும், மேலும் சிறக்கலாயிற்று.

தாம் தோன்றிய சமூகத்தின் முன்னேற்றத்துக்காகத் தொண்டுபுரிய வேண்டுமென்ற சேவா மனப்பான்மை, காலப் போக்கில் தமிழ்ச் சமுதாயம் முழுவதுக்கும் அருந்தொண்டு ஆற்றவேண்டும் என்ற அளவுக்கு மணிமொழியாரின் பேருள்ளம் மலர்ந்தது. இதன் பயனாகத்தான் நீதிக் கட்சி, சுயமரியாதை இயக்கம், திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் ஆகியவைகளில் சேர்ந்து தொண்டாற்றும் உயர்நிலை இவருக்கு உண்டாயிற்று. "போர்வாள்" வாரப்பத்திரிகை வாயிலாகத் தமிழ் மக்களிடையே இவர் மொழிப்பற்றையும் இனப்பற்றையும் வெகுவாக வளர்த்ததை முக்கியமாகக் குறிப்பிடவேண்டும்.

மணிமொழியார் தாம் மட்டுமல்லாமல், தம் குமாரர்களையும் நன்கு படிக்கவைத்துக் கலை விற்பன்னர்களாக்கிப் பொதுத் தொண்டில் ஈடுபடுத்தியிருக்கிறார். இவருடைய மூத்த குமாரர் மா. இளஞ்செழியனுடைய தமிழ்த் தொண்டையும் சமூகத் தொண்டையும் நாடு நன்கறியும்.

மணிமொழியார் யாருடனும் இனிமையாகப் பழகும் நற்பண்பாளர். இவருடைய பேச்சும் செயலும் எவரையும் எளிதில் கவர்ந்துவிடும்.

மணிமொழியார் சமூகத் தொண்டர் மட்டுமல்லர்; சிறந்த பேச்சாளர்; எழுத்தாளர்; பத்திரிகாசிரியர்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த மணிமொழியாருக்கு மணிவிழா கொண்டாடுவது மிகப் பொருத்தமாகும்.

மணிமொழியார் நீடூழி வாழ்க; இவருடைய பொதுத் தொண்டு சிறந்து ஓங்குக.

---


## எடுத்த செயலை இனிது முடிப்பவர்

### [மயிலை சீனி. வேங்கடசாமி]


---

கடவுளுக்குத் தொண்டு செய்வதைவிட மக்களுக்குத் தொண்டு செய்வது சிறந்த நற்றொண்டாகும். மக்கட்குத் தொண்டு இயற்றும் வாய்ப்பு எல்லோருக்கும் வாய்ப்பது இல்லை. காஞ்சி மணிமொழியார் மக்களுக்குத் தொண்டு செய்யும் வாய்ப்புப் பெற்றார். அந்த நல்ல வாய்ப்பினை நல்ல முறையில் பயன்படுத்தித் தொண்டாற்றினர். அவருடைய வாழ்க்கை தமிழரின் பொதுநலத் தொண்டாக அமைந்திருந்தது. பழகுவதற்கு இனியவர். ஊக்கமும் உறுதியும் உடையவர். எடுத்துக்கொண்ட செயலை இனிது முடிக்கும்

இயல்பினர். பொதுப்பணிபுரிவதில் ஆர்வமும் சுறுசுறுப்பும் உடையவர். இப்பெரியாருடன் பழகும் நல்வாய்ப்பு எனக்குப் பல ஆண்டுகளாகக் கிடைத்துவருகிறது. மணி மொழியார் நல்லாசிரியராகவும் திகழ்ந்தார். சொற்பொழிவு கள் பல செய்து சீர்திருத்தக் கருத்துக்களைப் பரப்பினார். சோர்ந்து கிடந்த சமூகத்தை விழிப்படையச் செய்ய நீதிக் கட்சி ஏற்பட்ட காலத்தில், காஞ்சி மணிமொழியார் அக் கட்சியின் இயக்கத்தில் ஈடுபட்டு உழைத்தார். அரசாங்கத் தார் கட்டாயமாக இந்திமொழியைத் தமிழ்நாட்டில் திணித்த போது (1938–ல்) நாட்டில் ஏற்பட்ட இந்தி எதிர்ப்பு இயக் கத்தில் மணிமொழியார் பெரும்பங்கு கொண்டார். 1949-ம் ஆண்டில் ஈ. வே. ரா. பெரியார் அவர்கள் சென்னையில் நடத் திய திருவள்ளுவர் மாநாட்டின் செயலாளராக இருந்து காஞ்சி மணிமொழியார் திறம்படச் செயலாற்றினார். செங் குந்த மகாஜன சங்கத்தின் பிரசாரகராகவும், "செங்குந்த மித்திரன்" பத்திரிகையின் ஆசிரியராகவும் இருந்து சமூகத் திற்குப் பெருந் தொண்டாற்றியுள்ளார். ஈ. வே. ரா. பெரி யாரின் சுயமரியாதை இயக்கத்திலும் ஈடுபட்டிருந்தார். இவ் வாறு பொதுத்துறைகள் பலவற்றில் பலகாலம் பெரும் பணிசெய்து அறுபது ஆண்டை அடைந்துள்ள காஞ்சி மணி மொழியாருக்கு மணிவிழா நடத்துவது மாண்புடையது. இப்பெருந்தகையாருக்கு மணிவிழா நடத்துவதில் எனக்குப் பெருமகிழ்ச்சியுண்டு. தக்கார் ஒருவருக்குப் பாராட்டுவிழா நடத்தி அவருக்கு நமது நன்றியைத் தெரிவிக்கவேண்டுவது நமது கடமையல்லவா? மணிவிழா சிறைவுறுக. மணி மொழியார் வாழ்க!



மணிமொழியாரும் அவருடைய வாழ்க்கைத் துணைவியார்
திருமதி அபிராமி அம்மையாரும்.



கோடம்பாக்கம் "அண்ணா நகர்" அமைப்பாளர்கள்
மணிமொழியாரும், எம். கோபால் எம். சி. யும்

# அன்றைய ஆசிரியர்—இன்றைய தலைவர்

[பி. வீரராகவன், ஆசிரியர், "ஆரம்பக்கல்வி]

---

சென்ற இருபத்தைந்து ஆண்டுகளாக என்னுடைய ஆருயிர்த் தோழராகவும் அருமை வழிகாட்டியாகவும் இருந்துவருகின்ற காஞ்சி மணிமொழியார் அவர்களுக்கு மணிவிழா நடக்கப்போகிறது என்பதை அறிந்தவுடன் என்னுடைய உள்ளம் இன்ப வெள்ளத்தில் ஆழ்ந்தது. "உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே இடுக்கண் களை வதாம் நட்பு" என்னும் திருவள்ளுவரின் தெள்ளிய இலக்கணத்திற்குக் கிடைத்த அற்புதமானதோர் இலக்கியம் மணிமொழியாரின் வாழ்க்கை. அதுமட்டுமன்று. "நகுதற் பொருட்டன்று நட்டல்; மிகுதிக்கண், மேற்சென்று இடித் தற் பொருட்டு" என்னும் குறளோவியத்திற்கு விளக்க வுரையாகவும் அமைந்திருப்பது அவருடைய வாழ்க்கை. தன் நண்பர்களின் துயரத்தைக் களைவதில் அவர் பேரார்வம் காட்டுவது போலவே, அவர்கள் தவறுகள் செய்யும்போது அந்தத் தவறுகளைத் துளியும் தயங்காமல் எடுத்துக்காட்டி அவர்களைத் திருத்துவதிலும் பேரூக்கம் கொள்பவர் அந்த அறிவின் செல்வர்.

ஆரம்பக்கல்வி விரைந்து பரவினால்தான் நம்முடைய நாடு உயர்ந்து ஓங்கமுடியும் என்னும் உண்மையில் அசை யாத நம்பிக்கை படைத்தவன் நான். மணிமொழியார் அவர்களும் அதே நம்பிக்கை படைத்தவர்தான் என்பதை யும், அந்த நம்பிக்கை காரணமாக அவர் தன்னுடைய 21-வது வயதிலேயே காஞ்சிமாநகரில் தன் சொந்தச் செலவில் ஆரம்பப் பள்ளிக்கூடம் ஒன்றைத் தொடங்கி ஒன்பது ஆண்டு கள் சிறப்புற நடத்தினர் என்பதையும் அறிந்தது முதல்

இயற்கையாகவே எனக்கு அவர்பால் மட்டற்ற மதிப்பும் அன்பும் ஏற்படலாயின.

மணிமொழியார் அவர்கள் ஆரம்பப் பள்ளி நிர்வாகியாக இருந்தவர் மட்டுமல்ல, ஓர் ஆரம்ப ஆசிரியராகவும் திகழ்ந்தவர் என்பது பெருமகிழ்ச்சிக்குரிய செய்தியாகும். 1924 முதல் 1927 வரை வாலாஜாபாத் இந்துமத பாடசாலையில் அருந்திறல் வாய்ந்த ஓர் ஆரம்ப ஆசிரியராகப் பணியாற்றிய மணிமொழியார் அவர்கள்தான், இந் நாளில் தலைசிறந்த பேச்சாளராகவும், மிக உயர்ந்த எழுத்தாளராகவும், பெரும்புகழ் படைத்த அரசியல் தலைவராகவும் திகழ்கிறார் என்பதை அறிகின்ற எந்த ஆரம்ப ஆசிரியருடைய உள்ளம்தான் மகிழாமல் இருக்க முடியும்? நானும் என் வாழ்நாளின் தொடக்கத்தில் ஓர் ஆரம்ப ஆசிரியனாக விளங்கியவன்தானே! ஆகவேதான் மணிமொழியாரின் வாழ்க்கை வரலாறு, எனக்கு இன்பத் தேனாக இனிக்கிறது. ஆரம்ப ஆசிரியர்களாக வாழ்க்கையைத் தொடங்குபவர்கள் என்றென்றும் அவ்வாறே இருந்தாகவேண்டிய அவசியமில்லை; அவர்கள் முயன்றால் மிகப் பெரிய நிலையையும் அடைய முடியும் என்பதற்கு மணிமொழியார் அவர்களின் மாண்புமிக்க வாழ்க்கையே மிகச் சிறந்த எடுத்துக்காட்டாகப் பொலிகிறது.

ஆரம்ப ஆசிரியராகத் தன் வாழ்க்கையைத் தொடங்கி, ஆரம்பப் பள்ளி நிர்வாகியாக ஒன்பது ஆண்டுகள் விளங்கி, சுயமரியாதை இயக்கச் சூறாவளியாகப் பல ஆண்டுகள் பணியாற்றி, நீதிக் கட்சியின் வளர்ச்சிக்காக நற்றொண்டு புரிந்து, திராவிடர் கழகத்தைக் கண்ணின் மணியெனக் கட்டிக் காத்து, திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொன்னொளியாகத் திகழும் என் கெழுதகை நண்பர்—"போர்வாள்" அளித்த பெருந்திறல் வீரர்—பலமுறை சிறை சென்ற செந்தமிழ் அறிஞர் மணிமொழியார் அவர்கள் நீண்ட நெடுங்காலம் நன்கினிது வாழ்ந்து திராவிட மக்களை வாழ்விக்க வேண்டும் என்பது என் இதயத்தைக் கவர்ந்த பேராவலாகும். வாழ்க மணிமொழியார்! வளர்க அவர் புகழ்!!

# இருபதாம் நூற்றாண்டின் உழைப்புருவம்

[பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரை எம்.ஏ., எல்.டி.]

---

இரண்டாயிர ஆண்டு நீள்துயிலின்பின், தமிழகம் காலங்கடந்த பல பெரியார்களை, அறிஞர்களை, கலைஞர்களை, ஈன்றெடுத்த நூற்றாண்டு நம் இருபதாம் நூற்றாண்டு. நூற்றாண்டு நங்கை அணியும் அம் மணிமாலையில், பெரியாருள் ஒரு பெரியாராய், அறிஞருள் ஓர் அறிஞராய், கலைஞருள் ஒரு கலைஞராய் விளங்கும் மணி, காஞ்சி மணிமொழியார் ஆவர். தம் பெயரிலேயே 'மணி'யையும், மணி பதிக்கும் காஞ்சியையும் (பொன்னையும்), நாகரிகத்தை வளர்க்கும் மொழியையும் கொண்ட அவர், தம் மணிவிழாவையே இந்நூற்றாண்டின் மணி விழாவாக நம்மைக் கொண்டாடச் செய்துள்ளார். ஏனென்றால் அவர் இந்த இருபதாம் நூற்றாண்டு பிறந்த போதே, அந் நங்கையுடன் இரட்டைப் பிள்ளையாக, 1900ல் பிறந்தவர்.

குடி வாழ்விலிருந்து குடியாட்சியும் குவலய வாழ்வும் பெருக்கமுறும் என்பது தமிழர் கோட்பாடு. குடி, சமுதாயம், மொழி, நாடு, இனம் என்ற எல்லா எல்லைகளிலும் இப் பண்பில் நின்று, குடி உயர, சமுதாயம் மாண்புற, மொழி பீடுற, நாடு விடுதலையுரிமை பெற, இனம் ஓங்க, எல்லாத் துறைகளிலும் ஈடுபட்டு உழைத்த பெரியார் காஞ்சி மணிமொழியார் ஆவர். பத்திரிகை ஆசிரியராகவும், எழுத்தாளராகவும், கலைநாடகங்களில் கருத்துடனும் உணர்ச்சியுடனும் நடிப்பவராகவும், மொழி இன நாட்டுப் பணிகளுக்காகப் பல முறை சிறை சென்ற வீரத் தியாகியாகவும், குடும்ப வாழ்வுக்கும் சமுதாய வாழ்வுக்கும் ஒப்பற்ற ஒரு கொழுகொம்பாகவும், ஆண்டின் முதிர்வால் ஒரு சிறிதும்

யாதிக்கப்படாத பேராளராகவும், செல்விருந்தோம்பி வரு விருந்து பார்த்திருக்கும் வள்ளுவர் பண்புசான்ற செல்வ வண்மைக்கு இலக்கான சீராளராகவும், நம்முடைய நாட்டுக்கு மேன்மேலும் ஆக்கமும் ஊக்கமும் வளமும் அளிக்கும் ஆன்றோராகவும் வாழ்ந்துவருகிறார். இந்த நூற்றாண்டோடு நூற்றாண்டாகப் பீடுபுகழ் பெற்று வாழ்க அவர் பணி என்று அவர் மணிவிழாவின்போது தமிழராகிய யாவரும் வாழ்த்தக் கடமைப் பட்டுள்ளோம்.

குறளெனும் தமிழகம் கண்ட உலகத் திருமறைக்குப் புதுக் கால்கோள் காணப் பெரியார் ஈ. வே. ரா. தூண்டுதற் காரணராய் இருந்தாரென்றால், அதற்கு இயங்குதற் காரணராய் இருந்தவர் மணிமொழியார். அவர், மக்கள் மேடையில் பேச்சாளர்; பத்திரிகை மேடையில் எழுத்தாளர்; சமுதாய மேடையில் ஒப்பற்ற வீரத் தொண்டர்—தொண்டர் தலைவர்; நாடகமேடையில் தனிச் சிறப்புடைய நடிகர். இவ் வெல்லாத் துறைகளிலும் அவர் பணி, இத் தனிப் பணித் தொகுதி மட்டுமன்று. எத்தனை எத்தனையோ இளைஞர் நங்கையர்கள் அத் துறைகளில் அடியெடுத்து வைத்துப் பல படி கடந்து வளர அவர் நூற்றாண்டின் ஏணியாகவும் விளங்கியுள்ளார். ஏற்றமுடைய அவர், ஏறாத ஏணியாயிருந்து இங்ஙனம் பலர் ஏற்றத்துக்கு உதவியுள்ளார்.

‘எந்தை நல்கூர்ந்தான் இரப்பார்க்கீந் தென்றவன்
மைந்தர்தம் ஈகை மறுப்பரோ—பைந்தொடீஇ!
நின்று பயனுதவி நில்லா அரம்பையின் கீழ்க்
கன்றும் உதவும் கனி’

என்ற மூதுரை பொய்க்காவண்ணம் அவர் செல்வர்களான **பேராசிரியர் மா. இளஞ்செழியனும்,** மா. ஆடலரசனும் (மா. நடராசன்) தந்தையின் இம் முந்தை மரபில் சந்தமுடன் தந்தமடிவைத்துப் பின்பற்றத் தயங்கவில்லை என்பது பெருமகிழ்ச்சிக்குரிய நிலையல்லவா? வாழ்க மணிமொழியார் புகழ்! வளர்க அவர்தம் தமிழ்ப்பெரு மரபு!

# பிறர் அஞ்சிய துறைகளில் தன் முத்திரையைப் பொறித்தவர்

[கே. ஏ. மதியழகன், பி. ஏ. ஆசிரியர், "தென்னகம்"]

---

"போர்வாள்" ஆசிரியர் உயர்திரு. காஞ்சி மணிமொழியார் அவர்களுக்கு மணிவிழா என்ற சேதி என்னை வியப்பிலாழ்த்தியது. காரணம் காஞ்சி மணிமொழியார் அவர்களின் கட்டுமஸ்தான தேகத்தையும், ஓடி ஓடி ஆர்வம் ததும்ப அவர் ஆற்றுகிற பணியையும் காணும் வாய்ப்புப் பெற்றோர், அவருக்கு நாற்பது வயதுக்குமேல் இருக்காது என்றே மதிப்பிடுவர்.

அவரது அருமைத் திருமகனாரும், என்னுடைய கல்லூரி நண்பரும், பச்சையப்பன் கல்லூரிப் பேராசிரியருமான **திரு. மா. இளஞ்செழியன் எம். ஏ.** அவர்களைப் பலரும் மணிமொழியாரின் தம்பி என்றே கருதி வந்தனர். நெடுநாட்கள் அதனைத் திருத்திக் கொள்ளாதவர்களில் நானும் ஒருவன்.

மணிமொழியாரின் மொழிப்பற்றும், பொதுப்பணி ஆர்வமும், நாட்டுப் பற்றும் அவரது வாழ்வை மக்கள் தொண்டிற்கு அர்ப்பணிக்கச் செய்தன. கனிவுள்ளமும், பிடிவாத சுபாவமும், விளைவுகளைப்பற்றிக் கவலைப்படாத தன்மையும், அவரைப் பல்வேறு முயற்சிகளில் ஈடுபடுத்தின. பிறர் பலர் அஞ்சிய துறைகளிலே அவர் தனது முத்திரையைப் பொறித்துள்ளார். இந்தி எதிர்ப்பு இயக்கம் அவரது பெரும் சேவையைப் பெற்றது.

திருவள்ளுவர் மாநாடு என்ற பெயரால் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு அவர் கூட்டிய மாநாட்டிற்குப் பிறகே வள்ளுவரின் புகழும் திருக்குறளின் தனிச் சிறப்பும் நாட்டில் ஓங்கி வளர்ந்தன என்பதை நாடு நன்கறியும்.

சுயமரியாதைக் கருத்துக்களைப் பரப்புவதில் தாம் நடாத்திய ஏடுகள் மூலமும் பிரசாரத்தின் மூலமும் மணிமொழியார் ஆற்றியுள்ள பெரும் சாதனைகளை நாடு என்றும் மறக்காது. அவரையும் அவரது அருமைப் புதல்வர் நண்பர் இளஞ்செழியனையும் ஆசிரியர்களாகக்கொண்டு "போர்வாள்" இதழ் திராவிடர் இயக்கத்துக்குக் கூரிய வாளாகவும் அரிய கேடயமாகவும் பயன்பட்டு வந்துள்ளது.

திராவிட முன்னேற்றக் கழகம் துவங்கிய நாளிலிருந்து அதனை வலிவும் பொலிவும் நிறைந்த பாசறையாக்குவதற்குப் பேருழைப்பை நல்கி யுள்ளார் அவர். பலமுறை நெருக்கடிகளின்போது சிறைக்கோட்டம் புகுந்துள்ளார். அத்தகைய நல்ல பெரியவரின் மணிவிழாக்கண்டு என்போன்றாரின் இதயம் மகிழ்வால் துள்ளுகிறது. காஞ்சி மணிமொழியார் மேலும் பல்லாண்டுகள் வாழ்ந்து சிறந்து பணியாற்ற வேண்டும்—அவர்கள் வாழ்வில் வெற்றி பெருக வேண்டும் என மனமுவந்து வாழ்த்துகிறேன்.

## நாட்டிற்குக் கிடைத்த நல்வழிகாட்டி

**[அ. பொன்னம்பலனார்.]**

---

"போர்வாள்" ஆசிரியர் உயர்திரு காஞ்சி மணிமொழியார் அவர்களுடைய மணிவிழா நடைபெறும் செய்திகேட்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். தமிழ்நாட்டுப் பொது வாழ்க்கையில் முப்பது ஆண்டுகள் சிறந்த நற்பணியாற்றி மக்கள் உள்ளத்தில் உயர்ந்ததோர் இடம் பெற்றவர் மணிமொழியார். எல்லோருக்கும் நல்ல வழிகாட்டியாக அமைந்திருப்பவர் அவர். அத்தகையவரின் நற்பணி பாராட்டிப் புகழப்படுவதும், மணிவிழாக் கொண்டாடப்படுவதும் மகிழ்ச்சியூட்டும் செய்திகளாகும். வாழ்க காஞ்சி மணிமொழியார் அவர்கள் — வளர்க அவர்தம் நற்பணி என்று வாழ்த்துகிறேன்.

# வாழ்க்கை வரலாறு

# உயர்திரு காஞ்சி மணிமொழியார்

அவர்களுடைய

# வாழ்க்கை வரலாறு

---

[இயற்றியவர் :

**மா. சு. சம்பந்தன்,**

சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினர்]

***காஞ்சிமாநகர் அளித்த கருத்துக் கருவூலம்:—***

1917-ஆம் ஆண்டின் தொடக்கத்தில் ஒரு நாள். சான்றோரை உடையது என்று ஆன்றோர்களால் புகழப் பட்ட பீடும் பெருமையும் படைத்த தொண்டை நன்னாட் டின் தலைநகராகிய காஞ்சீபுரத்தில் ஒரு மாபெரும் ஊர் வலம் சென்றுகொண்டிருந்தது. அந்த ஊர்வலத்தில் ஆயிர மாயிரமாக மக்கள் அணி அணியாகத் திரண்டு சென்ற காட்சி, காண்பவர்களின் கண்ணையும் கருத்தையும் ஒருங்கே கவரத்தக்க காட்சி படைத்ததாக அமைந்திருந் தது. "வெள்ளம்போல் தமிழர் கூட்டம்; வீரம்கொள் கூட்டம்; அன்னார் உள்ளத்தால் ஒருவரே ; மற்று உடலி னல் பலராய்க் காண்பார்" என்று கவிஞர்களெல்லாம் கவிதை பாடத்தக்க அளவு சிறப்பும் சீரும் எழிலும் இனி

மையும் படைத்ததாக விளங்கியது ஊர்வலம். ஊர்வலத்தில் கலந்துகொண்ட ஒவ்வொருவர் முகமும் ஒவ்வொரு புன்னகைப் பூந்தோட்டமாக—உற்சாகத்தின் சின்னமாக-உணர்ச்சி ஓவியமாக ஒளிவீசித் திகழ்ந்தது. அந்த மாபெரும் மக்கள் திரளிலிருந்து, 'வெள்ளுடை வேந்தர் தியாகராயரே வாழ்க—அஞ்சாத நெஞ்சு படைத்த அடலேறே வாழ்க—திராவிடத் தந்தை தியாகராயரே வாழ்க—பார்ப்பனரல்லாத சமுதாயத்தின் இணையற்ற வழிகாட்டியே வாழ்க—உயர்ந்த பண்புகளின் உறைவிடமே வாழ்க' என்பனபோன்ற முழக்கங்கள் விண் அதிர மண் அதிர மாற்றாரின் மனம் அதிர எழுந்தபடி இருந்தன. தெருவெல்லாம் தோரணங்களும் அலங்கார வளைவுகளும் நீதிக்கட்சியின் கொடிகளும் நிரம்பிக் காணப்பட்டன. ஊர்வலத்தின் நடுவில், நெடுங்காலமாக உறங்கிக் கிடந்த திராவிட சமுதாயத்தைத் தட்டியெழுப்பிய அதன் இணையற்ற தலைவர்—மாற்றாரும் போற்றத்தக்க மாண்புகள் நிறைந்த பெரியார்—தென்னகத்தின் பொன்னொளி- சர். பி. தியாகராயர் அற்புதமான முறையில் அலங்கரிக்கப்பட்ட அழகிய வண்டியில் சென்றுகொண்டிருந்தார். ஊர்வலம் சென்று முடிந்த இடத்தில், காஞ்சி மாநகரமே அதுவரை கண்டறியாத மிகப்பெரிய பொதுக்கூட்டம் ஒன்று நடைபெற்றது. அதில் திராவிடர் தலைவர் தியாகராயரை வரவேற்றும், அவர் ஆற்றிவந்த அரும்பெரும் பணிகளின் ஒப்புயர்வற்ற தன்மையை விளக்கியும் அறிஞர் பெருமக்கள் பலர் விரிவுரையாற்றினர்.

மட்டற்ற சிறப்புடைய அந்த ஊர்வலத்தையும் பொதுக் கூட்டத்தையும் பார்த்து அளவற்ற வியப்படைந்தான் ஒரு சிறுவன். பதினாறு வயது மட்டுமே நிரம்பியிருந்த அச்சிறுவன் அதே ஊரைச் சேர்ந்தவன்தான். அவன் அதே ஊரில் உள்ள பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளியில் அப்போது ஒன்பதாவது வகுப்பிற் படித்துக்கொண்டிருந்தான். அவனுடைய இளம் உள்ளத்தில் அந்த ஊர்

வலமும் பொதுக்கூட்டமும் புத்தம் புதிய எழுச்சியையும் கிளர்ச்சியையும் உண்டாக்கி விட்டன. "ஒரு தனி மனிதருக்கு இவ்வளவு பெரிய வரவேற்புக் கிடைக்கிறது என்றால் அவர் தன்னிகரற்ற பணி புரிந்தவராக இருக்கவேண்டும் என்பது உறுதி. அப்படியானல் யார் இந்தத் தியாகராயர்? யாது இவருடைய வரலாறு? என்னென்ன பணிகள் புரிந்துள்ளார் இந்தப் பெருந்தகையார்? என்பனவற்றையெல்லாம் திட்டவட்டமாகத் தெரிந்துகொள்ள வேண்டியது என் கடமை" என்றெல்லாம் அந்தச் சின்னஞ் சிறு உள்ளம் எண்ணத் தொடங்கியது. எண்ணியதோடு நிற்கவில்லை. தனக்குத் தெரிந்த பெரியவர்களிடமெல்லாம் இந்தக் கேள்வியை எழுப்பி அவர்கள் அளித்த விடைகளையெல்லாம் ஒன்று திரட்டிப் பார்த்தான் அச்சிறுவன். "வீழ்ச்சியுற்றுக் கிடந்த திராவிட சமுதாயத்தை எழுச்சியுறச் செய்த உதய சூரியன் அவர்—தனக்கென வாழாத பிறர்க்குரியாளர்-தென்னகத்தின் முன்னேற்றத்திற்காக அல்லும் பகலும் அரும்பணியாற்றும் அறிஞர் பெருமகனர்" என்னும் உண்மையே அந்த விடைகளின் சுருக்கமாக இருக்கக் கண்டான். தாழ்த்தப்பட்டுக் கிடக்கும் திராவிட சமுதாயத்தின் முன்னேற்றத்திற்காகத் தியாகராயர் புரிந்துவரும் அருந்தொண்டின் வளர்ச்சிக்கு நானும் இன்று முதல் என்னுலான பணிகளைச் செய்வேன் என்று சூள் எடுத்துக் கொண்டான். அடுத்த வாரமே அச்சிறுவன் **சர். பி. தியாகராயர் வாசகசாலை** ஒன்றையும் **பார்ப்பனரல்லாத வாலிபர் சங்கம்** ஒன்றையும் தொடங்கி மிகச் சிறப்பாக நடத்தத் தொடங்கினன்.

இவ்வாருக ஒன்பதாவது வகுப்பிற் பயிலும்போதே தன்னுடைய பதினுருவது வயதிலேயே, நீதிக்கட்சி தொடங்கப்பட்ட மறு ஆண்டிலேயே பொது வாழ்வுப் போர்க்களத்திற் குதித்துவிட்ட அந்தச் சிறுவன்தான், தலைசிறந்த பேச்சாளராய்—வசீகரம் மிக்க எழுத்தாளராய்-பெரும்புகழ் படைத்த பத்திரிகாசிரியராய்—பொது வாழ்

வின் புனிதத்தன்மைக்கோர் ஒப்பற்ற எடுத்துக்காட்டாய்—நாடும் ஏடும் ஒருங்கே புகழும் நல்லறிஞராய்—திராவிட சமுதாயத்தின் ஆற்றல் மிக்க தளபதிகளில் ஒருவராய்ப் பேரொளி வீசித் திகழும் தொண்டின் செல்வர்—உழைப்பின் உருவம்—**காஞ்சி மணிமொழியார் அவர்கள்** ஆவார்கள்.

சங்க காலத்திலிருந்து இன்றைய தினம் வரையில், தமிழகத்தின் வரலாற்றில், காஞ்சீபுரம் எப்போதுமே தனிச்சிறப்புமிக்க ஓர் இடத்தைப் பெற்று வந்திருக்கிறது. காஞ்சி மாநகரை எண்ணியவுடன், பலநூறு ஆண்டுகட்கு முன்னரே, அது பல்லவப் பேரரசர்களின் தலைநகரமாய் வீறுபெற்று விளங்கிய காட்சியும், அறப்பெருஞ்செல்வி மணிமேகலை அங்கே உலவி உயர்ந்த கருத்துக்களைப் பரப்பிய மாட்சியும், சென்ற ஈராயிரம் ஆண்டுகளாகவே தொடர்ச்சியாக சமண—பௌத்த—சைவ—வைணவப் பெரும் புலவர்களும் துறவோர்களும் அங்கே வீற்றிருந்து அறிவு ஒளி பரப்பிய நிகழ்ச்சிகளும், தென்னகத்தின் கலை எழில் முழுவதையும் ஒன்றுகத் திரட்டி ஒரே ஊரில் அமைத்ததுபோல் அங்கே உள்ள ஏராளமான கோயில்கள் அழகின் சின்னங்களாகத் திகழும் நிலைமையும் எவருடைய உள்ளத்திலும் தோன்றுவது இயற்கை. பல நூற்றுண்டுகட்கு முன்னரே திருநாவுக்கரசர், தம்முடைய திருமேற்றளிப் பதிகத்தில், **கல்வியிற் கரையிலாத காஞ்சி மாநகர்** என்று பாடியுள்ளார் என்றால் அது வெறும் புகழ்ச்சியன்று; எழுத்துக்கு எழுத்து உண்மை என்பதைத் தமிழ்நாட்டின் வரலாற்றை அறிந்த எவரும் அறிவர். பண்டைக் காலத்தில் மட்டுமன்று; இந்தக் காலத்திலும் காஞ்சி மாநகரமே தமிழகத்தின் அறிவுத் தலைநகரமாகத் திகழ்கிறது என்னும் உண்மையை மெய்ப்பிப்பதற்கு ஆயிரம் எடுத்துக்காட்டுகள் தேவையில்லை. தென்னவர் நாட்டின் தன்னிகரற்ற தலைவராய்—வாலிபர் உலகத்தின் வசீகர கீதமாய்—அறிஞர் பெருமக்கள் அனைவராலும் பேரறி

ஞர் எனப் போற்றிப் புகழப்படும் சிந்தனைக் கருவூலமாய்த் திகழும் செந் தமிழ்த் தென்றல் **அறிஞர் அண்ணாத்துரை** அவர்களைப் பெற்றெடுத்துத் தந்த பெறற்கரிய பேறு காஞ்சீபுரத்திற்கு உரியது என்னும் ஓர் உண்மையே போதும். ஒரே ஒரு உண்மைதான் என்றாலும் ஒப்பற்ற உண்மையல்லவா அது !

**பெற்ற தந்தையும் பிறந்த உடன்பிறந்தாரும்:—**

இத்தகைய பெரும்புகழ்படைத்த காஞ்சீபுரத்தில் இந் நூற்றாண்டின் தொடக்கத்தில் மிகப் பெரிய மொத்த வாணிப ஜவுளிக்கடை ஒன்று இருந்தது. அந்தக் கடையின் உரிமையாளராய்—பெயரும் புகழும் பெற்ற பெருஞ் செல்வராய்த் திகழ்ந்தவர் **பிரமநகர் செங்கல்வராய முதலியார்** அவர்கள் ஆகும். அந்தக் காலத்தில் அவருடைய ஜவுளிக் கடையே காஞ்சி மாநகரின் முதற்பெரும் அறுவை வாணிபக்கடை என்று கூறினால் அது மிகையாகாது. வாணிபத் துறையில் இவ்வண்ணம் பெருவெற்றி பெற்றுத் திகழ்ந்த அவர், தமிழ் இலக்கியத் துறையிலும் ஆழ்ந்த புலமை பெற்றவராக விளங்கினார். சென்ற நூற்றாண்டில், காஞ்சீபுரம் பிள்ளையார்பாளையம் மண்டபத் தெருவில் வாழ்ந்த தமிழ்ப் பேரறிஞர் பூசை நமசிவாயப் புலவரிடத்தில் முறையாகத் தமிழ்நூல்களைக் கற்றுணர்ந்த பெருமை படைத்தவர் செங்கல்வராயனார். திருக்குறள், திருவாசகம் ஆகிய இரு நூல்களையும் அவர் தன் இரு கண்களென எண்ணிப் போற்றி வந்தார். அறிவுச் செல்வமும் பொருட் செல்வமும் ஒருங்கே அமையப் பெற்றிருந்த அப் பெருந்தகையார், **அரசாலை அம்மையார்** என்னும் நற்குணச் செல்வியாரை மணந்து இல்லற வாழ்வை நல்லறப் பாதையில் நன்கினிது நடத்திவந்தார். அன்பும் இன்பும் பொருந்தி வாழ்ந்த அந்தத் தம்பதிகளுக்குப் பெண் மகள் ஒருவரும் ஆண் மக்கள் எழுவருமாக எட்டுப்பேர், மக்களாகப் பிறந்தனர். அந்த எண்மரில் எட்டாவது பிள்ளையாகவும் கடைசிப் பிள்ளையாகவும் பிறந்தவரே,

இதுபோது மணி விழாக் கொள்ளும் மாண்புடையவராகத் திகழும் காஞ்சி மணிமொழியார் அவர்கள் ஆவர்.

மணி மொழியாரின் மூத்த அண்ணனாகிய திருவாளர் **பி. செ. வீராசாமி முதலியாரும்** அதற்கடுத்த அண்ணனாகிய திருவாளர் **பி. செ. முருகேச முதலியாரும்** பண்டைத் தமிழ் இலக்கியங்களை முறைப்படி கற்றுத் தேர்ந்து தெளிந்த புலமை படைத்தவர்களாகத் திகழ்ந்தார்கள். பொன்னேரியில் நிலவரிக் கண்காணிப்பாளராக (Revenue Inspector) பணியாற்றிவந்த வீராசாமியார் தமிழ்க் கவிதை நூல் ஒன்றை யாத்துள்ளார். திருவாளர் பி. செ. முருகேசனாரோ பூசை நமசிவாயனாரின் மகன் பெரும்புலவர் பூசை கந்தசாமி முதலியார் அவர்களின் சிறந்த மாணவராய் அமர்ந்து தமிழ் இலக்கியங்களை ஐயம்திரிபறக் கற்றுணர்ந்தவர். "இவர் தமிழும் சைவமும் தழைக்க வேண்டும் என்னும் கருத்துடைய கழகங்கள் அனைத்திலும் முன்னின்று உழைக்கும் இயல்புடையார். இவரது முயற்சியாலேயே முதன் முதல் திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் அடிகள் காஞ்சியில் பல இடங்களிலும் சொற்பொழிவாற்றும் வாய்ப்பு ஏற்பட்டது. காஞ்சீபுரத்தில் ஞானியார் அடிகளுக்கு இவர் செய்த சிறப்பு வேறு இடங்களில் நிகழ்ந்த தில்லை என அடிகளே கூறக் கேட்டிருக்கிறேன். ஏகாம்பரநாதர் திருவிழாப்பா நூல் இயற்றியும், இரட்டைப் புலவர் வரலாறு முதலிய பல நூல்களை வெளியிட்டும், பல சைவ சபைகளையும் தேவார சபைகளையும் தோற்றுவித்தும் தமிழ் மொழிக்கும் சைவத்திற்கும் தொண்டாற்றி வந்தார்." என்று இவரைப்பற்றித் தன்னுடைய வாழ்க்கை வரலாற்றில் சிறப்பான முறையில் எழுதியுள்ள வண்ணக் களஞ்சியம் காஞ்சி நாகலிங்க முனிவர் அவர்கள், "காஞ்சியிற் கால்வைக்கும் அறிஞர்கள்—கல்வியாளர்கள் எவரும் இவரைக் காணாமலும், இவருடைய நல்லுதவி பெறாமலும் இருந்த தில்லை" என்றும் எழிலும் சுவையும் ததும்பும் முறையில் குறிப்பிட்டுள்ளார்கள். நீதிக்

கட்சி தொடங்கப்படுகிற வரையில் அளவு கடந்த வைதீக உணர்ச்சியும் பார்ப்பன பக்தியும் கொண்டவராகக் காட்சியளித்த இவர், ஆண்டுதோறும் பொங்கல் திருநாள் அன்றுமட்டும் இரண்டாயிரம் ரூபாய் பணமும் ஏராள மான வேட்டி சேலை முதலியனவும் பார்ப்பனருக்குத் தானமாக அளித்து வந்தார். புராணச் சொற்பொழிவுக ளும் ஏராளமாகச் செய்துவந்தார். ஆனால் 1916ல் சர். தியாகராயர் தலைமையில் நீதிக்கட்சி எனப்படும் பார்ப்பன ரல்லாதார் இயக்கம் தொடங்கப்பட்டதும் பி. செ. முரு கேசனுருடைய பிராமண பக்தி அடியோடு மறைந்துவிட் டது. அது முதல் ஒவ்வோராண்டும் பார்ப்பனரல்லாத ஏழை மக்களுக்கே ஈராயிரம் ரூபாய் பணமும் ஆடை முதலியனவும் வழங்கலானார். நீதிக்கட்சியின் வளர்ச்சிக் கும் எழுச்சிக்கும் முழுமூச்சோடு உழைக்கத் தொடங்கிக் கிளைக் கழகங்கள் அமைத்தும், ஏராளமான உறுப்பினர் களைச்சேர்த்தும் திராவிடர் இயக்கத்தைக்காஞ்சியில் வளரச் செய்தார். 1917ல் அவருடைய தந்தையார் இயற்கை எய்தியபோது, பார்ப்பனப் புரோகிதரை அழைக்காமல் தமிழ்ப் பெரியார் ஒருவரை வைத்தே நீத்தார் இறுதிக் கடன்களை அவர் நிகழ்த்தியதைக் கண்டு காஞ்சிமாநகரமே பெருவியப்பு எய்தியது. வைதீக உணர்ச்சி பெருவெள்ள மாகப் பெருகிக் காஞ்சி நகரத்தையே சுற்றிவளைத்துக் கொண்டிருந்த அந்தக் காலத்தில் இந்த நிகழ்ச்சி பெரிய தோர் புரட்சியாகக் கருதப்பட்டு காஞ்சி நகரத்தையே ஒரு குலுக்கிக் குலுக்கி விட்டதில் வியப்பொன்றும் இல்லை. காஞ்சீபுரத்தில் பார்ப்பனப் புரோகிதரின்றிச் செய்யப்பட்ட முதல் நீத்தார் வழிபாடு இதுவேயாகும்.

மணிமொழியாரின் உடன் பிறந்தார் பிறருள், பட்டம் மாள் என்னும் பெயர் படைத்த சகோதரியார் திருமண மாகிச் சில ஆண்டுகள் வாழ்ந்து அதன் பின் இறந்துவிட் டார். அண்ணன் ஒருவர் சிறு வயதிலேயே மறைவு எய் தினர். பி. செ. திருநாவுக்கரசு முதலியார், பி. செ.

சம்பந்த முதலியார் ஆகிய இரண்டு அண்ணன் மாரும் மனைவி மக்களுடன் மிகச் சிறப்பாக வாழ்ந்து முதிர்ந்த வயதிலேயே இயற்கை எய்தினர். முன்னவரின் மக்கள் வந்தவாசியை அடுத்த கொடுங்காலூரிலும், பின்ன வரின் மக்கள் காஞ்சீபுரத்திலும் இதுபோது நன்முறையில் வாழ்ந்து வருகின்றனர். மணிமொழியாரின் உடன் பிறந் தாருள் இதுபோது இருப்பவர் திருவாளர் **பி. செ. அரு ணுசல முதலியார்** என்னும் அவருடைய அண்ணன் ஒரு வர் மட்டுமே. அன்னாரின் வயது 70. அவர் காஞ்சீபுரத் தில் வாழ்ந்து வருகின்றார். மணி மொழியாரின் தந்தையார், அவருடைய 84-வது வயதிலும் (மணி மொழியார் ஒன்ப தாவது வகுப்பிற் பயின்று கொண்டிருக்கும்போது) தாயார் 1938-ல் அவருடைய 91-வது வயதிலும் (மணி மொழியார் சென்னையில் செங்குந்த மித்திரன் அச்சகப் பொறுப்பாளராக இருந்தபோது) இயற்கை எய்தினர். மணிமொழியாரின் தாயார், 91 என்கிற மிக முதிர்ந்த வயதை அடைந்த பிறகுங்கூட, மரணமடைவதற்கு முன் னுள் வரையிலும் தன்னுடைய உணவைத் தானே சமைத்து உண்டார் என்பதும், மிகத் திண்ணிய உடல் நலத்தோடு திகழ்ந்தார் என்பதும், கண்பார்வை சிறிதள வும் மங்காமல் தெள்ளத் தெளிவாக இருந்தது என்பதும் இங்கே சிறப்பாகக் குறிக்கத்தக்கன ஆகும்.

## "பச்சையப்பன்" ஈந்த செல்வம்:


அறிஞர் அண்ணு அவர்கள் எவ்வாறு தன் கல்வி முழுவதையும் பச்சையப்பன் கல்வி நிலையங்களில் பெற்று 'பச்சையப்பன்' நாட்டிற்கு அளித்த நன்கொடையாகத் திகழ்கிருரோ அவ்வாறேதான் மணிமொழியார் அவர்களும் அவருடைய கல்வி முழுவதையும் பச்சையப்பன் கல்வி நிலையத்திலேயே பெற்ருர். 1900-ஆம் ஆண்டு மே திங்கள் 9-ஆம் நாளன்று பிறந்த மணிமொழியார், முதல் வகுப்பி லிருந்து எஸ். எஸ். எல். சி வகுப்பு வரையில் காஞ்சீபுரம்

பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளியிலேயே பயின்றார். பிற்கால வாழ்க்கையில் பேரும் புகழும் பெற்றுத்திகழும் பலர் தங்களுடைய இளமைக் காலத்தில்—அதிலும் சிறப்பாகப் பள்ளிக்கூடத்தில் சிறப்புற்றுத் திகழ்வதில்லை. ஆனால் மணிமொழியார் அவர்களோ இந்தப் பொது விதிக்கு நேர்மாறானவர். பள்ளிக்கூடத்திற் பயிலும்போதே பிற்கால வாழ்க்கையில் ஒளிவீசித் திகழ்வார் அவர் என்பதைச் சுட்டிக் காட்டுதற்குரிய பல அறிகுறிகள் அவரிடம் தென்படலாயின. ஒவ்வொரு வகுப்பிலும் ஒவ்வொரு பாடத்திலும் அவரே முதல் மாணவராக விளங்கி ஏராளமான பரிசுகளைத் தட்டிப் பறித்துக்கொள்ளும் சிறப்புடையவராக இருந்தார். எஸ். எஸ். எல். சி இறுதித் தேர்வில் கணக்குப் பாடத்தில் 100-க்கு 100 வாங்கித் தேர்வுற்றார் என்பது இங்கே குறிப்பிடத் தக்கதாகும்.

பொதுவாக எல்லாப் பாடங்களிலும் சிறந்து விளங்கிய மணிமொழியார் தமிழ்ப் பாடத்தில் தலைசிறந்த மாணவராக விளங்கினார். தமிழார்வத்தின் மிகுதியால், அந்தப் பள்ளியில் அப்போது தமிழாசிரியராகப் பணியாற்றிய தமிழ்ப் பேரறிஞர் வெண்பாப் புலி வேலு சாமிப் பிள்ளையிடம் வகுப்பில் தமிழ் கற்றதோடு நில்லாமல், மாலை வேளைகளில் அன்னாரின் இல்லத்திற்கே சென்று, முறைப்படித் தமிழ் நூல்கள் பலவற்றைக் கற்று அறிந்து தேர்ச்சி பெறலானார். நினைத்தவுடன் நூற்றுக்கணக்கில் வெண்பாக்களை இயற்றவல்ல பேராற்றல் படைத்திருந்த வெண்பாப் புலி அவர்கள், மணிமொழியாரின் தமிழ்ப் பற்றையும் ஆர்வத்தையும் திறமையையும் கண்டு பெரிதும் மகிழ்ந்து விடுமுறை நாட்களில் அவரைத் தன் இல்லத்திலேயே இருக்கச் செய்து பல நூல்களை அவருக்குக் கற்பிப்பாராம்.

### பொது வாழ்வின் தொடக்கம் :


வகுப்பில் முதல் மாணவராக விளங்கிய மணிமொழியார், அப்படி விளங்கும் பல மாணவர்களைப் போல,



மணிமொழியாரின் முதல் மகனார் மா. இளஞ்செழியனும்
அவருடைய வாழ்க்கைத் துணைவியார் சுந்தராம்பாளும்

*

மணிமொழியாரின் இளைய மகனார் மா. நடராசனும்
அவருடைய வாழ்க்கைத் துணைவியார் பவுனம்பாளும்





1955 - ல் வாலாஜாபாத் இந்துமதபாடசாலைக்கு வந்திருந்த மணிமொழியார் (வலது புறத்திலிருந்து நான்காவதாக மாலையுடன் நிற்பவர்)

வெறும் "புத்தகப் பூச்சி"யாக இல்லாமல் பல பொது நட வடிக்கைகளிலும் பேரார்வத்துடன் ஈடுபட்டு அரும்பணி கள் பல ஆற்றி வந்தார். பத்தாவது வகுப்பு, எஸ். எஸ். எல். சி. வகுப்பு ஆகியவற்றிற் படித்த இரண்டு ஆண்டு களிலும் அவரே அவருடைய பள்ளிக்கூட மாணவர் தமிழ்ச் சங்கத்தின் செயலாளராக இருந்து சங்கத்தைத் திறம்பட நடத்தலானார். இந்த வாழ்க்கை வரலாற்றின் தொடக்கத்தில் நாம் குறிப்பிட்டபடி, அவர் ஒன்பதாவது வகுப்பிற் பயிலும்போது, காஞ்சி நகரில் சர். தியாகராய ருக்கு அளிக்கப்பட்ட இணையற்ற வரவேற்பால் கவரப் பட்டு, தியாகராயரின் கொள்கைகளை நன்கு அறிந்து, அதுமுதல் அக்கொள்கைகளைப் பரப்பும் பெரும் பணியில் மும்முரமாக ஈடுபடத் தொடங்கிவிட்டார். அந்தப் பணி யின் வளர்ச்சிக்காக—நாம் ஏற்கெனவே தெரிவித்ததைப் போல்—பள்ளியிற் பயின்றுகொண்டிருந்த அந்தப் பரு வத்திலேயே (1917-ல்) **சர். பி. தியாகராயர் வாசக சாலை** ஒன்றையும் **பார்ப்பனரல்லாத வாலிபர் சங்கம்** ஒன்றையும் தொடங்கி, 1930 வரை அவற்றின் செயலாள ராக இருந்து, பயனும் பண்பும் மிக்க முறையில் நடத்தி வரலானார். ஏறத்தாழ அதே சமயத்தில் அவரால் தொடங்கி நடத்தப்பட்ட மற்ற இரு அமைப்புகள் **கச்சிக் கலாவல்லித் தமிழ்ச் சங்கம், கச்சிக் கலாவல்லி நூற் குழுமம்** என்பன ஆகும். தமிழின் வளர்ச்சிக்காகவும் மக்களிடத்தில் தமிழ் நூல்கள் பயிலும் பழக்கத்தைப் பரப்புவதற்காகவும் அவரால் தொடங்கப்பட்ட இந்த அமைப்புகள் பல ஆண்டுகள் மிகச் சிறப்பாக நடை பெற்றன. டாக்டர் இரா. பி. சேதுப் பிள்ளை, அந்தக் காலத்தில் பெரும் புகழுடன் விளங்கிய பேச்சாளர்களா கிய மா. ரா. குமாரசாமிப் பிள்ளை, புலவர் ஏகாம்பரையா முதலிய பல சொற்பொழிவாளர்களை வெளியூர்களிலிருந்து வரவழைத்துக் கச்சிக் கலாவல்லித் தமிழ்ச் சங்க ஆண்டு விழாக்களை, முதியவர்களும் பார்த்துப் பாராட்டிப் புகழும் வண்ணம், பெரிய அளவிலும் சீரிய முறையிலும் நடத்தி

வந்தார் மணிமொழியார். பள்ளிக்கூடத்தில் திறமைமிக்க முதல் மாணவராகத் திகழ்ந்துகொண்டே, நீதிக் கட்சியின் வளர்ச்சிக்காக ஒரு சங்கத்தையும், தமிழின் வளர்ச்சிக்காக ஒரு மன்றத்தையும், முன்னதன் சார்பில் ஒரு படிப்பகத்தையும், பின்னதன் சார்பில் ஒரு நூல் நிலையத்தையும் அவர் சிறப்பாக நடத்தி வந்தார் என்பதை எண்ணும் போது நாம் அவருடைய ஆற்றலையும் ஆர்வத்தையும் இடைவிடாத உழைப்பையும் ஊக்கத்தையும் போற்றிப் புகழாமல் இருத்தல் இயலாது. விளையும் பயிர் முளையிலே தெரியும் என்னும் பொன்மொழி, மணிமொழியாரைப் பொறுத்த அளவில் நூற்றுக்கு நூறும் உண்மையாய் அமைந்துவிட்டது.

## அறுவை வாணிபமும் ஆசிரியத் தொழிலும்:

சின்னஞ் சிறு வயதிலேயே சங்கங்கள் நடத்துவதிலும் பொதுக்கூட்டங்கள் அமைப்பதிலும் சொற்பொழிவுகள் ஆற்றுவதிலும் செந்தமிழைக் கற்பதிலும் அவருக்கு இருந்த அளவற்ற ஆர்வத்தைக் கண்டு பெருமகிழ்வு எய்திய அவருடைய மூத்த அண்ணனும் சிறந்த தமிழறிஞருமாகிய திருவாளர் பி. செ. முருகேச முதலியார், “நீ எஸ். எஸ். எல். சி. வகுப்பை முடித்த பிறகு சென்னைக்குச் சென்று சட்டக் கலை பயின்று வழக்கறிஞராகிப் பொது வாழ்விலேயே ஈடுபட்டுவிடு. குடும்பத்திற்குத் தேவையான பொருள் ஈட்டுவது பற்றி நீ சிறிதும் கவலைப் படவேண்டாம். அதை நாங்கள் கவனித்துக்கொள் கிறோம். நீ முழு நேரப் பொதுப்பணி ஊழியனாக இருக்க வேண்டும் என்பதே என் ஆசை” என்று மணிமொழியாரிடம் அடிக்கடி கூறுவாராம். ஆனால் அவர், மணிமொழியார் எஸ். எஸ். எல். சி. வகுப்பிற் பயின்றுகொண்டிருந்த போதே இறந்துவிட்டதாலும், அவருடைய தந்தையார் அதற்கு இரண்டாண்டுகட்கு முன்னரே இறந்துவிட்டதாலும் அந்த வகுப்போடு தன் கல்வியை முடித்து

கொண்டு, குடும்பத்தின் ஜவுளிக் கடையைத் தொடர்ந்து நடத்தவேண்டிய நெருக்கடிக்கு ஆளானர். 1919 முதல் 1923 வரை அந்த வாணிபத்தை உயர்ந்த முறையில் நடத்திவந்த அவர், 1922-ல் அந்த வாணிப வளர்ச்சிக்காகப் பர்மா சென்று இரங்கூன், மாந்தலை முதலிய பல பகுதிகளில் சுற்றுப் பயணம் செய்தார். பல்வேறு காரணங்களால் 1924-ல் அந்த வாணிபத்தை நிறுத்திவிட்ட அவர், அதே ஆண்டில் வாலாஜாபாத்தில் உள்ள இந்துமத பாடசாலையில் ஆசிரியப் பணியை ஏற்று, 1927 வரையில் அதை இனிய முறையில் நடத்தி வந்தார். தமிழகத்தின் தலைசிறந்த கல்வி நிலையமாகவும், அறிஞர் உலகத்தின் இதயத்தைக் கவர்ந்த எழிலோவியமாகவும் திகழும் அந்தப் பாடசாலையின் சிறப்புக்காகவும் செழிப்புக்காகவும் அங்கே பணியாற்றிக்கொண்டிருந்த காலத்திலிருந்து இந்நாள் வரை மணிமொழியார் தன்னுல் இயன்ற உதவியெல்லாம் செய்துவருகிறுர் என்பதும், அந்தப் பள்ளிக்கூடத்தின் செயலாளர்—ஓய்வறியாத உழைப்பாளர்—உயர்திரு வா. தி. மாசிலாமணி முதலியார் அவர்களும் மணிமொழியார் அவர்களும் சென்ற 36 ஆண்டுகளாக மிக நெருங்கிய நண்பர்களாக இருந்து வருகிறுர்கள் என்பதும் இங்கே சிறப்பாகக் குறிக்கத்தக்க உண்மைகளாகும்.

சமுதாயத் தொண்டில் எப்போதுமே பேருக்கம் காட்டும் இயல்புடைய மணிமொழியார், வாலாஜாபாத்தில் பணியாற்றியபோது, அடிக்கடி சுற்றுப்புறக் கிராமங்களுக்குச் சென்று, ஆங்காங்குள்ள மக்களைத் திரட்டி, அவர்களெல்லாம் தங்கள் பிள்ளைகளைப் படிக்கவைக்க வேண்டியது எத்துணை இன்றியமையாதது என்பதை விளக்கிச் சொற்பொழிவாற்றுவார். பல ஊர்களுக்குத் திரு. வா. தி. மாசிலாமணி அவர்களோடு சென்று, எழுதுகோல், புத்தகம் துணிமணிகள் முதலியவற்றை ஊர்ப்பிள்ளைகளுக்கு இலவசமாக அளித்து, அவர்களையெல்லாம் பள்ளியிற் சேர்த்து பயிலுமாறு செய்துவந்தார். இக்காலத்திற்போலக் கல்விப்

பொருளின் அருமையையும் பெருமையையும் அனைவரும் உணர்ந்திராத காலம் அது. "கல்வியாம் கல்வி—என்னத்திற்கு ஐயா அது" என்று பாமர மக்கள் மட்டுமல்ல, செல்வமும் செல்வாக்கும் படைத்த "பெரிய மனிதர்கள்" கூடக் கைதட்டிச் சிரித்துக் கேலி பேசிவந்த காலம் அது. அப்படிப்பட்ட காலத்தில் மணிமொழியார் ஏராளமான பிள்ளைகளைக் கல்விக்கூடத்திற் சேர்ந்து பயிலுமாறு செய்த செயல், நம் பூரிப்புக்கும் பெருமைக்கும் உரிய அருஞ்செயல் என்றே கூறவேண்டும்.

1927 முதல் 1930 வரை காஞ்சீபுரத்தில் உள்ள பச்சையப்பன் கிளைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணிபுரிந்தார் மணிமொழியார். அந்தக் காலத்தில் அவர், தமிழ்ப் பாடங்களைத் தேனிலே தோய்த்தெடுத்த பலாச் சுளைகளாக்கி மாணவர்களின் உள்ளம் விரும்பி ஏற்கும் வண்ணம் அளித்து வந்தார். சிறந்ததோர் ஆசிரியருக்கு என்னென்ன பண்புகளும் ஆற்றல்களும் அமைந்திருக்க வேண்டுமோ அத்தனையும் அவரிடம் குறைவற அமைந்திருந்த காரணத்தால் அவருடைய ஆசிரியத் தொண்டு, அனைவரும் புகழத்தக்க சிறப்புடையதாக விளங்கியது. அந்தப் பள்ளியில் அவர் பணியாற்றியபோது அவரிடம் படித்த மாணவர்களில், "நம் நாடு" பொறுப்பாசிரியராகத் திகழ்பவரும், திராவிட முன்னேற்றக் கழகத் தளபதிகளில் ஒருவருமாகிய திருவாளர் காஞ்சி கல்யாணசுந்தரன், சென்னை மேல்சட்டசபைச் செயலாளராக இதுபோது பணியாற்றிவரும் திருவாளர் சி. டி. நடராசன் பி. ஏ., பி. எல். ஆகியோர் சிறப்பாகக் குறிக்கத்தக்கோர் ஆவர்

பச்சையப்பன் கிளைப் பள்ளியில் பணியாற்றிக் கொண்டிருந்த இந்தக் காலத்தில், மணிமொழியார், திராவிடர் இயக்க வளர்ச்சிப் பணியில் மட்டற்ற உற்சாகத்துடன் உழைத்து வந்தார். அந்நாட்களில் காஞ்சீபுரத்தில் பொதுக்கூட்டங்களைக் கூட்டுவோர் பெரும்பாலும் இவரையே தலைமை தாங்க அழைப்பர். ஏராளமான கூட்டங்

களில் இவர் சொற்பொழிவாற்றியது மட்டுமன்றி, இவரே பல பொதுக்கூட்டங்கட்கு ஏற்பாடு செய்து, பனகல் அரசர், சர். ஏ. இராமசாமி முதலியார், சுரேந்திரநாத் ஆரியா, டி. வி. சுப்ரமண்யம், ஜே. என். இராமநாதன் முதலிய அக்காலப் பெருந்தலைவர்களையெல்லாம் அழைத்துச் சொற்பொழிவாற்றச் செய்தார். பருப்பில்லாமல் திருமணமா என்னும் பழமொழியைப் போல் மணிமொழியார் இல்லாமல் பொதுக்கூட்டமா என்று சொல்லத்தக்க நிலைமை அக்காலத்தில் காஞ்சிமாநகரில் இருந்து வந்தது. அந்நாட்களில் அந்நகரில் நடைபெற்ற திராவிட இயக்கக் கூட்டம் எதுவாக இருந்தாலும், ஒன்று, அவர் பேச்சாளராக விளங்குவார்; அல்லது அதன் அமைப்பாளராகத் திகழ்வார்.

காஞ்சீபுரத்துப் பொதுவாழ்வில் அந்நாட்களில் அவருக்கு இருந்த இணையற்ற செல்வாக்கை விளக்க ஒரு நிகழ்ச்சியை மட்டுமாவது இங்குக் குறிப்பிடத்தான் வேண்டும். அந்தக் காலத்தில் ஒரு நாள் காஞ்சியில் சுயமரியாதை இயக்கக் கூட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது. தற்போது "விடுதலை" ஆசிரியராக இருக்கும் திரு. எஸ். குருசாமி பி. ஏ., திரு. முத்துசாமி வல்லத்தரசு, சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் ஆகியோர் பேசுவதாக ஏற்பாடு. ஆனால் அவர்கள் பேசத் தொடங்கியதும் கூட்டத்தில் பெருங்குழப்பம்; கல்மாரி; கலகம். கூட்டத்தை நடத்த முடியவில்லை அதன் அமைப்பாளர்களால்! என்ன செய்தால் மறுநாளாவது கூட்டத்தை ஒழுங்காக நடத்த முடியும் என்று வந்திருந்த பேச்சாளர்கள் ஊரில் உள்ள பிரமுகர்களை விசாரித்தபோது, "பச்சையப்பன் பள்ளியில் தமிழாசிரியராக உள்ள மாணிக்கவாசக முதலியாரை (அப்போதெல்லாம் மணிமொழியார் அவ்வாறுதான் அழைக்கப்பட்டுவந்தார்) கூட்டத் தலைவராகப் போட்டு விட்டால் குழப்பமே இராது. கூட்டத்தை அமைதியாக நடத்துவதற்கு உள்ள ஒரே ஒரு வழி அதுதான்" என்று

அவர்கள் அனைவரும் ஒருமுகமாகத் தெரிவித்துவிட்டனர். அவ்வாறே மணிமொழியார் அவர்கள் தலைமையில் மறு நாள் கூட்டம் நடைபெற்றது. முதல் நாள் சொற்பொழி வாற்ற முயன்ற அதே பேச்சாளர்கள்தான் இரண்டாவது நாளும் பேசினார்கள். ஆனால் அன்றைய தினம் துளியும் குழப்பம் ஏற்படவில்லை. மூன்றாவது நான்காவது நாட் களும், மணிமொழியார் தலைமையில் கூட்டங்கள் தொடர்ந்து நடத்தப்பட்டன. குழப்பத்தின் சாயல்கூடத் தென்படவில்லை. முதல் நாள் ஏற்பட்ட குழப்பம் மற்ற நாட்களில் இல்லாது போனதன் காரணத்தை அறிந்த போது பேசவந்த தலைவர்களுக்கு ஏற்பட்ட வியப்பு அளவு கடந்ததாகிவிட்டது. முதல் நாள் கூட்டத்தில் கலகம் விளைத்து அதை வெற்றிகரமாகக் கலைத்துவிட்ட மாற்றுக் கட்சி நண்பர்கள், மறுநாளிலிருந்து மணிமொழி யார் தலைமை தாங்குவதைக் கண்டபிறகு குழப்பம் ஏதும் செய்ய முடியாதவர்களாகிவிட்டார்கள். காரணம் என்ன தெரியுமா? காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த அவர்கள், தங்கள் கூட்டங்களில் பேசுவதற்குத் தேவையான குறிப்புகளையும் செய்திகளையும் சொற்பொழிவாற்றும் முறைகளையும் மணிமொழியார் அவர்களிடத்தில்தான்—எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர் என்றாலும்கூட—கேட்டுத் தெரிந்துகொண்டு போவது வழக்கமாம். இந் நிலையில் தலைமை நாற்காலியில் மணிமொழியாரைக் கண்டதும் கலகம் விளைவிக்க வந்தவர் கள் பெட்டிப் பாம்பென அடங்கிவிட்டதில் வியப்பென்ன இருக்க முடியும்?

### *சம உரிமைப் போராட்டங்கள் :*

பச்சையப்பன் பள்ளியில் அவர் பணியாற்றிக்கொண் டிருந்த காலம், பார்ப்பனர்களிற் பெரும்பாலோர் பார்ப் பனரல்லாதாரை மிகத் தாழ்வாகக் கருதிக்கொண்டிருந்த காலம். அத்தகைய காலத்தில் பார்ப்பனரல்லாதாருக்குப் பார்ப்பனரோடு ஒத்த நிலையைப் பெற்றுத் தருவதற்காக

மணிமொழியார் நடத்திய கிளர்ச்சிகளும் முயற்சிகளும் சிறு சிறு போராட்டங்களும் பற்பல ஆகும். எடுத்துக் காட்டாக இரண்டொன்றை இங்கே கூறுவது பொருத்தமாக இருக்கும். அவர் பணியாற்றிக் கொண்டிருந்த பள்ளியில் பார்ப்பன ஆசிரியர்கள் நண்பகல் உணவு கொள்வதற்காக ஒரு தனி அறை ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தது. ஆனால் பார்ப்பனரல்லாத ஆசிரியர்கள் உண்பதற்கு அதுபோலத் தனி அறை ஏதும் இல்லை. "பார்ப்பனர் உயர்ந்த சாதியினர்; அவர்கள் உண்பதைப் பிற சாதியினர் பார்த்தல் ஆகாது; பார்த்தால் அந்த உணவு தீட்டுப்படும் ஆகவே அவர்கள் உண்பதற்குத் தனி அறை தேவை. ;ஆனால் பார்ப்பனரல்லாத ஆசிரியர்கள் உண்பதை எவரும் காணலாம். உணவும் தீட்டுப்படாது. ஏனெனில் அவர்கள் தாழ்ந்த குலத்தவர். எனவே அவர்கட்குத் தனி அறை தேவையில்லை" என்பதுதான் இந்த ஏற்பாட்டின் அடிப்படைப் பொருளாகும். இந்த ஏற்பாட்டின் சிறுமைப் பொருளை அறிந்து வெகுண்டெழுந்த மணிமொழியார், வேலையிற் சேர்ந்தவுடன் இரண்டோர் நாட்கள், பார்ப்பன ஆசிரியர்கள் உண்கிற அதே அறைக்குச் சென்று தாமும் தம் பொட்டலத்தைப் பிரித்து உண்ணத் தொடங்கினர். அவர் அப்படிச் செய்ததும், ஏற்கெனவே அந்த அறைக்கு வந்து உண்டுகொண்டிருந்த பார்ப்பன ஆசிரியர்கள், தங்கள் உணவு (அவருடைய வருகையால்) தீட்டுப்பட்டுவிட்டதாகக் கூறி, அதனை உண்ணாமலே எழுந்து சென்று தலைமையாசிரியரிடம் புகார் செய்தனராம். ஒரு நாள் தலைமையாசிரியர் மணிமொழியாரைக் கூப்பிட்டு, "மற்ற ஆசிரியர்களையெல்லாம் சாப்பிட முடியாமற் செய்கிறீரே—இது நியாயமா?" என்று கேட்ட போது "இனி அப்படிச் செய்யவில்லை" என்று கூறி விட்டு, மறுநாளிலிருந்து, பள்ளிக்கூட இடைவேளை மணி அடிப்பதற்கு ஐந்து நிமிடங்கள் முன்னதாகவே வகுப்பை விட்டுவிட்டு, நேரே அந்த உணவு அறைக்குச் சென்று, பார்ப்பன ஆசிரியர்கள் வருவதற்கு முன்னரே உண்

ணத் தொடங்கிவிட்டார். அவர்கள் வந்து உணவருந்திக் கொண்டிருக்கும்போது இவர் நுழைந்தால் இவரால் அவர்களுடைய உணவு தீட்டுப்பட்டு அவர்கள் உண்ண முடியாமற்போய்விடுகிறது என்று கூறுகிறூர்கள். ஆனல் அவர்கள் வருவதற்கு முன்னதாகவே இவர் உண்ணத் தொடங்கிவிட்டால் அவர்கள் அவ்வாறு குறை கூற முடியாதல்லவா? அதற்காகவே இவர் இந்தத் தந்திரத்தைக் கையாண்டார். மணி அடித்த பிறகு அந்த ஆசிரியர்கள் உணவு அறைக்கு வந்து, இவர் உண்பதைக் கண்டு உள்ளே நுழையாமலேயே திரும்பிச் சென்றுவிட்டனர். அவர்கள் உண்பதற்கு வேறு தனி அறை ஏதும் இல்லாததால் ஐந்தாறு நாட்கள் அவர்கள் நண்பகல் உணவு கொண்டுவராமலே பட்டினி இருந்து பார்த்தார்களாம். ஆனல் இந்தப் "பொல்லாத" வயிறு எத்தனை நாட்களுக்குத்தான் பட்டினி இருக்க ஒப்புக் கொள்ளும்! அடுத்த வாரத்திலிருந்து, காலம் மிக மிகக் கெட்டுவிட்டது என்று முணுமுணுத்துக்கொண்டே, அவர்கள் அனைவரும் இவருடன் ஒரே அறையில் ஒன்றுக இருந்து உண்ணத் தொடங்கினராம். இது மிகச் சிறிய நிகழ்ச்சி போலக் காணப்பட்டாலும் பார்ப்பனரல்லாதாரின் சம உரிமைப் போராட்டத்தின் மிகச் சிறந்த ஒரு பகுதி என்பதை யார் மறுக்க முடியும்?

ஏறத்தாழ இந்த நிகழ்ச்சி நடைபெற்ற அதே சமயத்தில் அதே பள்ளிக்கூடத்தில் பார்ப்பன மாணவர்கள் அருந்துவதற்காக ஒரு தண்ணீர்ப் பானையும் பார்ப்பனரல்லாத மாணவர்கள் அருந்துவதற்காக மற்ருெரு தண்ணீர்ப் பானையும் வைக்கப்பட்டிருந்தன. பார்ப்பன மாணவர்கள் உயர்ந்த சாதியினர் — ஆகவே அவர்கள் குடிப்பதற்கென்று தனியாக ஒரு பானை இருத்தல் வேண்டும் என்னும் அடிப்படையின்மீதே அந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவேண்டும் என்பது வெள்ளிடை மலை. அவர்கள் தண்ணீர் குடிக்கும் அதே பானையிலிருந்து பார்ப்பனரல்

லாத மாணவர்கள் குடிக்க அனுமதிக்கப்படாததால் அவர்கள் தாழ்ந்த சாதியினராகக் கருதப்பட்டார்கள் என்பதும் தெளிவாகத் தெரிகிற உண்மையே. பார்ப்பனரல்லாத சமுதாயத்தைச் சேர்ந்த மாபெரும் வள்ளல் பச்சையப்பனுரின் பணத்தாலும் பெயராலும் நடைபெறும் ஒரு பள்ளிக்கூடத்தில் அந்தப் பார்ப்பனரல்லாதாருக்கு இத்தகைய அவமானம் இழைக்கப்படுவதைக் காணச் சகிக்காத மணிமொழியார், ஒருநாள், தம்முடைய வகுப்பிற் பயிலும் பார்ப்பனரல்லாத மாணவர்கள் சிலரை அழைத்து, பார்ப்பன மாணவர்களுக்கு மட்டும் என்று இருந்த தண்ணீர்ப் பானையில் நீர் மொண்டு அருந்தும்படித் தெரிவித்துவிட்டார். ஆசிரியரே இப்படிக் "கட்டளை" யிட்டுவிட்ட பிறகு அவர்பால் பேரன்பு கொண்டிருந்த மாணவர்கள் அதை நிறைவேற்றுமலா போவார்கள்? கட்டளை உடனே நிறைவேற்றப்பட்டுவிட்டது. தங்களுக்கென்று இருந்த பானையிலிருந்து பார்ப்பனரல்லாத மாணவர்கள் தண்ணீர் மொண்டு அருந்தியதைக் கண்டு பேரதிர்ச்சியும் பெருவியப்பும் அடைந்த பார்ப்பன மாணவர்கள் ஓடோடிச் சென்று தலைமையாசிரியரிடம் புகார் செய்தனர். (அவரும் பார்ப்பன சமுதாயத்தைச் சேர்ந்தவரே) அவர் உடனே தண்ணீர் அருந்திய "மாபாதகர்"களைக் கூப்பிட்டு, "ஏன் அப்படிச் செய்தீர்கள்" என்று கேட்டபோது, "தமிழ்ப் பண்டிதர் மாணிக்கவாசக முதலியார்தான் அப்படிச் செய்யச் சொன்னுர்" என்று அவர்கள் கூறிவிட்டார்கள். அழைப்பு பிறந்தது மணிமொழியாருக்கு. சென்றுர் தலைமை யாசிரியருடைய அறைக்கு. "பள்ளிக்கூடத்தில் ஏன் இப்படியெல்லாம் குழப்பத்தை விளைவிக்கிறீர்கள்?" இது தலைமையாசிரியருடைய கேள்வி. "குழப்பம் விளைவிப்பதா? நானு? ஒருக்காலும் இல்லை. இன்று பகல் என் வகுப்பைச் சேர்ந்த ஒரு மாணவன் திடீரென்று என்னிடம் வந்து, தண்ணீர்த் தாகம்—நாவறட்டுகிறது—உயிர் போகிறது என்று சொல்லித் துடி துடித்து நின்றுன். தண்ணீர்ப் பானைதான் இருக்கிறதே, போய்க் குடித்துவிட்டு

வாயேன் என்று நான் கூறினேன். அதற்கு அவன், நான் வேளாள சாதியைச் சேர்ந்தவன். என்னைவிடத் தாழ்ந்த சாதிப்பையன் ஒருவன் என் கண்ணெதிரில் நமக் கென்று உள்ள பானையில் நீர் மொண்டு அருந்துவதைப் பார்த்தேன். இந்த நிலையில் நானும் அதே பானையில் நீர் அருந்தினால் என் சாதி ஆசாரம் என்ன கதியாவது என்று சொல்லி வருந்தினான். அவனுடைய வீடு மிகத் தொலைவில் இருப்பதால் உன் வீட்டிற்குப் போய்த் தண்ணீர் குடித்துவிட்டுவா என்று கூறவும் முடியவில்லை. தண்ணீரோ உடனே வேண்டும் என்கிறான். பார்ப்பன ரல்லாத மாணவர்களுக் கென்று உள்ள பானையோ தாழ்ந்த சாதிக்காரன் ஒருவன் நீர் அருந்தியதால் "கெட்டு விட்டது" என்கிறான். இந்த நிலையில் நான் என்ன செய்யமுடியும்? தண்ணீர்த் தாகம் மிக அதிகமாக இருந் தால் பார்ப்பன மாணவர்கட்கு உள்ள பானையில்தான் கொஞ்சம் மொண்டு குடியேன் என்று சொல்லிவிட் டேன்."—இது மணிமொழியார் அளித்த விடை. பிறப்பி னால் உயர்வு தாழ்வு கற்பிக்கும் வர்ணாஸ்ரம ஏற்பாட்டை அற்புதமான முறையில் கேலி செய்து, அதன் உளுத்துப் போன தன்மையை மறுக்கமுடியாத முறையில் எடுத்துக் காட்டும் இந்த விடையைக் கேட்டபிறகு தலைமையாசிரியர் என்ன பதில் கூறமுடியும்? பதில் ஏதும் கூறவில்லை யென்றாலும் ஆத்திரமடைந்த தலைமையாசிரியர் மறுநாள் இரண்டு பானைகளையுமே அப்புறப்படுத்தும்படி உத்தர விட்டுவிட்டார். இதனைக் கண்ட மணிமொழியார் சிறிது நேரத்திற்கு ஒரு முறை, பல மாணவர்களைத் தலைமை யாசிரியருடைய அறைக்கு அனுப்பி, தண்ணீர்த்தாகம் அதிகமாக உள்ளது. உடனே நீர் தேவை என்று கூக்குரல் எழுப்பும்படிச் செய்தார். இந்தப் புதிய பிரச்சினையைக் கண்டு மருண்ட பார்ப்பன சமுதாயத்தைச் சேர்ந்த தலைமை யாசிரியர், இனி என்ன செய்தாலும் மணிமொழி யாரை ஏமாற்றமுடியாது என்பதை நன்றாக அறிந்து கொண்டவராய், அதற்கடுத்த நாளிலிருந்து ஒரே ஒரு

பானையை வைத்து, பார்ப்பன மாணவர்களும் சரி, ஏனைய மாணவர்களும் சரி, அதே பானையிலிருந்துதான் நீர் அருந்த வேண்டும் என்று தெரிவித்துவிட்டார். அந்தக் காலத்தில் தன்னந்தனியராக இருந்து போராட்டம் நடத்தி மணிமொழியார் பெற்ற இந்த வெற்றி, எல்லோரும் ஓர் குலம் என்னும் உயரிய கொள்கையில் உண்மையான பற்றுக்கொண்ட அத்தனைப் பேராலும் போற்றிப் புகழத் தக்க மகத்தான வெற்றியாகும்.

அந்தப் பள்ளிக்கூட நூல் நிலையத்திற்கு 'இந்து' தின இதழ் வாங்கப்பட்டு வந்ததை எதிர்த்துக் கிளர்ச்சி செய்து, "இந்து"வுக்குப் பதிலாக நீதிக் கட்சியின் ஆங்கில தினசரியாக அப்போது வெளிவந்துகொண்டிருந்த 'ஜஸ்டிஸ்' இதழை வாங்கும்படிச் செய்ததும், அந்தப் பள்ளியில் பி.ஏ., எல்.டி. பயின்ற ஆசிரியர்கள் அத்தனைப் பேரும் பார்ப்பன சமுதாயத்தவராகவே இருப்பதைக் கண்டு வருந்தி, சென்னை நகருக்குப் பலமுறை சென்று பச்சையப்பன் அறநிலையக் குழுவினருடன் வாதாடியும் போராடியும் பெருமுயற்சி செய்து பார்ப்பனரல்லாத பி.ஏ., எல்.டி. ஒருவரை அந்தப் பள்ளியில் ஆசிரியராகச் சேர்த்ததும், ஒருபார்ப்பனரல்லாத எல். டி. தன் பள்ளியில் ஆசிரியராவதைக் காணச் சகிக்காத பார்ப்பனத் தலைமையாசிரியர், பல நாட்கள் அவருக்கு வகுப்புகள் எவற்றையும் தராமல் வீணே வந்து போகும்படிச் செய்வதைக் கண்டு— அவருக்கு வேலை எதுவும் இல்லை என்று பள்ளிக்கூட நிர்வாகிகளிடம் கூறி அவரை உத்தியோகத்திலிருந்து விரட்டுவதற்காக அவர் செய்யும் சூழ்ச்சி இது என்பதை நன்கறிந்து, மீண்டும் பலமுறை சென்னையில் உள்ள பச்சையப்பன் அறநிலையக் குழுவினருக்குக் கடிதங்கள் வாயிலாகவும், நேரில் சென்றும் நிலைமையை விளக்கிக் கூறித் தலைமையாசிரியரின் தந்திரத்தை முறியடித்துப் பார்ப்பனரல்லாத எல். டி. க்கு வகுப்புகள் பெற்றுத் தந்த

தும், மணிமொழியார் அவர்கள் இச் சமயத்தில் ஆற்றிய வேறு சில அருஞ் செயல்களாகும்.

**சுயமரியாதை இயக்கத் தொண்டர் மணி மொழியார் :—**

மணி மொழியார் பிறந்த குடும்பம், தமிழ்ப் புலமை நிரம்பியதாகத் திகழ்ந்த அதே நேரத்தில், அளவுகடந்த வைதீக உணர்ச்சிக்கும் ஆச்சார அனுஷ்டானங்களுக்கும் ஆளாகிய குடும்பமாகவும் இருந்து வந்தது. அத்தகைய குடும்பத்தில் தோன்றிய மணி மொழியாரும், பள்ளிக் கூடத்தில் பயின்ற ஆண்டுகளிலும், அதற்கடுத்த சில ஆண்டுகள் வரையிலும், வைதீகக் கோலம் படைத்தவ ராகவே காணப்பட்டார். அப்போதெல்லாம் நெற்றி நிறையத் திருநீறு ; கழுத்திலே உருத்திராக்கம் ; தலையிலே குடுமி ; கையிலே எப்போதும் கயப்பாக்கம் சதாசிவ செட்டியாரால் வெளியிடப்பட்ட திராவிட வேதத்திரட்டு என்னும் பன்னிரு திருமுறைத் தொகுப்பு நூல்—இப் படித்தான் காணப்படுவார் மணிமொழியார். நாள்தோ றும் காலையில் குளித்துமுழுகிப் பூசைபாராயணம் செய்து விட்டுத்தான் வெளியே புறப்படுவார். அவருக்கென்று அவருடைய வீட்டில் தனியாக பூசை அறையும் விக்ரகங் களும் வைத்திருந்தார். ஆண்டுதோறும் நவராத்திரியின் போது 500 ரூபாய்க்குமேல் செலவு செய்து அந்த விக் ரகங்களுக்குப் பெருவிழா நடத்துவார். கோயில் குடை கள், விருதுகள், மேளவாத்தியங்கள் இன்னபிற சிறப்புக் கள் யாவும் குறைவற அமைந்திருக்க அவருடைய விக்ர கங்கள் காஞ்சீபுரக் கடைவீதிகளில் உற்சவ ஊர்வலம் வரும், விக்ரகங்களுக்கு முன்னல், மணிமொழியார், குருக்கள் கோலத்தில், தேங்காயுடைத்தும் தீபாராதனை செய்தும் திருநீறு தந்தும் செல்வார்.

மணிமொழியாரிடம் காணப்பட்ட இந்த வைதீகக் கோலமும் பழமை உணர்ச்சியும் 1922 முதல் சிறுகச்

சிறுகத் தேயத் தொடங்கி, 1930 முதல் பழுத்த சுயமரியாதைக்காரராக மாறிவிட்டார். அவரிடம் காணப்பட்ட திருநீற்றுப் பூச்சும் விக்ரக வழிபாடும் திருவிழா வெறியும் இருந்த இடம் தெரியாமல் மறைந்து போயின. 1922க்கு முன் சைவ சமயத்து இளந்துறவிபோல் காணப்பட்ட அவரை நேரில் கண்டவர்கள், 1930க்குப் பின் மீண்டும் அவரைக் கண்டபோது, அவர்தானு இவர் என்று ஐயுறும் அளவுக்கு அவருடைய வைதீகத் தோற்றம் முற்றிலும் மறைந்துவிட்டது. 1930 முதல் அவர் ஆற்றிய சொற்பொழிவுகள் எல்லாம், செந்தமிழ் நாட்டுச் சமுதாயத்தைச் செல்லரித்துவருகின்ற மூட நம்பிக்கைகளை அலசி ஆராய்ந்து, அவற்றின் பொருந்தாத் தன்மையை விளக்கிக்காட்டுகின்ற பகுத்தறிவுப் போக்குடையனவாக மாறிவிட்டன.

மூட நம்பிக்கைகளை முறியடிக்க அவர் மேற்கொண்ட சுயமரியாதைத் தொண்டுகளில் ஒரு நிகழ்ச்சி, சுவை நிரம்பியதாகவும், அவருடைய அஞ்சாத நெஞ்சத்தை அழகுபட எடுத்து விளக்குவதாகவும் அமைந்துள்ளது. அவர் அதிதீவிரப் பகுத்தறிவுப் பிரசாரம் செய்து வந்த அந்த நாட்களில், காஞ்சிபுரம் காமாட்சியம்மன் கோயில் தெருவில் ஓர் இளைஞன் தற்கொலை செய்து கொண்டு இறந்துவிட்டான். இறந்த அவன், பேயாக மாறி, நாள்தோறும் நள்ளிரவில் வந்து அவனுடைய வீட்டுக் கதவைத் தட்டுவதாகவும், அதனல் தங்களுக்குப் பேரச்சமாக இருப்பதாகவும் அந்த இளைஞனுடைய குடும்பத்தார் ஒரு நாள் மணிமொழியாரிடம் தெரிவித்தனர். பேய்—பூதம்—பிசாசு என்பனவெல்லாம் வெறும் கட்டுக் கதைகளே என்றும், அவை உண்மையாகவே இருப்பனவாக எண்ணி ஏமாறுதல் அறிவின்மை என்றும் பொதுக் கூட்டங்களில் சொற்பொழிவாற்றிவந்த மணிமொழியார், இந்த நிகழ்ச்சியைக் கேள்விப்பட்டதும், உண்மையாகவே பேய் என்று ஒன்று உண்டா என்பதைக் கண்டறிவ

தற்குச் சரியான வாய்ப்புக் கிடைத்தது என்று எண்ணி மகிழலானார். அவருடைய நெருங்கிய நண்பரும், காஞ்சி குமரன் அச்சுக்கூடத்தைத் தொடங்கி நடத்திவந்த அதன் உரிமையாளருமாகிய திரு. குப்புசாமி முதலியாரையும், கட்டான உடல் படைத்த மற்றோர் நண்பரையும் அழைத்துக் கொண்டு, மணிமொழியார், அன்று இரவே, 'பேய்' வந்து கதவைத் தட்டுகின்ற வீட்டிற்குச் சென்று, தெருக் கதவைத் தாளிட்டுவிட்டு, அந்தக் கதவுக்குச் சற்று உள்ளே இருந்த அறை ஒன்றில் கைவிளக்கின் ஒளியை மிகச் சிறிதாகக் குறைத்துவிட்டு விழித்துக்கொண்டே படுத்திருந்தார். "பேய் வந்து கதவைத் தட்டியதும் நான் இருட்டிலேயே சென்று கதவைத் திறக்கிறேன். பேய் உள்ளே வந்ததும் அதை அழுத்தமாகப் பிடித்துக் கொண்டு உங்களை அழைக்கிறேன். அதன்பின் நீங்கள் விளக்கை எடுத்துக்கொண்டு வாருங்கள்" என்று மற்ற இருவர்களிடமும் சொல்லி வைத்தார். சரியாக நள்ளிரவு 12 மணி. தடதடவென மிகப் பலமாகக் கதவைத்தட்டும் ஓசை கேட்டது. சிறிதும் அஞ்சாமல், மடமடவென முன்னால் சென்று, இருட்டிலேயே தெருக் கதவின் தாளை விலக்கினார் மணிமொழியார். ஓங்காரக் கூச்சலிட்டுக் கொண்டே தலை உட்பட உடல் முழுதும் கறுப்புத் துணியால் போர்த்தப்பட்ட ஒரு கரிய உருவம் உள்ளே நுழைந்தது. கெட்டியாகப் பிடித்துக் கொண்டார் மணி மொழியார். "பேய்" இப்படியும் அப்படியும் திமிறி அவர் கைப் பிடியிலிருந்துவிலகப்பார்த்தது. விடவில்லை மணிமொழியார். இதற்குள் மற்ற இருவரும் விளக்கை எடுத்துக்கொண்டு அங்கே வந்தனர். "பேய்" மீண்டும் ஓடப்பார்த்தது. விடுவார்களா மூவரும்? அதன் கைகளைப் பலமாகப் பிடித்துக்கொண்டு, அதன் தலையை மூடியிருந்த கறுப்புத் துணியை விலக்கிப் பார்த்தனர். பார்த்ததும், பேய், பேய் அல்ல, நம்மைப் போன்ற இரண்டுகால் மனிதரே என்பது தெளிவாகத் தெரிந்துவிட்டது. அவர்கள் கைகளில் சிக்குண்டு திண்டாடித் திணறிய "பேய்," வேறு யாருமல்ல;

அந்தப் பகுதிகளில் பேய் ஓட்டும் தொழிலையே தன் பிழைப்புக்கு வழியாகக் கொண்டிருந்த ஒரு மந்திர வாதியே! இரவில் வந்து கதவைத் தட்டினால், பேய் வந்து விட்டதென்று பயந்து, பகலில் தன்னை அழைத்துப் பேய் ஓட்ட வைப்பார்கள் என்பதற்காகவே அவன் இந்தத் தந்திரத்தைக் கையாண்டிருக்கிறான். இனி இப்படியெல்லாம் மக்களை அச்சுறுத்தி ஏமாற்றுவதில்லை என்கிற வாக்குறுதியை அவனிடம் வாங்கிக்கொண்டு அவனை அனுப்பிவிட்டார் மணிமொழியார். சுயமரியாதை இயக்கக் கொள்கைகளைப் பரப்புவதற்காகவும் மூட நம்பிக்கைகளை முறியடிப்பதற்காகவும் எத்தகைய நெஞ்சு உரத்தோடும் துணிச்சலோடும் பணியாற்றியுள்ளார் மணிமொழியார் என்பதை இந்த நிகழ்ச்சி எழில்பட விளக்குகிறது அல்லவா?

1930 முதலாகவே ஏராளமான சுயமரியாதைத் திருமணங்களுக்குத் தலைமை தாங்கி நடத்தி வைத்திருக்கிறார் மணிமொழியார். இந்த முப்பது ஆண்டுகளில் அவரால் நடத்தப்பட்ட சுயமரியாதைத் திருமணங்கள் ஆயிரத்திற்கு மேல் இருக்கும். மிகவும் பொல்லாத நேரம் என்று பாமர மக்களால் கருதப்படுகிற இராகு காலத்தில் மணிமொழியார் எட்டு திருமணங்களை நடத்திவைத்திருக்கிறார். அந்த எட்டு திருமணங்களை நடத்திக் கொண்டவர்களும் நல்ல உடல் வளத்தோடும் குழந்தை குட்டிகளோடும் சிறப்பாக வாழ்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டி, "இராகு காலம் என்பது வெறும் மூட நம்பிக்கையே என்பதை விளக்க இதைவிட வேறென்ன ஆதாரம் வேண்டும்?" என்று மணிமொழியார், அதன்பின் நடைபெற்ற சுயமரியாதைத் திருமணங்களில் சொற்பொழிவாற்றுவது உண்டு.

வடமொழி மந்திரங்கள் இல்லாமல், பார்ப்பனப் புரோகிதரும் இல்லாமல், ஆனால் சடங்குகளை உடையதாய் நடத்தப்படுகிற தமிழ்த் திருமணங்களையும் ஏராளமாக நடத்தியிருக்கிறார் மணிமொழியார். மணிமொழியா

ருக்கு அந்தச் சடங்குகளில் துளியும் நம்பிக்கையில்லை என்றபோதிலும், வடமொழி முறையில் அமைந்த வைதீகத் திருமணத்தையும் நடத்த விருப்பமில்லாமல்—சடங்குகளே இல்லாத பகுத்தறிவுத் திருமணத்தை நடத்துகிற அளவு தைரியமும் இல்லாமல் திண்டாடுகிற தமிழ்க் குடும்பங்களின் நன்மைக்காக அத்தகைய திருமணங்கள் பலவற்றை 1947 வரை அவர் நடத்தியிருக்கிறார்.

### செங்குந்தர் இயக்கமும் இலங்கைப் பயணமும்:—

காஞ்சி மணிமொழியார் அவர்கள் செங்குந்தர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள். அந்தச் சமுதாயம் அந்தக் காலத்தில் கல்வித் துறையிலும் பொருளாதார நிலையிலும் மிகத் தாழ்ந்த நிலையில் இருப்பதைக் கண்ட அச் சமூகப் பெரியார்கள் பலர் ஒன்று சேர்ந்து, 1927-ம் ஆண்டு ஏப்ரல் திங்களில், சென்னை நகரில், தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம் என்னும் பெயர்படைத்த சிறந்ததோர் அமைப்பை உருவாக்கி, அதன் வாயிலாக நாடெங்கிலும் உள்ள செங்குந்தர்களை ஒன்று திரட்டி முன்னேற்றமுறச் செய்யும் மாபெருந் தொண்டில் ஈடுபடலானார்கள். இந்த அரிய முயற்சியை அறிந்த மணிமொழியார் அவர்கள், பள்ளிக்கூட ஓய்வு நாட்களில் எல்லாம், செங்குந்தர்கள் வதியும் சிற்றூர்களுக்கும் பேரூர்களுக்கும் சென்று, செங்குந்தர் சங்கங்கள் நிறுவியும், ஏராளமான பொதுக்கூட்டங்கள் கூட்டி விரிவுரையாற்றியும், அந்தச் சமூக முன்னேற்றத்திற்காக அரும்பணியாற்றத் தொடங்கி விட்டார். 1928—29 ஆம் ஆண்டுகளில், அவருடைய இந்தத் தொண்டு, பல மடங்கு தீவிரமாகவும் வேகமாகவும் நடைபெறலாயிற்று. 21-1-1929 ல் ஈரோட்டில் கூடிய தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்க நிர்வாகக் குழுவின் கூட்டத்தில் அந்தச் சங்கத்தின் இரண்டு செயலாளர்களில் ஒருவராக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டு, அதுமுதல் மூன்று ஆண்டுகள் அந்தப் பணியைத் திறம்பட நடத்திவந்தார்.



மணிமொழியாரின் தந்தையார்

**பி. செங்கல்வராய முதலியார்**

[தோற்றம் : 1833. மறைவு : 1917]



மணிமொழியாரின் குடும்பம்

அதே சங்கத்தாரால் நடத்தப்பட்டுவந்த **"செங்குந்த மித்திரன்"** என்னும் மாத இதழுக்கு 24-2-1929 ல் அவர் துணையாசிரியராக நியமிக்கப்பட்டார். அந்தச் சமயத்தில் அந்த இதழின் ஆசிரியராக இருந்தவர், பிற்காலத்தில் காஞ்சிபுரம் பச்சையப்பன் கல்லூரியின் முதல்வராக ஒளி வீசித் திகழ்ந்த பேராசிரியர் ம. சண்முகசுந்தர முதலியார் எம்.ஏ , எல்.டி. அவர்கள் ஆவார். 'செங்குந்தமித்திரன்' துணையாசிரியராக இருந்தபோது அந்த இதழில் மணிமொழியார் அவர்களால் தீட்டப்பட்டுவந்த கட்டுரைகள், சுண்டிச் சோர்ந்த நரம்புகளுக்கும் சுறுசுறுப்பூட்டும் 'டானிக்'குகளாக-விசையொடிந்த தேகத்திற்கும் வன்மையூட்டும் உயிரோவியங்களாகக் காட்சி அளித்தன.

பொதுநலப் பணியாற்றுவதில் அவருக்கு இருந்த பேரார்வத்தையும், மெய்வருத்தம் பாராதும் பசி நோக்காதும் ஓய்வு ஒழிவின்றி உழைக்கவல்ல அவருடைய உள்ளத் திண்மையையும், கடல்மடை திறந்தாற்போல் சொன்மாரி பொழியவல்ல அவருடைய பேச்சுத் திறமையையும், பேரறிஞர்களையும் கவரவல்ல அவருடைய எழுத்தாற்றலையும் கண்டு மட்டிலா மகிழ்ச்சியடைந்த செங்குந்த சமூகத் தலைவர்கள், ஆசிரியப் பணியிலிருந்து விலகி செங்குந்தர் சமூக முன்னேற்ற இயக்கத்தின் முழுநேரப் பேச்சாளராகத் தன்னைத்தானே அர்ப்பணித்துவிடும்படி 1928 முதலே அவரை வற்புறுத்தத் தொடங்கிவிட்டார்கள். 1930 ல் அவர்களுடைய அன்பான கட்டளையை மறுக்க முடியாமல், ஆசிரியர் வேலையிலிருந்து விலகி, தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் முழுநேரப் பிரசாரகராகப் பணியேற்றுக் கொண்டார். அதுமுதல் அவருடைய சமூகத் தொண்டு முன்னிலும் பல மடங்கு விரிவாக நடைபெறலாயிற்று. 1928 முதல் 1938 வரை செங்குந்த மக்களின் முன்னேற்றத்திற்காக நாடெங்கும் சுழன்று சுழன்று அவர் புரிந்த வீரமுழக்கங்களாலும், நடத்திய பொதுக் கூட்டங்களாலும், செங்குந்தர் இயக்கம் ஓங்கி

வளர்ந்து செழித்துச் சிறந்து விளங்கலாயிற்று. பி. செ. மாணிக்கவாசக முதலியார் என்கிற பெயரால் அப்போது நாட்டிற்கு அறிமுகமாகியிருந்த காஞ்சி மணிமொழியார், இந்தத் துறையில் அவரோடு தோளோடு தோள் கோத்து நின்று பணியாற்றிய சென்னை சேத்துப்பட்டுப் பேராசிரியர் ம. சண்முகசுந்தர முதலியார் எம். ஏ., எல். டி. சென்னை திருவல்லிக்கேணி தி. அ. சண்முக முதலியார், சென்னை கோடம்பாக்கம் மா. அ. கனகசபை முதலியார் ஆகிய நால்வருமே செங்குந்தர் சமூக முன்னேற்றப் பிரசாரத்தில் பிறர் எவரையும்விட மிக அதிகமாக ஈடுபட்டவர்கள் ஆவார்கள். அந்தக் காலத்தில் **'செங்குந்தர் சமூக நால்வர்'** என்றே இவர்கள் அந்தச் சமூகத்து மக்கள் மன்றத்தால் பாசத்தோடும் நேசத்தோடும் அழைக்கப்பட்டு வந்தார்கள். செங்குந்தர்குல மக்கள் வாழ்கிற ஊர்கள் ஒவ்வொன்றிற் கும் குறைந்தது ஒருமுறையாவது இந் நால்வரும் சென்று வந்திருப்பார்கள் என்பதில் துளியும் ஐயமில்லை.

மணிமொழியார் அவர்கள் தமிழ்நாட்டின் எல்லா மாவட்டங்களிலும் எண்ணற்ற முறை சுற்றுப் பயணம் செய்து சமூகத் தொண்டாற்றியதோடு நில்லாமல் இலங் கைத் தீவிற்கும் சென்று அரும்பணி புரிந்துள்ளார். 1932-ல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற இலங்கைச் செங்குந்தர் மாநாட்டிற் கொடியேற்றிவைக்கச் சென்று, இலங்கை முழுதும் இரண்டு மாத காலம் சுற்றுப் பயணம் செய்து ஏராளமான கூட்டங்களில் சொற்பொழிவாற்றி னார்.

செங்குந்தர் சமூகப் பொதுக்கூட்டங்களிலெல்லாம், மணிமொழியார், அந்தச் சமூக மக்கள் கல்வியில் முன் னேறவேண்டியதன் இன்றியமையாமையை வற்புறுத்து வார்; காலத்திற்கு ஒவ்வாத சடங்கு சம்பிரதாயங்களையும் அறிவுக்குப் பொருந்தாத மூட நம்பிக்கைகளையும் விலக் கித் தீரவேண்டியதன் அவசியத்தை எடுத்துப் பேசுவார்;

மாதர் மறுமணங்கள் நடத்தப்பட வேண்டியது அவசியத்திலும் அவசியம் என்பதை எழில்பட விளக்குவார்; தத்தம் ஊருக்குள்ளாகவே பெண் கொள்ளல்—கொடுத்தல் ஆகாது என்பதையும், வெவ்வேறு மாவட்டங்களில் உள்ளவர்களும் திருமண உறவு கொள்ளல் வேண்டும் என்பதையும் வலியுறுத்திச் சொல்லுவார். எத்தனையோ ஊர்களில் செங்குந்தர்களுக்கிடையே எத்தனையோ ஆண்டுகளாக இருந்துவந்த பிளவுகளையும் பிணக்குகளையும் மிகத் திறமையாக அவர் தீர்த்து வைத்திருக்கின்றார் என்பதும், அப்படித் தீர்த்து வைப்பதற்காகவே அவரைப் பல ஊர்களைச் சேர்ந்தவர்கள் பலமுறை அழைத்துச் சென்றிருக்கிறார்கள் என்பதும் இங்கே சிறப்பாகக் குறிக்கத்தக்க செய்திகளாகும். அப்படி அவர் சென்ற ஊர்களில், பிணக்குகளை நன்றாக ஆய்ந்து அறிந்து அவர் ஓர் தீர்ப்பைத் தந்துவிடுவாரானால் அந்தத் தீர்ப்புக்கு அனைவரும் மறு சொல் கூறாது கட்டுப்பட்டனர் என்பதும், அவர் அளித்த தீர்ப்புகள் நடுநிலை தவறாத நல்ல தீர்ப்புகளாக விளங்கின என்பதும் இச் சமயத்தில் எண்ணி மகிழத் தக்க ஏற்றம் மிக்க உண்மைகளாகும்.

தென்னிந்திய செங்குந்தர் மகாஜன சங்கத்தின் செயலாளராக விளங்கியபோது இவர் நடத்திய பல்வேறு ஆக்கப்பணிகளில் தலைசிறந்தது, **செங்குந்தர் கல்வி நிதி** என்னும் அமைப்பை உருவாக்கியதாகும், செங்குந்த சமுதாயத்தில் விரல்விட்டு எண்ணக்கூடிய பட்டதாரிகள் மட்டுமே இருந்த அந்தக் காலத்தில், அந்தச் சமூகத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் அளித்து அவர்களுடைய கல்வியின் முன்னேற்றத்திற்கு ஆக்கமும் ஊக்கமும் அளிப்பதற்காகவே, மணிமொழியார் அவர்கள், மற்றோர் செயலாளராகிய பேராசிரியர் சண்முகசுந்தரனாருடன் இணைந்து நின்று இந்த அமைப்பை ஏற்படுத்தினார்கள். இதற்காக 1929—30 ஆம் ஆண்டுகளில் லாட்டரித் திட்டம் ஒன்றை ஏற்பாடு செய்து, நாடெங்கும் பெரு

முயற்சி செய்து லாட்டரிச் சீட்டுகளை விற்றுப் பதினெட்டாயிரம் ரூபாய் திரட்டினார் அந்தச் செயல் வீரர். பரிசுத் தொகைகளும் செலவும் போக எஞ்சிய பணம் முழுவதும் பாங்கியில் போடப்பட்டு, நாளடைவில் மேலும் பலருடைய நன்கொடைகள் அந்தத் தொகையோடு சேர்க்கப்பட்டு, கிடைக்கும் வட்டியிலிருந்து 1935 முதல் ஆண்டு தோறும் ஏறத்தாழ ஆயிரம் ரூபாய், செங்குந்தர் குல ஏழை மாணவர்கட்கு உபகாரச் சம்பளமாக அளிக்கப்பட்டு வருகிறது. அந்தக் காலத்தில் மணிமொழியார் ஆற்றிய இந்த அருஞ்செயலால் இன்றளவும் ஏராளமான ஏழை மாணவர்கள் நன்மை பெற்று வருவது, சிந்தையில் தேன் பாய்ச்சவல்ல இனிமையான செய்தியாகும்.

செங்குந்தர் இயக்கத்திற்காக அவர் செய்துள்ள மற்றோர் அரிய ஆக்கவேலை, செங்குந்தர் சங்கத்திற்குச் சொந்தமாகச் **செங்குந்த மித்திரன் அச்சுக்கூடம்** என்னும் பெயருடைய அச்சகம் ஒன்றை உருவாக்கும்படிச் செய்திருப்பதாகும். செங்குந்தர் இயக்கம் சிறப்புடன் வளரவேண்டுமானால் அந்த இயக்கத்தின் மாத இதழாகிய "செங்குந்த மித்திரன்" தொடர்ந்து இருந்தாக வேண்டும் என்றும், அப்படி அந்த இதழ் வலிவும் பொலிவும் பெற்று முன்னேற்றப் பாதையில் விரைந்து செல்ல வேண்டுமானால் சொந்த அச்சகம் ஒன்று இருத்தல் இன்றியமையாதது என்றும் வற்புறுத்திக் கூறி, அந்த அச்சக அமைப்புக்குச் செங்குந்தர் சங்கத் தலைவர்களை இணங்க வைத்து, அச்சகத்தை உடனிருந்து உருவாக்கியதோடு அமைதியுறாமல், அது தொடங்கப்பட்ட 1935-ஆம் ஆண்டிலிருந்து 1946 ஆகஸ்ட் மாதம் வரையில் கிட்டத்தட்டப் பதினோரு ஆண்டுகள் அதன் நிர்வாகப் பொறுப்பை ஏற்று அதைச் சீரும் சிறப்புமாக நடத்தி வந்த பெருமையும் மணிமொழியாரையே சாரும். 1927-ல் தொடங்கப்பட்ட "செங்குந்த மித்திரன்" திங்கள் இதழ்—ஆண்டுகள் 32 முடிந்தும்—இன்றளவும் தவறாமல் வெளி

வருகிறது என்றால், அப்படி வருவதற்குரிய முக்கிய காரணம் சொந்த அச்சகம் அமைந்திருப்பதே ஆகும்.

### "செங்குந்த மித்திரன்" இதழாசிரியர் :—

1929 முதல் "செங்குந்த மித்திரன்" மாத வெளியீட்டின் துணையாசிரியராக விளங்கி அதன் செழிப்புக்கும் சிறப்புக்கும் உறுதுணை புரிந்துவந்த மணிமொழியார், 1934 முதல் அதன் ஆசிரியராகவே அமர்த்தப்பட்டு, 1941 வரை அந்தப் பணியைச் செவ்விதின் நிறைவேற்றி வந்தார். அவர் ஆசிரியர் பொறுப்பை ஏற்றது முதல் அந்த இதழ் புது எழில் பூத்துக் குலுங்கும் புத்தறிவுப் பூங்காவாக மாறி விட்டது. பெயரளவுக்கு ஒரு குறிப்பிட்ட குலத்தவர்க்கு மட்டும் உரியதோர் ஏடாக அது காணப்பட்டாலும் நடைமுறையில், தமிழ் மக்கள் பல்லாயிரவரால், சாதி வேறுபாடின்றிப் படித்து மகிழத்தக்க செந்தமிழ் இதழாக அது புகழ்பெற்றுத் திகழ்ந்தது. அழகிய இலக்கியக் கட்டுரைகளும், சிந்திக்கத் தூண்டும் சிறந்த சிறுகதைகளும், உணர்ச்சியும் எழுச்சியும் பொங்கித் ததும்பும் ஆசிரியர் குறிப்புகளும், படிக்கப் படிக்க இனிக்கும் தலையங்கங்களும், அரசியல் விளக்கக் கார்ட்டூன்களும், ஏராளமான படங்களும் கொண்டதாக அந்த இதழை வெளியிட்டு வந்தார் மணிமொழியார். அந்த இதழில் **நினைவு மேடைக் குறிப்புகள்** என்னும் தலைப்பின்கீழ் திங்கள் தோறும் மணிமொழியார் தீட்டிவந்த பொது வாழ்வு பற்றிய கருத்தோவியங்கள், பலமுறை படித்து மகிழத்தக்க பெற்றிமை படைத்தனவாகவும், அரசியலாரின் தவறுகளை அஞ்சாமல் இடித்துக்காட்டும் உள்ள உரம் வாய்ந்தனவாகவும், தமிழர் நன்மைக்குரிய உண்மைகளை எழில்பட எடுத்து விளக்கும் ஆற்றல் உடையனவாகவும் காட்சி அளித்தன.

அந்த இதழில் செய்திகளை வெளியிடும்போது அவற்றை மூன்றாகப் பிரித்து, முதற் பகுதியைத் தமிழ் நாட்டுச் செய்திகள் என்ற தலைப்பிலும், இரண்டாம் பகு

தியை இந்தியச் செய்திகள் என்ற தலைப்பிலும், மூன்றும் பகுதியை உலகச் செய்திகள் என்ற தலைப்பிலும் அவர் வெளியிட்டு வந்தார். அப்படி வெளியிட்ட அமைப்பு முறையானது, தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் முதலில் தங்களைத் தமிழர்கள் என்றும், அதன் பிறகே இந்தியாவைச் சேர்ந்தவர்கள் என்றும், அதற்கு அப்புறமே உலக மனிதர்கள் என்றும் கருதவேண்டும் என்னும் சிறந்த பாடத்தைச் சொல்லாமற் சொல்லிப் புகட்டவைப்பது போல் இருந்தது. 1934-ல் அவர் வகுத்த இந்த வழியே இன்றைக்கும் நம் நாட்டு மக்கள் பின்பற்ற வேண்டிய பொன்னான பாதையாக உள்ளது அல்லவா?

'செங்குந்த மித்திரன்' ஆசிரியராக அவர் இருந்த போது அதன் வாசகர்களால் மிக விரும்பிப் படிக்கப்பட்ட ஒரு பகுதி "மானசீகத் தபால்" என்பதாகும். இந்தப் பகுதியில், பாமர மக்கள், அரசியல் தலைவர்களுக்கும் பெரிய அதிகாரிகளுக்கும் முதன்மையான அமைச்சர்களுக்கும் எழுதுவது போன்ற பல கற்பனைக் கடிதங்களை "மாவண்ணா" என்னும் புனைபெயரில் அவர் தீட்டி வந்தார். அந்தக் கடிதங்கள், இன்றைக்குப் படித்தாலும் இன்பச்சுவை தருவனவாய் அமைந்துள்ளன.

ஒருவருக்கொருவர் உரையாடும் பாணியில் அரசியல் கட்டுரைகளைத் தீட்டுவது இந்தக் காலத்தில் பல இதழ்களிலும் கையாளப்படுகிற ஒரு முறையாக இருக்கின்றதல்லவா? இந்த முறையை 1934—35-ஆம் ஆண்டுகளிலேயே "செங்குந்த மித்திர"னின் தலையங்கக் கட்டுரைகளில் மணிமொழியார் வெற்றிகரமாகக் கையாண்டுள்ளார். இதுபோலவே அடுக்குத் தொடர்களால் அமைந்த அழகிய வாக்கியங்களும் தலைப்புகளும்—விஸ்கி செய்த வேலை, ஆதிசேடனின் ஆர்ப்பாட்டம், மலையை விழுங்கும் மகா தேவர்கள், முத்தண்ணாக்களின் முணுமுணுப்பு என்பன போன்றவை—அந்த நாட்களிலேயே அவரால் திறமையான

முறையில் பயன்படுத்தப்பட்டுள்ளன. சுருக்கமாகச் சொல்லவேண்டுமானுல், மணிமொழியார் அவர்கள் தலை சிறந்த பத்திரிகாசிரியர் என்பதை, மித்திரன், அதன் ஒவ்வோர் இதழிலும் முரசறைந்துகொண்டிருந்தது என்றே இயம்பவேண்டும். இந்தக் காலத்தில் புதிய ஏடுகள் தொடங்குபவர்களுக்குக் கூட 25 ஆண்டுகட்கு முன் அவரால் வெளியிடப்பட்ட 'செங்குந்த மித்திரன்' இதழ்கள் வழிகாட்டவல்ல ஆற்றல் மிக்கன என்பது, மறுக்க முடியாத ஓர் உண்மை.

## இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் மணிமொழியார் :—

இச் சமயம் தமிழகத்தில் காணப்படுகின்ற மாபெரும் மறுமலர்ச்சிக்கும் மகத்தான விழிப்புணர்ச்சிக்கும் அடிப்படையாக அமைந்திருப்பது, 1938—39 ஆம் ஆண்டுகளில் தமிழகத்தில் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டமேயாகும். இந்நாளில் திராவிட இயக்கத்தின் தலைவர்களாகவும் தளபதிகளாகவும் சொல்லின் செல்வர்களாகவும் எழுத்து வேந்தர்களாகவும் வீர உலா வருகின்ற பலரும் அந்த இந்தி எதிர்ப்பு எழுப்பிய உணர்ச்சி வெள்ளத்தால் இழுக்கப்பட்டுப் பொது வாழ்வுக்கு வந்த பெருஞ் செல்வங்கள் என்றே கூறவேண்டும். தமிழகத்தில் தமிழ் மொழியே கட்டாய பாடமாக இல்லாத நிலையில் அப்போது முதலமைச்சராக இருந்த அன்பர் இராசகோபாலாசாரியாரால் இந்தி மொழி கட்டாய பாடமாக்கப்படுகிறது என்பதை அறிந்ததும் மணிமொழியார் அவர்கள், சிங்க ஏறு போல் சீறியெழுந்து, செந்தமிழின் உரிமை காக்க நடத்திய போராட்டங்களும், ஆற்றிய செயல்களும் பொன்னெழுத்துக்களால் பொறிக்கத்தக்க பெருஞ்சிறப்புடையனவாகும். 1938-ல் கருவூரில் (இதுபோது "திராவிடநாடு" இதழின் நிர்வாகப் பொறுப்பாளராக இருந்து வரும்) ஈழத்தடிகள் பி. ஏ. அவர்கள் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தைத்

துவக்கி வைத்ததை அறிந்தவுடன், மணிமொழியார், தாம் குடியிருந்த சென்னை பவழக்காரத் தெரு 147-ஆம் எண் உள்ள வீட்டின்முன் இருந்து, மாபெரும் இந்தி எதிர்ப்பு ஊர்வலம் ஒன்றை மாற்ருரும் வியந்து போற்றும் வண்ணம் நடத்தினர். **சென்னையில் நடைபெற்ற முதல் இந்தி எதிர்ப்பு ஊர்வலம் அதுவே.** அது முதல் சென்னை நகரிலும் சுற்றுப்புறங்களிலும், நூற்றுக்கணக்கான இந்தி எதிர்ப்புக் கூட்டங்களை நடத்தியும் அவற்றில் விரவுரைகள் ஆற்றியும் அந்த இயக்கத்தை விரைந்து வளரச் செய்தார். அந்தப் போராட்டத்தின்போது சென்னை நகரம் முழுவதுமே போர்க் கோலம் பூண்டு, "எப்பக்கம் வந்து புகுந்துவிடும்—இந்தி எத்தனைப் பட்டாளம் கூட்டி வரும்? அற்பம் என்போம் அந்த இந்திதனை! அதன் ஆதிக்கம் தன்னைப் புதைத்திடுவோம்!" என்று இடியோசை எழுப்பிற்றென்ருல், அதற்குரிய மூலகர்த்தாக்களில் மணிமொழியார் முதன்மையான ஒருவராவார். அப்போது அப்பணியில் அவருடன் இணைந்து நின்று பேருதவி புரிந்தவர்கள், செந்தமிழர் பெற்ற செல்வம்—முதுபெரும்புலவர் மயிலை சிவமுத்து அவர்களும், மறைந்த மாவீரர்—சுயமரியாதைச் செழுஞ்சுடர் செ. தெ. நாயகம் அவர்களும், செந்தமிழ்த் துறவிகள் அருணகிரிநாதர், சண்முகாநந்தா ஆகியோரும் ஆவர்.

அக் காலத்தில் அரசாங்க அடக்குமுறை காரணமாக, இந்தி எதிர்ப்புப் போர் பற்றிய அறிக்கைகளையும் நூல்களையும் பொதுக்கூட்ட அழைப்பிதழ்களையும் அச்சிட்டுத் தர பல அச்சக உரிமையாளர்கள் அஞ்சியபோது, மணிமொழியார் அவர்களே தம் அச்சகத்தில் அவற்றையெல்லாம் அச்சிட்டுத் தந்தார். சுவாமி அருணகிரிநாதர் அவர்களால் இயற்றப்பட்ட தமிழ்த் தாய் புலம்பல் என்னும் இந்தி எதிர்ப்புக் கவிதை நூலை, மற்ருேர் அச்சகத்தில் எழுத்துக் கோக்கப்பட்டுப் 'புரூப்' கொடுக்கப்பட்ட பிறகு போலீஸ் அச்சுறுத்தலால் அந்த அச்சகத்தார் அச்சிட்டுத் தர மறுத்து

விட்டனர். வேறு பல அச்சகங்களும் அவ்வாறே மறுத்து விட்டபோது மணிமொழியார் அவர்களே அதனை அச்சிட்டுத் தந்தார்கள் என்பது ஒரு சிலர் மட்டுமே அறிந்த செய்தி—ஆனால் அந்த அருந்தமிழ் அண்ணலின் அஞ்சாத நெஞ்சத்தை அழகுற விளக்கும் அரியதோர் செய்தி.

அந்தப் போராட்டத்தின்போது பல சமயங்களில் திடீரென்று பொதுக்கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்படும். நாளைக்குப் பொதுக்கூட்டம் என்றால் இன்று இரவு பத்து மணிக்குத்தான் அது நடப்பது உறுதியாகும். இரவு பத்து மணிக்குமேல் எழுத்துக் கோக்கும் தொழிலாளர்கள் கிடைப்பது அருமையல்லவா? அத்தகைய நேரங்களில் மணிமொழியார் அவர்களே இரவெல்லாம் கண் விழித்து, எழுத்துக் கோக்கும் வேலையில் ஈடுபட்டு, 'மேக்-அப்' செய்து, தேவையான தாள்களை வெட்டி, 'ட்ரெடில்' அச்சுப் பொறியை இயக்கி, பொதுக்கூட்ட அழைப்பிதழ்களை அச்சிட்டு முடித்து விடுவார். இப்படிப்பட்ட இரவுகள் பற்பலவற்றைச் சந்தித்தவர் மணிமொழியார்.

இந்தி எதிர்ப்புப் போராட்ட அழைப்பிதழ்கள் பலவற்றை அவர் இலவசமாக அல்லது மிகச் சிறிய தொகைக்கு அச்சிட்டுத் தந்தவர் என்பதும், அப்படி அவர் செய்திராவிட்டால் பணநெருக்கடி காரணமாகப் பல அழைப்பிதழ்களை அச்சிட்டே இருக்கமுடியாது என்பதும், பல கூட்டங்கள் நடந்தே இருக்கமாட்டா என்பதும், சென்னை நகரில் அந்த நாட்களில் இயக்கத்தில் ஈடுபட்டிருந்த அனைவரும் அறிந்த செய்திகளாகும்.

கட்டாய இந்தியை எதிர்ப்பதற்கான காரணங்களை யெல்லாம் தெள்ளத் தெளிவாக விளக்கி (An Open Letter to C, Rajagopalachari) ஆச்சாரியாருக்கு ஓர் திறந்த மடல் என்னும் ஓர் அழகிய ஆங்கில நூலை இயற்றிய நாவலர் சோமசுந்தர பாரதியார், அதனைத் தம் சொந்தச் செலவில் பத்தாயிரம் படிகள் அச்சிட்டு நாடெங்கும் இலவசமாகப்

பரப்ப விரும்பினர். புத்தகம் அச்சாகி முடிந்தவுடனே அதன் படிகள் அரசியலாரால் பறிமுதலாகிவிடக்கூடும் என்றோர் வதந்தி பலமாக உலவியதால் இரண்டோர் நாட்களிலேயே அந்தச் சிறு நூலை அச்சிட்டு ஒரே இரவில் பத்தாயிரம் படிகளையும் பற்பல ஊர்களுக்கும் இரயில் பார்சல் மூலம் அனுப்பித் தீரவேண்டி யிருந்தது. இந்தப் பெரும் பொறுப்பை மனமுவந்து ஏற்றுக்கொண்டு, இரண்டே நாட்களில் அந்நூலை அச்சிட்டு, 'பைண்ட்' செய்து, இரண்டாவது நாள் இரவே, அத்தனை ஆயிரம் படிகளையும் வெளியூர்கட்கு அனுப்பிவைத்தார் மணிமொழியார்.

3-6-1938 அன்று மாலை சென்னை கோடம்பாக்கத்தில் தமிழ்க் கடல் மறைமலையடிகளார் தலைமையில் இந்தி எதிர்ப்பு மாநாடு ஒன்று மிகச் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்தில், தியாகராயநகரில் முதலமைச்சர் ஆச்சாரியாரின் இல்லத்தின்முன், "இந்தி ஒழிய வேண்டும் —இல்லையேல் நான் ஒழியவேண்டும்" என்று இரண்டு நாட்களாய் உண்ணாநோன்பிருந்து வந்த தமிழ் வீரர் பல்லடம் பொன்னுசாமி கைது செய்யப்பட்டார் என்னும் செய்தி, மாநாட்டில் இருந்த மக்களை அடைந்தது. உடனே மாநாடு ஊர்வலமாகி, அமர்ந்திருந்தோர் எழுந்து நடக்கலாயினர். அந்த மாபெரும் ஊர்வலத்தைக் கோடம்பாக்கத்திலிருந்து தியாகராயநகர் வரையில் தலைமை தாங்கி அழைத்துச் சென்று, ஆச்சாரியார் இல்லத்தின் முன் இரவு 9 மணிக்குப் பெரியதோர் பொதுக்கூட்டத்தைத் தொடங்கி நடத்தினர் மணிமொழியார். மூன்று மணி நேரம் நடைபெற்ற அம் மாபெருங் கூட்டத்தில், திருவாளர்கள் செ. தெ. நாயகம், சாமி சண்முகானந்தம் ஆகிய இருவரும் பேசிய பிறகு, மணிமொழியார் ஆற்றிய விரிவுரையை—அல்ல —வீரவுரையை—அல்ல அல்ல—கோழைகளையும் வீரர்கள் ஆக்கவல்ல அறப்போர் முழக்கத்தைத் தமிழகம் ஒருநாளும் மறத்தல் இயலாது. அன்றைய தினம் அவர்

ஆற்றிய சொற்பொழிவு. சொற்பொழிவுக் கலைக்குக் கிடைத்த ஓர் அற்புதமான இலக்கியம் என்றே கூற வேண்டும்.

### *திராவிடர் கழகப் பணியும் இரண்டாவது இந்தி எதிர்ப்புப் போராட்டமும் :—*

தன் மாணவப் பருவத்திலிருந்தே நீதிக் கட்சியின் வளர்ச்சிக்காக உழைத்துவந்த மணிமொழியார், 1944 ல் அந்தக் கட்சி திராவிடர் கழகமாக மறுமலர்ச்சி எய்திய போது அந்தக் கழகத்திலும் ஈடுபட்டு அதன் முதன்மைத் தலைவர்களில் ஒருவராக விளங்கினர். ஏற்கெனவே தென்னிந்திய நலவுரிமைச் சங்கக் கிளைகளைச் சென்னை நகரின் பல பகுதிகளிலும் நிறுவி அவற்றிற்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்துவந்த அந்தத் தொண்டின் செல்வர், திராவிடர் கழகம் என்கிற புதிய வண்ணமும் வனப்பும் ஏற்பட்டபிறகு பல மடங்கு உற்சாகத்தோடு கட்சிப் பணியாற்றலானர்.

1938 ல் தமிழ் நாட்டின் உயர்நிலைப் பள்ளிகள் பலவற்றில் அன்றைய முதலமைச்சர் இராசகோபாலாச்சாரியாரால் நுழைக்கப்பட்ட கட்டாய இந்தி, தமிழ்ப் பெருங்குடி மக்களின் மாபெரும் போராட்டத்தின் விளைவாகவும், ஆண்களும் பெண்களும் குழந்தை குட்டிகளுமாக 1271 தமிழ்மக்கள் சிறைச்சாலை சென்று ஆட்சியாளர்களின் ஆணவத்திற்குச் சரியான சாட்டையடி தந்ததன் வாயிலாகவும் 21-2-40 ல் வந்தவழியே திருப்பி அனுப்பப்பட்டு விட்டது. அவ்வாறு தோற்று ஓடிய கட்டாய இந்தியை மீண்டும் அழைத்து அரியணையில் ஏற்ற முயன்ருர் அன்பர் அவினசிலிங்கனர்—1948 ல்—அவர் கல்வியமைச்சராகத் திகழ்ந்த வேளையில்! சும்மாவா இருக்கும் தமிழகம்! துள்ளியெழுந்து போர்க்கோலம் பூண்டு வீரமுழக்கம் புரிந்தது. கட்டாய இந்தியை எதிர்த்து நாடெங்கும், மூலை முடுக்கெங்கும், "மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை எமை

மாட்ட நினைக்கும் சிறைச்சாலை — ஏங்கவிடோம் தமிழ்த் தாய்தனையே—உயிர் இவ்வுடலை விட்டு நீங்கும்வரை" என்னும் கீதம் மீண்டும் ஒலிக்கத் தொடங்கிவிட்டது. 1938 ல் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்துகொண்டது போலவே — ஏன் — அதைவிட மிகத் தீவிரமாகவே இந்த முறை போர்க்களத்தில் இறங்கிவிட்டார் செந்தமிழ் வீரர் மணிமொழியார்.

17-7-48 ல் சென்னை செயின்ட்மேரி மண்டபத்தில் பேரறிஞர் மறைமலை அடிகளாரின் தலைமையில் ஈடு இணையற்ற சிறப்புடன் நடைபெற்ற **இந்தி எதிர்ப்பாளர் மாநாட்டில்**தான் மீண்டும் அறப்போர் தொடங்குவது என்கிற முடிவு எடுக்கப்பட்டது. தமிழ் நாட்டின் வரலாற்றுச் சுவடியில் பீடும் பெருமையும் மிகுந்ததோர் பொன்னேடாக இருக்கத்தக்க அந்த மாநாட்டின் செயலாளராக இருந்து, அதனை, அத்தகைய எழிலோவியமாக உருவாக்கிக் காட்டியவர் மணிமொழியார் அவர்களே ஆகும். பெரியார் ஈ.வே.ரா, மறைமலையடிகள், தமிழ்த் தென்றல் திரு. வி. க. அறிஞர் அண்ணு, கவிஞர் பாரதி தாசன், ம, பொ. சிவஞானம், நாரண துரைக்கண்ணன், அப்துல் மஜீத் எம். எல். ஏ, ரெவரண்ட் அருள்தங்கையா முதலிய பல்வேறு கட்சிகளின் தலைவர்களேயும் பல்வேறு மதத்தினரையும் அந்த மாநாட்டிற் பங்கேற்கும்படிச் செய்த மணிமொழியாரின் செயல் திறமையையும் பேருக்கத்தையும் தமிழகம் என்றென்றும் போற்றிப் புகழ்வது உறுதி.

அறப்போர் தொடங்குவதற்காகவும் அதனைத் தலைமைதாங்கி நடத்துவதற்காகவும் ஒன்பதுபேர் கொண்ட செயற்குழு வொன்று அந்த மாநாட்டால் அமைக்கப்பட்டது. அந்தக் குழுவில் காஞ்சி மணிமொழியாரும் ஒருவராவார். பெரியார் ஈ.வே.ரா, அறிஞர் அண்ணு, ம. பொ. சிவஞானம், நாரண துரைக்கண்ணன், கி. ஆ.பெ.

விசுவநாதன், டாக்டர் ஏ. கிருஷ்ணசாமி, சி. டி. டி. அரசு, இராமாமிர்தத்தம்மாள் ஆகியோர் குழுவின் ஏனைய உறுப்பினர்கள் ஆவர்.

1948 ஆகஸ்டு 10-ம் நாள் முதல் சென்னை இந்து தியாலாஜிகல் உயர்நிலைப் பள்ளியின் முன் இந்தி எதிர்ப்பு மறியல் நடத்தப்பட்டபோது, ஏனைய பல நண்பர்களுடன் இணைந்துநின்று, மணிமொழியார் அவர்கள், அந்த மறியலை நாள்தோறும் முன்நின்று நடத்திவந்தார். பொதுக்கூட்டங்கள் கூட்டுதல், ஊர்வலங்கள் நடத்துதல், துண்டு அறிக்கைகள் வெளியிடுதல், சொற்பொழிவுகள் ஆற்றுதல் முதலிய ஏனைய பல முறைகளாலும் இந்தி எதிர்ப்பு இயக்கத்தை மணிமொழியார் வளர்ந்துப் பரவும்படிச் செய்து வந்தார்.

**மணிமொழியாரின் பேருழைப்பாலும் பெருந்திறத்தாலும் இந்தி எதிர்ப்புப் போராட்டம் காட்டுத் தீயெனப் பரவுவதைக் கண்ட அன்றைய ஆட்சியாளர்கள் அவரை இரண்டு முறை சிறைச்சாலைக்குள் தள்ளிப் பூட்டி வைத்தார்கள்.** 22-8-1948 ல் சென்னை பெரியார் மாளிகையில் திராவிடர் கழக நிர்வாகக் குழுவின் கூட்டம் நடைபெற்றபோது அங்கு வந்திருந்த கழகத் தலைவர்கள் அனைவரும்—பெரியார் ஈ. வே. ரா, அறிஞர் அண்ணா, அஞ்சா நெஞ்சன் அழகர்சாமி, ஈ. வே. கி. சம்பத், என். வி. நடராசன், டாக்டர் தருமாம்பாள், 'விடுதலை' குருசாமி உட்பட—கைது செய்யப்பட்டபோது மணிமொழியார் அவர்களும் சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். எல்லாத் தலைவர்களைப் போலவே மணிமொழியாரும் ஒரு வார காலம் சிறையில் வைக்கப்பட்டிருந்தார். மணிமொழியார் பெற்ற முதல் சிறைத் தண்டனை இதுவே ஆகும்.

**அடுத்த மாதத்திலேயே இரண்டாவது முறையாகச் சிறைக் கோட்டத்திற்கு வருமாறு ஆட்சியாளர்**

**களிடமிருந்து அழைப்புப் பிறந்துவிட்டது மணிமொழி யாருக்கு.** 7-9-48 அன்று சென்னை டி. டி. வி. உயர் நிலைப் பள்ளியின் முன்பு மறியல் செய்வதற்காக இந்தி எதிர்ப்புத் தொண்டர்களைத் தலைமைதாங்கி அழைத்துச் சென்றபோது கைது செய்யப்பட்டு ஒரு வாரச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டார் அந்தத் தன்னலம் அறியாத தலைவர் பெருந்தகை. எதையும் தாங்கும் இதயம் படைத்த மணிமொழியாரா சிறைவாழ்வைக் கண்டதும் சித்தம் கலங்கிவிடுவார்? புன்முறுவல் பூத்த முகத்துடன் சிறைக் கோட்டம் சென்றார் இரண்டு முறையும்.

### *"போர்வாள்" அளித்த பெருந்தகையாளர்:—*

பத்திரிகைகளை நடத்துவதில் இளமைப் பருவத்திலிருந்தே நிறைந்த அனுபவமும் மிகுந்த தேர்ச்சியும் பெற்றவர் மணிமொழியார் 1924-27ஆம் ஆண்டுகளில் வாலாஜாபாத் இந்துமத பாடசாலையில் பணியாற்றிக் கொண்டிருந்தபோதே, காஞ்சீபுரம் யுனைடெட் அச்சகத்தாரால் நடத்தப்பட்டுவந்த '**பாரதம்**' என்னும் திங்கள் இதழின் ஆசிரியராக இருந்து அதனைத் திறம்பட நடத்தியிருக்கிறார் மணிமொழியார்.

1929 முதல் "**செங்குந்தமித்திரன்**" திங்கள் இதழின் துணையாசிரியராகவும், 1934 முதல் அதன் ஆசிரியராகவும் இருந்து, அந்த இதழைப் பதினைந்து ஆண்டுகள் ஏற்றம்மிகு முறையில் நடத்தியவர் அவர் என்பதை நாம் ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளோம்.

**1937ல் அறிஞர் அண்ணாதுரை அவர்களை ஆசிரியராகக் கொண்டு "நவயுகம்" என்னும் வார இதழை நடத்திய பெருமையும் சிறப்பும் மணிமொழி யாருக்கு உண்டு.** அந்த ஏடு பதின்மூன்று வாரங்கள் மட்டுமே வெளிவந்தது என்றபோதிலும், அறிஞர் அண்ணா அவர்களை ஓர் ஒப்பற்ற பேச்சாளர் என்று

மட்டுமே அதுவரை அறிந்து மகிழ்ந்திருந்த தமிழகம், அவர் ஆற்றல்மிக்க ஓர் எழுத்துச் சிற்பியும் ஆவார் என்பதை உணர்ந்து களிப்பதற்குரிய வாய்ப்பை முதன் முதல் அளித்தது அந்த ஏடே ஆகும்.

இவ்வாறு பத்திரிகை உலகோடு நெடுங்காலத் தொடர்புகொண்டிருந்த மணிமொழியார் அவர்கள், 1947 ஆகஸ்டு 16 ஆம் நாளன்று **"போர்வாள்"** என்னும் அரியதோர் வார வெளியீட்டைத் தொடங்கி ஈடு இணையற்ற முறையில் அதை நடத்தியபோது, திராவிட இளைஞர்களின் உள்ளத்திலெல்லாம் புத்தம் புதியதோர் ஆர்வமும் உணர்ச்சியும் பொங்கியெழலாயின. "உண்மையை ஒளிக்காது எடுத்துச் சொல்வதே நமது இலட்சியம். அது யாருக்கு எவ்வளவு குமட்டலாய் இருந்தாலும் சரி, அதைப்பற்றி நமக்குக் கவலையில்லை. உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுதல், இரட்டுற மொழிதல், ஒன்றுக்கொன்று நேர் முரணான எட்டுக் கருத்தை உள்ளமைத்துச் சொற்றொடர்கள் தீட்டுதல் முதலிய வழிகள் நமக்குத் தெரியா. நெஞ்சில் பட்டதைப் பட்டாங்கு உரைக்கும் நேரிய வழி ஒன்றுதான் நமக்குத் தெரியும். அது ஒன்றே போதும். புத்துலகப் பாதையில் தமிழகத்தைச் செலுத்தும் சீரிய பணியை மேற்போட்டுக்கொண்டுள்ள நமக்கு வேறு வழிகள் ஏனோ?" என்கிற இவ்வாக்கியங்கள் அந்தப் பத்திரிகையின் முதல் இதழ் தலையங்கத்தில் காணப்பட்டவையாகும். அந்த இதழ், அது தொடங்கப்பட்ட 16-8-1947 முதல் அது நிறுத்தப்பட்ட 14-4-1958 வரை, இந்த இலட்சிய கீதத்தையே நடைமுறை நாதமாகக் கொண்டிருந்தது என்பதை நாடு நன்கறியும்.

1947 முதல் 1949 வரை திராவிடர் கழகத்தின் வளர்ச்சிக்காகவும், 1949ல் திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கப்பட்டதிலிருந்து அந்தக் கழகத்தின் செழிப்புக்காகவும், போர்வாள், சுழன்று சுழன்று பணியாற்றியிருக்

கிறது. அன்பர் அவினாசிலிங்கனார் கல்வியமைச்சராக இருந்தபோது (1948 ல்) தொடங்கப்பட்ட இரண்டாவது இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை வளர்ப்பதற்காக அந்த இதழில் தீட்டப்பட்ட தலையங்கக் கட்டுரைகள், உணர்ச்சி வேகம் நிறைந்தனவாயும், சிந்திக்கத் தூண்டும் சிறந்த எழுத்தோவியங்களாயும் திகழ்ந்தன. மாற்றுக் கட்சியினரின் பொருத்தமற்ற வாதங்களைப் பொடிப் பொடியாக்குவதில் "போர்வாள்" தனக்குவமையில்லாத திறமை பெற்றிருந்தது. எதிர்க்கட்சிகளின் ஏராளமான ஏடுகள் திராவிட இயக்கத்தைத் தூற்றித் திரிவதையே தங்களுடைய தனிப்பெருங் கடமையாகக் கருதிய அந்தக் காலத்தில், அந்தத் தாக்குதல்களையெல்லாம் தொகையாக எதிர் நிறுத்தித் தூள்தூளாக்கிவந்தது "போர்வாள்." திராவிடத் தனி நாடு அமைந்தாக வேண்டியதன் அவசியத்தையும், சுயமரியாதை வாழ்வே சுக வாழ்வு என்பதன் மெய்ம்மையையும் பல்வேறு வகைகளாலும், முறைகளாலும், எழிலும் சுவையும் ஒருங்கே ததும்பும் இனிய செந்தமிழ் நடையாலும் எடுத்தெடுத்து விளக்கி வந்தது அந்த இதழ்.

அரசியல் கருத்து விளக்கக் கேலிச்சித்திரங்களைக் கிழமைதோறும் தவறாமல் வெளியிட்டு, அவற்றின் வாயிலாக அந்த ஏடு சிறந்ததோர் விழிப்புணர்ச்சியை உண்டாக்கியதை எவரும் மறத்தல் இயலாது.

இன்றையதினம் பெயரும் புகழும் பெற்றுத் திகழும் எத்தனையோ எழுத்தாளர்களின் இலக்கியப் படைப்புகளை முதன் முதலில் வெளியிட்டு அவர்களை நாட்டுக்கு அறிமுகப்படுத்திய பெருமை, போர்வாளின் தனி உரிமை என்றே சொல்லவேண்டும். திண்டுக்கல் தங்கவேலர், திருவனந்தபுரம் இளஞ்சேரன், தில்லைவில்லாளன், தில்லை மறைமுதல்வன், டி. கே. சீனிவாசன், கே. ஜி. இராதாமணாளன், நா. ஜகந்நாதன், ஆ. ல. நாராயணன், க. அறி

வழகன், கௌதமன், பி. சி. கணேசன், எஸ். எஸ். தென்னரசு, முதலிய இக்காலச் சிறந்த எழுத்தாளர்கள் பலருடைய கட்டுரைகளை அப்போதே வெளியிட்டு, அவர்களுடைய பேராற்றலை மக்கள் மன்றத்திற்கு எடுத்துக் காட்டியது அந்த இதழ்.

எழில் குலுங்கும் மலர்களை வெளியிட ஒரு குறிப்பிட்ட சமூகத்தாரால் நடத்தப்படும் பத்திரிகைகளால் மட்டுமே முடியும் என்று நெடுங்காலமாக இருந்த நிலையை மாற்றி, நம்மாலும் அது இயலும் என்பதை, வெறும் பேச்சால் அல்ல—பல்வேறு மலர்களை அழகு ததும்பும் வகையில் வெளியிட்டதன் வாயிலாக மெய்ப்பித்திருக்கிறது "போர்வாள்." போர்வாள் அலுவலகத்திலிருந்து 1947 செப்டம்பரில் வெளியான பெரியார் பிறந்த நாள் மலரும், 1948—1951—1958 ஆகிய ஆண்டுகளில் வெளியான பொங்கல் மலர்களும், 1950 செப்டம்பரில் வெளியான தி. மு. க. முதலாண்டு நிறைவுநாள் மலரும், 1951 டிசம்பரில் வெளியான தி. மு. க. முதலாவது மாநில மாநாட்டு மலரும், 1952 டிசம்பரில் வெளியான "பராசக்தி" திரைப்பட வெற்றிவிழா மலரும், 1957 செப்டம்பரில் வெளியான கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் நினைவு மலரும், ஆயிரமாயிரம் இளைஞர்களின் இதயங்களை அள்ளிக்கொண்டுவிட்ட அருஞ்சிறப்புடையவை யாகும்.

வெறியன் ஒருவனால் காந்தியடிகள் சுட்டுக் கொல்லப்பட்டபோது '**மறைந்தது ஞாயிறு**' என்னும் தலைப்பில் வெளியான 'போர்வாள்' தலையங்கம், அதனைப் படித்தவர்களின் உள்ளங்களை உருகவைக்கும் தன்மை படைத்ததாக இருந்தது. அதுபோலவே ஜனாப் ஜின்னா, சுயமரியாதை வீரர் அழகிரிசாமி, அறிஞர் திரு. வி. க. ஆகியோரின் மறைவு குறித்து எழுதப்பட்ட தலையங்கங்களும் உணர்ச்சிச் சித்திரங்களாக விளங்கின.

காஞ்சி மணிமொழியாரும், அவருடைய முதல் மகனார் **திருவாளர் மா. இளஞ்செழியன் எம். ஏ.** அவர்களும் அந்த இதழின் இணை ஆசிரியர்களாக இருந்து அந்த இதழை நடத்திய செம்மையையும் சிறப்பையும் கண்டு தமிழகம் மட்டற்ற மகிழ்ச்சி எய்தியது.

***தி. மு. க. தளபதி மணிமொழியார் :—***

திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தோற்றுவித்து அதன் தலைவர்களில் ஒருவராகிய மணிமொழியார், அந்தக் கழகம் தொடங்கப்பட்ட நாளிலிருந்து இன்றுவரையில் அதன் செல்வாக்கும் புகழும் தமிழ்நாடெங்கும் பரவுவதற்காக ஓய்வறியாமல் உழைத்துவந்திருக்கின்றார், அது தொடங்கப்பட்ட ஆண்டிலிருந்து (1949) மூன்று ஆண்டுகள் அதன் தலைமைக் கழகத்தின் நிதிக் குழுச் செயலாளராக இருந்து, அப்போது அதன் பொதுச் செயலாளராக விளங்கிய அறிஞர் அண்ணாவுக்குப் பேருதவியாகத் திகழ்ந்தார். 1951 டிசம்பர் 13, 14, 15, 16 ஆகிய நாட்களில் சென்னையில் பெருஞ்சிறப்புடன் நடைபெற்ற தி. மு. க. முதல் மாநில மாநாட்டின் செயலாளராக இருந்து, அம் மாநாட்டின் மாபெரும் வெற்றிக்காக இரண்டு மாத காலம் இரவும் பகலும் அரும்பாடுபட்டார். 2,37,700 சதுர அடி பரப்புள்ள பிரம்மாண்டமான பந்தலில் நூறுயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் வெள்ளம் பொங்கிப் பெருகிக் காட்சியளித்து, தமிழகத்திலேயே இத்தகைய மாபெரும் மாநாடு இதுவரை நடைபெற்றதில்லை என்று மாற்றாரும் வேற்றாரும்கூட வியந்து பாராட்டிய அந்த மாநாடு, மணிமொழியாரின் செயல் திறமைக்கு ஓர் தலைசிறந்த எடுத்துக்காட்டு ஆகும்.

அவர் தி. மு. க. முதல் சட்ட திட்டக் குழுவில் உறுப்பினராக இருந்து, சட்ட திட்டங்களைச் செம்மையான முறையில் வகுக்கத் துணை புரிந்தார் என்பதும், தொடக்கம் முதல் இன்று வரை தி. மு. க. தலைமைப் பொதுக் குழுவின் உறுப்பினராகவும், சென்னை மாவட்டத் தி. மு.

க. வின் முத்தியாலுப்பேட்டைக் கிளைப் பிரதிநிதியாகவும் இருந்து வருகிறார் என்பதும், இயக்கத் தோழர்கள் அனைவரும் அறிந்த செய்திகளே.

1952-ல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் தி. மு. க. ஆதரவு பெற்ற சுயேச்சை அபேட்சகர்களுக்காகவும், 1957-ல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் தி. மு. க. அபேட்சகர்களுக்காகவும் ஆதரவு திரட்டும் பணியில் பேரூக்கம் காட்டி உழைத்தார். 1959-ல் நடைபெற்ற சென்னை மாநகராட்சி மன்றத் தேர்தலின்போது, தி. மு. க தேர்தல் குழுவின் உறுப்பினராக அமர்ந்து, அப்போது அவருக்குவயது ஐம்பத்தி ஒன்பது என்றாலும், இருபத்தி ஒன்பது வயது இளைஞரைப் போல் சுறுசுறுப்பாகப் பணியாற்றி, தேர்தலில் கழகம் மாபெரும் வெற்றி பெற்று ஆளும் கட்சியாக அமர்வதற்கு ஏற்ற சூழ்நிலையை உருவாக்கினார்.

1952-ல் மத்திய அரசாங்க அலுவலகப் பெயர்ப் பலகைகளில் உள்ள இந்தி எழுத்து அழிப்பு இயக்கத்தைத் தி. மு. க. ஏற்று நடத்தியபோது, மணிமொழியார், பல்லாயிரம் மக்கள் புடைசூழச் சென்னை பிராட்வேயில் அப்போதிருந்த "போர்வாள்" அலுவலகத்திலிருந்து ஊர்வலமாகப் புறப்பட்டு, ஜி. பி. ஓ. அலுவலகம் சென்று, அங்கிருந்த இந்திப் பெயர்களை அழித்தார்.

1950—51-ஆம் ஆண்டுகளில், தமிழ்நாட்டுக்கு வருகிற டில்லி அமைச்சர்களுக்கெல்லாம் கறுப்புக் கொடி காட்டுவது என்று திராவிட முன்னேற்றக் கழகம் எடுத்த முடிவுக்கு ஏற்ப, மத்திய அமைச்சர்கள் சென்னைக்கு வந்தபோதெல்லாம் மணிமொழியார் கறுப்புக் கொடி நிகழ்ச்சிகளில் தவறாது பங்கேற்றார்.

*சிறைக்கு அஞ்சாச் சிங்க ஏறு:—*

இரண்டாவது இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் போது (1948) மணிமொழியார் அவர்கள், தமிழ்மொழி

யைப் பாதுகாத்த "பெருங்குற்றத்"திற்காக இரண்டு முறை சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறார் என்பதை முன்னரே குறிப்பிட்டிருந்தோம் அல்லவா? **மூன்றாவது முறையாகச் சிறை செல்லும் வாய்ப்பு,** 7-1-51 அன்று ஆட்சியாளர்களால் அவருக்கு அளிக்கப்பட்டது. அன்றைய தினம் டில்லி அமைச்சர் ஹரி கிருஷ்ண மேதாப் சென்னை சட்டக் கல்லூரிக்குப் பக்கத்தில் உள்ள யுனைடெட் இந்தியா இன்ஷ்யூரன்ஸ் கட்டிடத்திற்கு வந்தபோது, தி. மு. க. திட்டத்தின்படி அவருக்குக் கறுப்புக் கொடி காட்டும் நிகழ்ச்சியை ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்த மணிமொழியார் அவர்கள் கைது செய்யப்பட்டு அன்று முழுதும் காவலில் வைக்கப்பட்டிருந்தார்.

1958 ஜனவரி முதல் வாரத்தில் பண்டித நேரு சென்னை வரும்போது அவருக்குக் கறுப்புக் கொடி காட்டுவது என்று தி. மு. க. ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சியைத் தடுக்க ஆட்சியாளர்கள் மேற்கொண்ட பல முயற்சிகளில் ஒன்றாக, மணிமொழியார் அவர்களை, 2-1-58 அன்று "போர்வாள்" அலுவலகத்தில் வந்து கைது செய்தனர். இம்முறை இரண்டு வார காலம் சிறைவாசம் செய்தார் மணிமொழியார் அவர்கள். **இது அவரது நான்காவது சிறைவாசமாகும்.**

***பலதுறைத் தொண்டாற்றிய பெருமகனார் :—***

செங்குந்தர் இயக்கம்—நீதிக் கட்சி—சுயமரியாதை இயக்கம்—திராவிடர் கழகம்—திராவிட முன்னேற்றக் கழகம்—இந்தி எதிர்ப்புப் போராட்டங்கள் ஆகியவற்றில் பெரிய அளவில் ஈடுபட்டு அரும்பணிகள் பல ஆற்றியுள்ள மணிமொழியார், வேறு பற்பல பொதுநலப் பணிகளிலும் தன்னுடைய நேரத்தையும் உழைப்பையும் செலவிட்டிருக்கின்றார்.

நாட்டின் முன்னேற்றம் கல்வியின் முன்னேற்றத்தையே பொறுத்திருக்கிறது என்பதையும், கல்வியின் முன்

னேற்றம் **ஆரம்பக் கல்வியின்** முன்னேற்றத்தையே பொறுத்திருக்கிறது என்பதையும் நன்கறிந்த மணிமொழியார், காஞ்சீபுரம் கருக்கினில் அமர்ந்தவள் கோயில் தெருவில் தம்முடைய சொந்தச் செலவில் 1921-ல் கலைமகள் துவக்கப்பள்ளி என்னும் **ஆரம்பப் பள்ளிக்கூடம்** ஒன்றைத் தொடங்கி ஒன்பது ஆண்டுகள் அதைத் திறம்பட நடத்தி வந்தார். 1930 முதல் அவர் செங்குந்தர் சங்கத்தின் முழுநேரப் பிரசாரகராகப் பணியேற்றுக்கொண்டதால் அந்த ஆண்டில் அந்தப் பள்ளியைப் பக்கத்துத் தெருவில் இருந்த நகராட்சிப் பள்ளியோடு இணைத்துவிட்டார்.

1935 ஏப்ரல் திங்களில் சென்னையில் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக நிர்வாகத் தலைவர் திருவாளர் வ. சுப்பையாப் பிள்ளை அவர்களுடைய பெருமுயற்சியால், தமிழ்ப் பேரறிஞர் கா. நமசிவாய முதலியார் அவர்களைத் தலைவராகவும், அறிஞர் திரு. வி. க., ரெவரண்ட் பாப்ளி, திருவாளர் ச. சச்சிதாநந்தம் பிள்ளை பி. ஏ. எல். டி. ஆகியோரைத் துணைத் தலைவர்களாகவும் கொண்டு தொடங்கப்பட்ட **திருவள்ளுவர் திருநாட் கழகம்** என்னும் அமைப்பில், தமிழ்ப் பெரும் புலவர்கள் மயிலை சிவமுத்து, மே. வீ. வேணுகோபாலனர், எஸ். எஸ். அருணகிரிநாதர், தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் ஆகியோருடன் இணைந்து நின்று, மணிமொழியார், ஆண்டுதோறும் திருவள்ளுவர் திருநாளைச் சிறப்பாகக் கொண்டாடி, திருக்குறட் கருவூலத்தின் அருமை பெருமைகளை மக்கள் மன்றத்திற்கு விளக்கும் பணியில் ஈடுபட்டிருக்கிறார்.

கல்வியில் பின்தங்கியுள்ள பல்வேறு சமூகங்களின் முன்னேற்றத்திற்காக, 1935-ல், **பிற்பட்ட வகுப்பினர் சங்கம்** என்னும் சிறந்த அமைப்பொன்றைச் சென்னை பவழக்காரத் தெருவில், அவரும், அவருடைய நண்பர் திருவாளர் வி. எம். கடிகாசலம் அவர்களுமாகச் சேர்ந்து தொடங்கினர். 10-7-35-ல் தொடங்கப்பட்ட அச்சங்கத்

திற்குத் திருவாளர் எச். பி. அரிகவுடர் பி. ஏ., எம். எல். சி. அவர்கள் தலைவராகவும், தற்போது நிலவரி அமைச்சராக இருக்கும் திருவாளர் எம். ஏ. மாணிக்கவேலர் பி. ஏ., பி. எல். அவர்கள் உள்ளிட்ட மூவர் துணைத் தலைவர்களாக வும், மணிமொழியார் அவர்களும் வி. எம். கடிகாசலம் அவர்களும் கூட்டுச் செயலாளர்களாகவும் தேர்ந்தெடுக் கப்பட்டு நற்றொண்டு புரிந்தனர்.

1943-ல், பவழக்காரத் தெருவில் அவர் குடியிருந்த 147-ஆம் எண் இல்லத்தில், திரு. வ. சுப்பையாப் பிள்ளை அவர்களின் துணையுடன் மணிமொழியாரால் தொடங்கி நடத்தப்பட்ட **தமிழறிஞர் கழகம்** என்னும் நல்லமைப்பு, 1. தமிழரின் பெயரும், தமிழரின் நாட்டுப் பிரிவு—ஊர்—தெரு—வீடு முதலிய இடப் பெயர்களும் தூய தமிழ்ச் சொற்களாயிருத்தல் வேண்டும் 2. தமிழரின் உரையாடல் ஆங்கில வடமொழிக் கலவையாக இருக்கும் நிலைமாறித் தூய தமிழில் அமைதல் வேண்டும் 3. தமிழர் வழிபாடு களும் சடங்குகளும் தமிழிலேயே நடைபெறல் வேண்டும் 4. தமிழைப் பிழைபட வழங்குபவரைத் திருத்தல் வேண் டும் என்னும் நான்கு நோக்கங்களை நிறைவேற்ற ஒல்லும் வகையெல்லாம் ஓயாது பாடுபட்டது.

கைத்தறி நெசவாளர்களின் வாழ்க்கையை வதைத்து வரும் வேதனையும் விம்மலும் குறைந்து, வளமும் வசதியும் மிகுந்ததாக அது மாறவேண்டும் என்பதற்காகச் சென்ற முப்பது ஆண்டுகளாக அவர் செய்துவரும் தொண்டுகளை இந்த இடத்தில் குறிப்பிடாமல் இருத்தல் முறையன்று. **கைத்தறி நெசவாளர்**களுக்கு நெருக்கடி ஏற்பட்ட நேரத் தில் எல்லாம், ஊர்வலம்—பொதுக்கூட்டம்—மாநாடு—பத்திரிகைக் கட்டுரை—அமைச்சர்களைத் தூது குழுவினர் மூலம் காணல் முதலிய பல்வேறு கிளர்ச்சி முறைகளைக் கையாண்டு நற்பணி புரிந்துள்ளார் மணிமொழியார் என் பதை நெசவாளர் உலகம் நன்கறியும். 1930-ம் ஆண்டு

முதல் மணிமொழியார் கைத்தறி ஆடைகளை மட்டுமே அணிந்து வருகிறார் என்பதும், மில் துணிகளை ஏறெடுத்தும் பார்ப்பதில்லை என்பதும் அவரோடு நெருங்கிப் பழகிய அனைவரும் அறிந்த உண்மைகளாகும். சொல் வேறு செயல் வேறு என்கிற பொல்லாத பழக்கம் மணிமொழியாரிடம் கிடையாது என்பதற்கு இந்தச் செய்தி ஒரு சிறந்த எடுத்துக்காட்டு ஆகும்.

பல்வேறு துறைகளிலும் சமுதாயத் தொண்டாற்றி வந்துள்ள மணிமொழியார், நடிப்புத் துறையை மட்டும் மிச்சமாகவா விட்டுவைப்பார்? **நடிப்பு உலகிலும்** அவருக்கு ஒரு நல்ல இடமுண்டு. அறிஞர் அண்ணா அவர்களால் இயற்றப்பட்டு 1951-ல் சென்னை மாவட்டத் தி. மு. க முதல் மாநாட்டில் நடிக்கப்பட்ட **'வழக்கு வாபஸ்'** என்னும் ஓரங்க நாடகத்தில் மாணிக்கம் செட்டியார் என்னும் கதை உறுப்பினராகவும், 1952-ல் சென்னையில் அண்ணா அவர்கள் தலைமையில் நடைபெற்ற **'வாழ்க்கைப் புயல்'** என்னும் முழு நீள நாடகத்தில் டாக்டர் இராமமூர்த்தி என்னும் கதை உறுப்பினராகவும் மணிமொழியார் நடித்துள்ளார்.

தமிழ் மக்கள் தங்கள் பெயர்களைத் தூய தமிழில் அமைத்துக் கொள்வதே முறை என்னும் கருத்துடைய மணிமொழியார், மாணிக்க வாசகம் என்று இருந்த தம்முடைய பெயரை 1938-ல் **மணிமொழியார்** என்னும் நற்றமிழ் வடிவினதாக மாற்றி அமைத்துக் கொண்டதோடு, 1943-ல் பிறந்த அவருடைய திருமகளுக்கும் **தமிழ்ச் செல்வி** என்னும் தூய தமிழ்ப் பெயரையே சூட்டியுள்ளார்.

1949 ஜனவரி 15,16 தேதிகளில் சென்னை பிராட்வேயில் இருந்த மாபெருந் திடலில், மணிமொழியார் அவர்கள் செயலாளராக இருந்து நடத்திய **திருவள்ளுவர் மாநாடு,** தமிழ்நாட்டின் இலக்கிய வரலாற்றிலும் சரி, சமூக சீர்

திருத்த வரலாற்றிலும் சரி, புத்தம் புதியதோர் பொன்னேடாக அமையத்தக்கதாகும். சென்ற பத்தாண்டுகளாகத் திருக்குறட் பதிப்புக்களும், விளக்கவுரைகளும், ஆராய்ச்சி நூல்களும் ஏராளமாக வெளிவருகின்றன அல்லவா— அப்படி வெளியாவதற்குரிய பேரெழுச்சியைத் தமிழர் சமுதாயத்தில் உருவாக்கித் தந்தது இத் திருவள்ளுவர் மாநாடே ஆகும். பேராசிரியர் சக்கரவர்த்தி நயினர், பேராசிரியர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார், தமிழறிஞர் திரு. வி. க., பெரியார் ஈ. வே. ரா., நாவலர் சோமசுந்தர பாரதியார், தென்னவர் தலைவர் அண்ணா, டாக்டர் இராசமாணிக்கம், பேராசிரியர் இலக்குவனார் முதலியோர் கலந்துகொண்ட இம் மாநாட்டுக்குப் பிறகே திருக்குறளின் முழுச் சிறப்பையும் தமிழகம் அறிந்து போற்றத் தொடங்கியது எனலாம்.

1929 ஜனவரி 19, 20 தேதிகளில் ஈரோட்டில் நடைபெற்ற தென்னிந்திய செங்குந்தர் முதலாவது மாநாடு, 1948-ல் சென்னை செயின்ட் மேரி மண்டபத்தில் நடைபெற்ற இந்தி எதிர்ப்பாளர் மாநாடு, 1949-ல் சென்னை பிராட்வேயில் நடைபெற்ற திருவள்ளுவர் மாநாடு, 1951ல் சென்னை எஸ். ஐ. ஏ. ஏ. திடலில் நடைபெற்ற தி. மு. க. முதலாவது மாநில மாநாடு ஆகிய நான்கும் மட்டற்ற சிறப்புடன் நடைபெற்றன என்பதையும், அந்த நான்கு மாநாடுகளுக்கும் செயலாளராக இருந்து அவற்றை எழில் பெற நடத்தித் தந்தவர் மணிமொழியாரே என்பதையும் அறிந்த பலர், மாநாடுகட்குத் தேவை மணிமொழியாரின் சேவை என்று சொல்லிச் சொல்லி மகிழ்வது இயற்கையே அல்லவா?

***நாவீறு படைத்த நல்லறிவாளர் :—***

ஒலிபெருக்கியே தேவையில்லாத கணீர் என்ற குரல், அழுத்தந் திருத்தமான சொற்கள், தெள்ளத் தெளிவான கருத்துக்கள், கேட்பவர்தம் உள்ளங்களில் பசுமரத்தாணிபோற் சென்று பதியும் பேச்சுமுறை, நெஞ்சத்தில்

தோன்றியதைத் தோன்றியவாறே வெளியிடும் அஞ்சாமைப் பண்பாடு, இத்தனையும் படைத்த மணிமொழியார் பேசத் தொடங்கிவிட்டால், எத்துணை பெரிய கூட்டமானால்தான் என்ன, முழு அமைதி அங்கே குடிகொள்ளும். அவருடைய சொற்பொழிவுகள் எவ்வளவு ஆற்றல் மிக்கனவாக அமைந்திருக்கும் என்பதை விளக்க ஒரே ஒரு எடுத்துக்காட்டு: அவர் 15 ஆண்டுகட்கு முன் செங்கற்பட்டு ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் நடைபெற்ற திருவள்ளுவர் விழாவில் சொற்பொழிவாற்றச் சென்றபோது அங்கு தமிழ் மரபுக்கு மாறான ஆரியக் கோலத்துடன் வள்ளுவர் படம் இருக்கக் கண்டு, 'வள்ளுவர் கண்ணீர்' என்ற தலைப்பில் பேசத்தொடங்கி, அந்தப் படத்தில் உள்ள குறைபாடுகளையெல்லாம் சுட்டிக்காட்டி, அத்தகைய பொருத்தமற்ற கோலத்தில் தம்மை உருவாக்கிக் காட்டியிருப்பதை வள்ளுவர் காணமுடியுமானால் அவர் கண்ணீர் வடித்துக் கலங்குவது உறுதி என்று விளக்கிக்கூறினார். அந்தச் சொற்பொழிவைக் கேட்டு வெட்கமும் துக்கமும் அடைந்த பள்ளி நிர்வாகிகள், ஒரு திங்களுக்குள் தமிழ் மரபுக்கு ஏற்ற வேறோர் படம் வரைந்து அதன் திறப்புவிழா ஆற்றும் பணியையும் அவருக்கே வழங்கினார்கள். வாளினும் வன்மை மிக்கது சிறந்த பேச்சாளர்தம் சொல் என்பதற்கு இந்த நிகழ்ச்சி நல்லதோர் உதாரணம் அல்லவா ?

இனி, தான் சொற்பொழிவாற்றுகின்ற அரசியல் கூட்டங்களில் பகைவர்களால் குழப்பம் விளைவிக்கப் படுமானால் அதனை மிகத் திறமையாகச் சமாளிக்கின்ற ஆற்றலும் அவரிடம் உண்டு என்பதை விளக்கும் ஒரு நிகழ்ச்சியைக் காண்போம் :

1926-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் ஒருநாள். காஞ்சிபுரம் ஆடிசன் பேட்டை சவுளிக்கடைச் சத்திரத்தின் முன்பு பார்ப்பனரல்லாத வாலிபர் சங்கத்தின் சார்பில்

நீதிக்கட்சியின் மாபெருங் கூட்டம் ஒன்று நடைபெறுகிறது. கூட்டத் தலைவர் மணிமொழியார் தமது உரையை நிகழ்த்திக்கொண்டிருக்கிறார். காங்கிரஸ்காரர்கள் கூட்டத்தின் பல பகுதிகளிலிருந்து குழப்பம் விளைக்க முயல்கிறார்கள். தலைவர் அதனைச் சிறிதும் பொருட்படுத்தாது தமது கம்பீரமான உரத்த குரலில் பேசிக்கொண்டே இருக்கிறார். குழப்பக்காரர்கள் திடீரென எழுந்து நின்று கூச்சலிடத் தொடங்கினர். தலைவர் கூட்டத்தைச் சுற்றிக் கண்ணோட்டம் விட்டார். சப் இன்ஸ்பெக்டர் கூட்டத்தின் ஒரு மூலையில் கைகட்டி நின்றுகொண்டிருந்தார். தலைவர் ஆத்திரத்துடன், "சப் இன்ஸ்பெக்டர் அவர்களே! நீங்கள் இங்கே யாருக்குப் பாதுகாப்பு அளிக்க வந்திருக்கிறீர்கள்? கூட்டம் நடத்துகின்றவர்களுக்கா? அல்லது குழப்பக்காரர்களுக்கா? என் இயக்கத் தோழர்கள் என் வேண்டுகோளுக்காக நெடுநேரமாகப் பொறுமையோடு இருக்கிறார்கள். குழப்பம் விளைவிக்க முயல்பவர்களை அடக்குவதற்கு உங்களுக்கு முடியவில்லையா? அல்லது விருப்பமில்லையா? அடக்க முடியாவிட்டால் இங்கிருந்து நீங்கள் தயவு செய்து வெளியேறி விடுங்கள்! அவர்களை நாங்கள் பார்த்துக்கொள்கிறோம்" என்று வீரமுழக்கம் செய்தார். போலீசார் அதன் பின்பும் தீவிர நடவடிக்கை எடுக்காமல் குழப்பக்காரர்களுக்குச் சமாதானம் கூறிக்கொண்டிருந்தனர். உடனே தலைவர் கூட்டத்தினரைப் பார்த்து, "தோழர்களே! போலீசார் தங்கள் இயற்கையான கையாலாகாத் தன்மையைச் சொல்லாமற் சொல்லிக் காட்டிவிட்டார்கள். உங்களை இனி நான் சாந்தப்படுத்தவோ கட்டுப்படுத்தவோ முடியாதென்பதை உணர்கிறேன். காங்கிரஸ்காரர்கள் அமைதியாக இருப்பது நல்லதென அவர்கள் நன்மையைக் கருதியே தெரிவித்துக்கொள்ளுகிறேன். இல்லையேல் ஆத்திரப்பட்டு என் இயக்கத்தோழர்கள் ஏதாவது கண்ணியக் குறைவாக நடந்துகொள்ள முற்பட்டால் கூட்டத்தை நடத்தும் நாங்கள் அதற்குப் பொறுப்பாளிகளாக மாட்

டோம் என்பதைக் காங்கிரஸ்காரர்களுக்கு அன்புடன் தெரி வித்துக்கொள்ளுகிறேன்'' என்று கூறிக்கொண்டு வரும் போதே காங்கிரஸ்காரர்களில் சிலர் எழுந்து 'அதையும் பார்த்துவிடுவோம்' என்று கூச்சலிட்டனர். கூச்சல் கிளம்பிய பக்கங்களிலெல்லாம் இயக்கத் தோழர்கள் பாய்ந் தனர். குழப்பக்காரர்கட்கு என்னென்ன பரிசுகள் கிடைத் தனவோ தெரியாது! சிலர் ஓடினர்; மற்றவர்கள் அனைவரும் அமைதியாக அமர்ந்தனர். கூட்டம் தொடர்ந்து இரவு 11 மணி வரை நடைபெற்று முடிந்தது. காஞ்சிபுரம் தோழர் ஏ. கே. தங்கவேலனார் எம். எல். சி. அவர்கள் கூட்டத்தில் இறுதி வரை இருந்து அமைதியை நிலைநாட்டி வந்ததை இங்குக் குறிப்பிடாமல் இருப்பதற்கில்லை.

**கவிதை புனையும் ஆற்றல் :—**

வெண்பாப் புலி வேலுசாமிப் பிள்ளையிடம் தமிழ் நூல்களை முறைப்படிப் பயின்ற காரணத்தால் சின்னஞ் சிறு வயதிலிருந்தே கவிதை புனையும் ஆற்றல் மணிமொழி யாரிடம் சிறந்து விளங்கியது. 1917ல் ஒன்பதாவது வகுப் பில் அவர் பயின்று கொண்டிருந்தபோது அவருடைய தந் தையார் இயற்கை யெய்தினர் என்னும் செய்தி ஏற்கெ னவே குறிக்கப்பட்டுள்ளது அல்லவா? அச் சமயத்தில் மணிமொழியார் கீழ்க்கண்ட கையறு நிலைப் பாடல்களைத் தானே இயற்றி அச்சிட்டார் :—

பிங்கலமே பங்குனியே என்செய்தீ ரெந்தையினைக்
கங்கைச் சடையனடி காட்டினிரோ—தங்கமர
சட்டியோடு கேட்டையே சந்ததமு நல்லுரைகள்
தொட்டணைத்தார் கூறிடுவார் சொல் 1

அப்பாவோ ! எனைப்பயந்த வருட்செல்வா !
குணக்குன்றே அறிவி னூற்றே !
எப்போதுந் தமிழோதி குறளருட்பா
வாசகத்தேன் பாய்ச்சி யென்னை

இப்பாரி லொருமகனைய் வாழவைத்த
வெந்தாய்! நீ யெங்குச் சென்றாய்?
ஒப்பாரைக் காணுதே யுளஞ்சோர
வுடல்வாட உணர்வற் றேனே. 2

எங்குற்றா ரெந்தந்தை எங்கொளிந்தார்
தாத்தாவே எவரே கொண்டார்
பங்குற்றுக் கைப்பிடித்த பர்த்தாவை
வற்றாத பாசத் தோடு
பொங்குற்றா ரெங்கேநல்ல புலவருநண்
பருமெங்கே பொரேமென் றேங்கி
இங்குற்றார்க் கருள்புரிவீ ரெழில்வதனங்
காட்டிடுவீ ரெந்தாய் நீரே. 3

பதினேழு வயது இளைஞாக இருந்தபோதே இத்தகைய அரிய பாடல்களைப் பாடும் திறமை மணிமொழியாரிடம் காணப்பட்டது வியப்புக்குரிய செய்தியே அல்லவா?

அவருடைய அண்ணனர் பி. செ. முருகேசனர் 1919ல் இயற்கை எய்தியபோது 11 பாடல்களைக்கொண்ட கையறு நிலை ஒன்றையும் அவர் இயற்றி வெளியிட்டார். அந்தப் பாடல்களுள் இரண்டு வருமாறு :—

சித்தார்த்தி தையமரஞ் சேர்முன்ன ளிற்பரையற்
சித்தார்த்தி மேவுகின்ற சீர்மகத்தில்—சித்தார்ந்த
முந்தை முருகேசன் முற்குரிசில் ஏகம்பன்
சந்தமலர்த் தாளடைந்தான் சார்ந்து. 1

முருகேசா என்றழைப்ப முன்பார்ப் புலவர்
அருகேசார்ந் தாவனசெய் தாய்கா— மருகேசா
விண்புலவர் தம்பால் விருந்துண்ணச் சென்றனையோ
நண்புலவும் அண்ண நயந்து. 2

காஞ்சிபுரம் பச்சையப்பன் பள்ளியில் அவர் தமிழாசிரியராகப் பணியாற்றியபோது அவர் இயற்றிய வெண்பா

ஒன்று செயற்கரிய செயலைச் சாதித்திருக்கிறது. அந்தக் காலத்தில் காஞ்சீபுரம் நகரசபைத் தலைவராக இருந்த திரு. சி. சாம்பசிவச் செட்டியாரவர்கள் இவருக்கு நெருங்கிய நண்பராக இருந்தார். எனினும் இவர் வாழ்ந்து வந்த விளக்கொளிப் பெருமாள் சந்நிதி வீதியில் விளக்கின்றி இருள் கவ்வியிருந்தது. இதை நகரசபைத் தலைவருக்கு எப்படி உணர்த்துவதெனப் பல நாள் சிந்தித்துவந்த மணிமொழியார், ஒருநாள்,

விளக்கா ரொளிப்பெருமாள்! வீண்பெயரே கொண்டார்!
விளக்கற் றிருப்பதுகாண் வீதி—அளப்பரிய
நன்றே புரியும் நகர்த்தலைவ ரீதறிந்தா
லின்றே விளக்கெரியு மிங்கு.

என்ற வெண்பாப் பாடலொன்றை எழுதி ஒருவர் மூலம் நகரசபைத் தலைவரிடம் சேர்ப்பித்தார். பாடலை எழுதியனுப்பிய அன்றிரவு 10 மணி வரை நண்பர்களோடு தெருவில் மணிமொழியார் அளவளாவிக் கொண்டிருந்தார். என்றும் போலவே அன்றும் தெருவில் இருள் சூழ்ந்திருந்தது. மறுநாள் விடியற்காலை 4 மணிக்கு வழக்கம்போல் மணிமொழியார் குளிப்பதற்குப் புறப்பட்டுத் தெருவில் வந்தபோது மணிமொழியாரின் வீட்டெதிரே நகரசபையின் விளக்குக் கம்பம் ஒன்று நாட்டப்பட்டு, அதன் உச்சியில் விளக்கொன்று சுடர்விட் டெரிந்துகொண்டிருக்கக் கண்டு பெருவியப் பெய்தினர். வெண்பாவின் ஈற்றில் '**நகர்த் தலைவர் ஈதறிந்தால், இன்றே விளக்கெரியும் இங்கு**' என்றிருந்த கருத்து செட்டியாரவர்கள் உள்ளத்தில் எத்தகைய உணர்ச்சியைத் தந்ததோ என வியந்தபடி அன்று பகலே தமது நன்றியறிதலைக் காட்டும் கீழ்க்கண்ட வெண்பாவை எழுதித் தலைவரவர்க்கு அனுப்பிவைத்தார்.

காலன் றனைக்கடிந்த கம்பன் பலபகற்பின்
னேலவா ரின்குழலிக் கீந்தனனே—சீலன்

திருநகரின் றந்தை தெருவிளக்கைத் தந்தா
னொருநொடியி லன்பவர்க்கே யோது.

ஓரே இரவில் அதுவும் பத்துமணிக்குமேல், விளக்குக் கம்பம் ஒன்றை நாட்டி, அதன் உச்சியில் விளக்கைப் பொருத்தி, அதை எரியவும் வைத்த நகரமன்றத் தலைவரின் பொதுநல நோக்கும், அத்தகைய பெருஞ்செயலைச் சாதித்த மணிமொழியாரின் வெண்பாவும், அத்தகைய பேராற்றல் படைத்த, பாவினை இயற்றவல்ல அவருடைய செந்தமிழ்ப் புலமையும், எண்ணும்போதெல்லாம் சிந்தை அணு ஒவ்வொன்றையும் சிலிர்க்க வைக்கும் உண்மைகளாகும்.

1935 ஆம் ஆண்டு ஜனவரிமாத "செங்குந்த மித்திரன்" தலையங்கத்தில் பொங்கற் புதுநாளின் சிறுப்புக்களை எழுதிய மணிமொழியார், அதன் இறுதியில் இயற்றித் தந்திருந்த கீழ்க்கண்ட பொங்கல் வாழ்த்துப் பாடலும் சிறப்பாக அமைந்திருப்பதைக் காண்க :—

பொங்கலோ பொங்கல், பொங்கலோ பொங்கல் !
எங்கும் இன்பம் இனிதே பொங்குக !
மங்கலம் பெருகுக ; மழைவளம் சுரக்குக !
செந்தமிழ்த் தாய்மொழி செழுமையின் உயர்க !
கைத்தொழில் வளர்க ; கனகம் நிறைக !
இத்தரை எங்கணும் இன்றமிழ் மக்கள்
ஓங்குக ! செல்வம் உயர்க ! சீர்த்தி
பாங்குறப் பொலிக ! பல்வளந் தோன்றுக !
சந்தா தார்கள் தனிச்சிறப் புறுக !
சிந்தை யருள்கூர் போஷகர் செழிக்க !
பெரும்போ ஷகர்கள் பெருமையும் பேறும்
திருவும் தாங்கி தினமும் தழைக்க !
கட்டுரை பலப்பல கவினுற வழங்கும்
இட்டர்கள் நலமெலாம் ஏந்தி வாழ்கென
அங்கங் குளிர வாழ்த்தி
பொங்கலோ பொங்கல் என்றுபொங் குவனே !

### எழுத்தாற்றலிற் சிறந்த ஏந்தல் :—

சீரிய கருத்துக்கள் அமைந்த சிறந்த எழுத்தோவியங்கள் தீட்டுவதில் வல்லமை மிக்கவராகத் திகழும் மணிமொழியார், அவற்றை மிக விரைவாக எழுதும் ஆற்றலும் இயற்கையாகவே அமையப் பெற்றுள்ளார். அவர் தன் கட்டுரைகளை மடமடவென எழுதுவார். அச்சுக்கூடத்தின் முன் அறையில் அமர்ந்து அவர் வேகமாக எழுதிக் கொண்டே இருக்க, பத்து மணித்துளிகளுக்கு ஒரு முறை, அச்சுக்கூடத்தின் பின் அறையிலிருந்து எழுத்துக் கோப்பவர் ஒருவர் அவரிடம் வந்து எழுதப்பட்ட தாள்களை வாங்கிச் சென்று அச்சுக் கோத்துக்கொண்டிருப்பார். எழுதிய கட்டுரையைத் திரும்பவும் ஒரு முறை படித்துப் பார்த்துத் திருத்துவதற்கோ, அடித்து எழுதுவதற்கோ வாய்ப்பளிக்காத நிலை அது. அவ்வாறு அடித்தும் திருத்தியும் எழுதவேண்டிய அவசியமும் அவருடைய கட்டுரைகளுக்கு இருப்பதில்லை. முதலில் எழுதும்போதே அவை தெளிவும் எழிலும் திட்பமும் நுட்பமும் வாய்ந்தனவாக அமைந்துவிடும்.

இன்ன துண்டறிக்கையை இன்ன முறையில் அச்சிட்டுத் தரவேண்டும்—அதற்கு எவ்வளவு 'சார்ஜ்' என்று ஒருவர் கேட்பார். அடுத்த மாதம் முதல் ஞாயிற்றுக் கிழமை எங்கள் ஊரில் பொதுக் கூட்டம்—தாங்கள் தவருமல் வந்து கலந்துகொள்ள வேண்டும் என்று வேருெருவர் தேதி கேட்க வந்திருப்பார். இந்த 'பாரம்' 'ரெடி' செய்திருப்பது சரிதானு—கொஞ்சம் பார்த்துச் சொல்லுங்கள் என்று அச்சுப் பொறியை இயக்குபவர் ஒரு புறம் வினவுவார். இந்த வகையில் பல்வேறு நிலையினர் வந்து கேட்கும் பல திறக் கேள்விகளுக்கும் விடை சொல்லிக் கொண்டேதான் – அப்படி விடை சொல்லும் பணிக்கு இடையிடையே உள்ள நேரத்தில்தான் மணிமொழியார் தன் தலையங்கங்களை எழுதுவது வழக்கம். எழுதுவதற்கென்று தனியாக ஓர் இடத்தில் அமர்ந்து, அமைதியான

முறையில் சிந்தித்து எழுதுவதற்குரிய ஓய்வு அவருக்குக் கிடைப்பதே கிடையாது. பலரும் வந்து இடையிடையே 'தொந்தரவு' செய்யும் சூழ்நிலையில்தான் அவருடைய கட்டுரைகள் தீட்டப்படும் என்றாலும் அந்தக் காரணத்தால் அவற்றின் அமைப்புமுறையோ, நடையழகோ, கருத்துச் செறிவோ, சிறிதளவும் பாதிக்கப்படமாட்டா.

காஞ்சீபுரத்தில் அவர் தமிழாசிரியராக இருந்த காலத்தில் ஒரு நாள் மாலை, வாலாஜாபாத் இந்துமத பாடசாலையின் செயலாளரும் மணிமொழியாரின் கெழுதகை நண்பருமாகிய திருவாளர் வா. தி. மாசிலாமணியார் அவர்கள் மணிமொழியாரிடம் வந்து, மறுநாள் காலை வாலாஜாபாத் பள்ளிக்கூடத்தைப் பார்வையிட்டு மகிழ்வதற்காகப் பதின்மூன்று அறிஞர் பெருமக்கள் வர இருப்பதாகவும், அவர்கள் அத்தனைப் பேருக்கும் மணிமொழியார் தனித்தனியே 13 வரவேற்பு இதழ்களை அன்றைய இரவே எழுதித் தர வேண்டுமென்றும், அவர் தன் வீட்டில் இருந்து எழுதிக்கொண்டே இருந்தால் ஒவ்வோர் தாள் எழுதி முடிக்கப்பட்டதும் குமரன் அச்சுக்கூடத்திலிருந்து ஓர் ஆள் வந்து அவற்றைப் பெற்றுச் சென்றபடி இருப்பார் என்றும், அன்று இரவே அத்தனையும் அச்சாகி முடிய வேண்டும் என்றும், மணிமொழியார் கண் விழித்திருந்து 13 வரவேற்பிதழ்களையும் எப்படியாவது எழுதி முடித்தால், அவை அத்தனையையும் அன்று இரவே அச்சிட்டு முடிக்க அச்சக உரிமையாளர் ஒப்புக்கொண்டிருப்பதாகவும் தெரிவித்தார். வாலாஜாபாத் பாடசாலையின்பால் பேரன்பு கொண்ட மணிமொழியார், இந்த வேண்டுகோளை ஏற்றுக்கொண்டு, அன்றைய இரவே 13 வரவேற்புத் தாள்களையும் எழுதி முடித்தார். இவ்வளவு விரைவிலும், ஒன்றன்பின் ஒன்றாக உடனடியாகவும் எழுதப்பட்டிருந்தபோதிலும், அந்தத் தாள்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகைச் சிறப்புடையதாகத் தனி எழிலுடன் திகழ்ந்தது என்பதை வா. தி. மாசிலாமணியார் அடிக்கடி சொல்லி மகிழ்வது

வழக்கம். ஒரே இரவில் 13 வரவேற்புத் தாள்கள் எழுதுவது எவ்வளவு செயற்கரிய செயல் என்பதை எழுத்தாளர்களாக இருப்பவர்களே நன்குணர முடியும்.

## *இனிய குடும்பமும் சிறந்த மக்களும் :—*

காஞ்சிபுரத்தில் மணிமொழியார் அறுவை வணிகராக இருந்தபோது 1923-ல் அவருக்குத் திருமணமாயிற்று. அவருடைய தந்தையார் பிறந்த ஊரும், காஞ்சியிலிருந்து 13 கல் தொலேவில் சேயாற்றின் கரையில் உள்ளதுமாகிய பெருநகர் என்னும் சிற்றூரில் அனைவரும் பாராட்டும் முறையில் வாழ்ந்து வந்த வி. ஆ. கனகசபை முதலியார் என்னும் நல்லறச் செல்வரின் இரண்டாவது மகளாகிய **அபிராமி அம்மை** என்னும் நங்கையே மணிமொழியாரின் வாழ்க்கைத் துணைவியார் ஆவர். குடும்பத்தைச் சிறந்த முறையில் நடத்திச் செல்லும் திறமையும், செல்விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருக்கும் தமிழ்ப் பண்பும், வரவுக்கேற்பச் செலவுசெய்யும் சிக்கன உணர்ச்சியும் ஒருங்கே அமையப்பெற்ற அந்த அம்மையார் பொதுநலப் பணிகளிலும் ஈடுபட்டிருக்கிறார்கள். 3-9-1939-ல் திருச்சி திருவானைக்காவில் நடைபெற்ற தென்னிந்திய செங்குந்தர் 3-வது மாதர் மாநாட்டின் திறப்பாளராக இருந்து அம் மாநாட்டை வெற்றியுற நடத்தி வைத்தவர்கள் அந்த அம்மையார் என்பது இங்கே மகிழ்ச்சியுடன் நினைவு கூரத்தக்க நற்செய்தியாகும்.

மணிமொழியாருக்குப் பிறந்த மக்கள் ஐவர் ஆவர். இவர்களுள் முதலாவதாகப் பிறந்தவரே, ஆற்றல் மிக்க எழுத்தாளராகவும், சிறப்பு மிக்க பேச்சாளராகவும், உயர்ந்த பண்புகளின் உறைவிடமாகவும் நாட்டு மக்கள் போற்ற வாழும் திருவாளர் **மா. இளஞ்செழியன் எம். ஏ.** அவர்கள் ஆகும். இளஞ்செழியனார், தம் தந்தை மணிமொழியாரோடு கூட்டாசிரியராக இருந்து "போர்வாள்" இதழைப் பீடும் பெருமையும் மிகுந்த முறையில் நடத்தி

யதை மக்கள் மன்றம் நன்கறியும். அவர் இயற்றிய பல அரிய நூல்களுள் **தமிழன் தொடுத்த போர்** என்னும் உரைநடைக் காவியம் மிகச் சிறப்பான ஒன்ருகும். "இந் நூலின் மூலம் தமிழருக்கும் தமிழ் மொழிக்கும் நண்பர் இளஞ்செழியன் நற்றெண்டு ஆற்றியுள்ளார். என் பாராட்டுதல். தமிழரின் இல்லந்தோறும் இந்நூலிருந்து, உள்ளந்தோறும் உணர்ச்சியை ஊட்டி, நாட்டின்மீது பூட்டப்பட்டுள்ள தளைகளை அறுத்தெறிதற்கான அறப் போர் புரியும் ஆற்றலைத் தரும்—நிச்சயம்! இளஞ்செழிய னுடைய நற்றெண்டு நற்பயனைத் தரும், என்று கூறத் தேவையில்லை. தமிழகம் தழைக்க இந்த ஏடு பெரிதும் பயன்படும்" என்று அறிஞர் அண்ணு அவர்களாலேயே பாராட்டிப் புகழப்பட்ட பெருமை படைத்தது இந்த நூல். 1938—39-ஆம் ஆண்டுகளில் தமிழகத்தில் நடை பெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் வரலாற்றை இனிமையும் பயனும் மிகுந்த முறையில் எடுத்து விளக்கும் எழில்மிகு புத்தகம் இது.

மணிமொழியாருக்குக் கடைசிக் குழந்தையாகப் பிறந்த திருமகளார்—**தமிழ்ச் செல்வி** என்னும் பெய ருடையார்—கல்வி கற்பதில் பேரூக்கமுடையவராகத் திகழ்ந்து அண்மையில்தான் எஸ். எஸ். எல் சி. பொதுத் தேர்வு எழுதியிருக்கிருர். தன் தந்தையாரைப் போலவே தமிழ்ச் செல்வியாரும் தமிழ்ப் பாடத்தில் ஒவ்வோராண் டிலும் தன் வகுப்பில் முதல் மாணவியாகத் திகழ்ந்து வரு கிருர் என்பது பெருமகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்.

திருவாளர் இளஞ்செழியனுக்கும் காஞ்சீபுரம் நூல் வணிகர் திருவாளர் குப்புசாமி முதலியார் அவர்களின் மூத்த மகள் திருமிகு சுந்தராம்பாளுக்கும் திருமணம், நாவ லர் நெடுஞ்செழியன் அவர்களுடைய சீரிய தலைமையில், சென்னை கோகலே மன்றத்தில் 12-9-1951 அன்று, பல்லா யிரம் மக்களின் வாழ்த்துக்களோடு மிகச் சிறப்பாக நடை பெற்றது.

திருவாளர் நடராசனுக்கும் பூட்டுத்தாக்கு திருவாளர் கண்ணப்ப முதலியார் அவர்களுடைய மூத்த மகள் திரு மிகு பவுனம்பாளுக்கும் திருமணம் 1958 ஜூன் திங்கள் 6-ம் நாள், வேலூரை அடுத்த பூட்டுத்தாக்கு கிராமத்தில் எழில்மிகு முறையில் நடைபெற்றது. இந்தத் திருமணத் திற்கும் நாவலர் நெடுஞ்செழியன் அவர்களே தலைமை தாங்கி நடத்தித் தந்தார்கள். இரண்டு திருமணங்களிலும் அறிஞர் அண்ணா அவர்கள் கலந்துகொண்டு சிறந்த சொற் பொழிவாற்றி மணமக்களை வாழ்த்தி யிருக்கிறார்கள்.

1933-ஆம் ஆண்டு வரையில் காஞ்சிபுரத்தில் வாழ்ந்து வந்த மணிமொழியார் அவர்கள், அந்த ஆண்டின் இறுதியி லிருந்து சென்னை நகரில் வாழத் தொடங்கி, இன்று வரை சென்னையிலேயே வாழ்ந்து வருகிறார்கள் என்பதும் இந்த இடத்தில் குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

*மணி விழாக் கொள்ளும் மாண்புடைத் தலைவர் :-*

அறுபது ஆண்டுகள் சிறப்பாக வாழ்ந்து மணி விழாக் கொள்ளும் அரிய வாய்ப்பு மிகச் சிலருக்கே கிடைக்கிறது. அத்தகைய பெறற்கரிய பேற்றைப் பெற்றுள்ள பெருந் தகையாளர் மணிமொழியார், பிறர்க்கு உதவி செய்வதில் பேரார்வம் படைத்தவர்; ஆயிரம் துயரங்கள் அடுக்கடுக் காக வந்தாலும் ஒரு சிறிதும் கலங்காத உள்ள உறுதி வாய்ந்தவர்; விடியற்காலை 5 மணிமுதல் இரவு 11 மணி வரையில் சலிக்காது உழைக்கும் திறமை படைத்தவர்: 'தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு ஒன்று வேளாண்மை செய்தற் பொருட்டு' என்னும் திருக்குற ளின் செவ்விய கருத்தை நடைமுறையிற் காட்டுபவர்; செடி கொடி மரங்கள் வளர்த்தல்—கீரைப் பாத்திகள் அமைத்தல்—கிணற்றிலிருந்து நீர் பாய்ச்சல் முதலிய தோட்ட வேலைகளில் பேரார்வம் படைத்தவர்; எல்லோ ரிடமும் புன்முறுவல் பூத்த முகத்துடன் மிக இனிமையா கப் பழகும் இயல்புடையவர்; சிறிதும் பழுது கூற முடி

யாத மிக்க தூய வாழ்வு வாழ்பவர் ; 'ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்' என்னும் திருக்குறள் மொழியையே தன் வாழ்வின் வழிகாட்டியாகக் கொண்டு அப்பழுக்கற்ற முறையில் வாழ்ந்து வருபவர்; பல்வேறு வகையான சமுதாயத் தொண்டுகளைச் சென்ற நாற்பதாண்டுகளாக ஆற்றியுள்ளார் என்ற போதிலும் இப்போதும் சலிப்புருமல் தொடர்ந்து தொண்டாற்றிவரும் பேருள்ளம் படைத்தவர்.

ஆம்! இருபதாம் நூற்ருண்டில் தமிழ் நாட்டிற்குக் கிடைத்துள்ள கிடைத்தற்கரிய செல்வம் மணிமொழியார். அரும்பெரும் பணிகள் புரிந்துள்ள அந்த அறிஞர் பெருமகனுருக்கு மணிவிழா நடப்பதறிந்து மட்டிலா மகிழ்ச்சி எய்தியுள்ளது செந்தமிழ்த் திருநாடு. அதோ பாருங்கள்: ஆயிரமாயிரம் தமிழ் மக்கள், அணி அணியாகத் திரண்டு நின்று, அகமும் முகமும் மலர, 'வாழ்க மணிமொழியார் பன்னெடுங்காலம்—வளர்க அவர் புகழ் எட்டுத் திசையிலும்' என்று ஏற்றிப் போற்றிப் பாராட்டி மகிழ்கிருர்கள். அந்த மகிழ்ச்சியில் நாமும் கலந்துகொள்ள வேண்டாமா? சின்னஞ்சிறு வயதிலிருந்து செந்தமிழ் மக்களின் முன்னேற்றத்திற்காக ஓயாமற் பணியாற்றியுள்ள அந்த உத்தமத் தலைவரை நாமும் மனம்கனிய வாழ்த்தி மகிழ வேண்டாமா? வாருங்கள் செல்வோம்.

வாழ்க, மணிமொழியார் வளமெலாம் பெற்று! ஏன்? தமிழகம் தழைக்க! திராவிடம் சிறக்க!!

# அறிவுக்கு உணவளிக்கும் அரிய நூல்கள்

★

**அறிஞர் அண்ணுதுரை**

| | |
|---|---|
| பார்வதி பி. ஏ. | 3—00 |
| ரங்கோன் ராதா | 2—50 |

**புலவர் குழந்தை**

| | |
|---|---|
| தொல்காப்பியர் காலத் தமிழர் | 5—00 |
| யாப்பதிகாரம் | 3—00 |

**மயிலை சீனி வேங்கடசாமி**

| | |
|---|---|
| தமிழர் வளர்த்த அழகுக் கலைகள் | 3—50 |
| மறைந்துபோன தமிழ் நூல்கள் | 6—00 |

**மா. சு. சம்பந்தன்**

| | |
|---|---|
| அச்சுக் கலை | 5—00 |
| திருச்சி விசுவநாதம் | 1—25 |
| சென்னை மாநகர் | 2—00 |

**பகவதி ஜயராமன்**

| | |
|---|---|
| திருக்குறள் வழங்கும் செய்தி | 2—00 |

★

# பாரி நிலையம்

**59, பிராட்வே : : சென்னை-1.**

## எங்களின்
## சிறந்த வெளியீடுகள்

★

### டாக்டர் ச. சோமசுந்தர பாரதியார்

| | |
|---|---|
| தசரதன் குறையும் கைகேயி நிறையும் | 3 : 00 |
| திருவள்ளுவர் | 1 : 50 |
| சேரர் தாயமுறை | 1 : 50 |

### பேராசிரியர் முத்து இராசாக்கண்ணனூர்

| | |
|---|---|
| இன்பத் தமிழ் | 5 : 00 |
| தமிழ் எங்கள் உயிர் | 4 : 00 |
| இலக்கியத் தமிழ் | 5 : 00 |
| வான்வழி வையை | 2 : 00 |
| இலக்கிய நாடகங்கள் | 2 : 00 |

★

## வள்ளுவர் பண்ணை

137, பிராட்வே

சென்னை-1.

## வேலையில் மகிழ்ச்சி—மூளைக்கும் குளிர்ச்சி
## காலையும் மாலையும் காப்பியைக் குடி

—★—


காப்பிக் கொட்டை மிகவும் நல்ல முறையில் அரைத்துக் கொடுக்கப்படும். மற்றும் வீட்டிற்குத் தேவையான பொருள்கள் மிகவும் திருப்திகரமாக அரைத்துக் கொடுக்கப்படும்.

—★—

**புஷ்பாஸ் காபி** உயர்தரமானது

ஸ்ரீ புஷ்பா மில்ஸ்., 234. ராசப்ப செட்டித் தெரு, மதராஸ்-3.

சோர்வில்லாத படிப்புக்கு
சுறு சுறுப்பை அளிப்பது.




ஸ்டுடென்ஸ்

REGD. No. 1515
ஸ்டுடென்ஸ்
STUDENTS
பாக்குத்தூள்
NUT

பாக்குத்தூள்

விவரங்களுக்கு:

P. R. வடிவேல் முதலியார் & சன்ஸ்

ஸ்டுடன்ஸ் பாக்குத்தூள் உரிமையாளர்கள்

28. முல்லா சாயிப் தெரு, சென்னை—1.

Venkatesan Press, Madras—1.